# கலைச் செல்வி

## 1978

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை
அவர்களுக்குச் சமர்ப்பணம்

அரசினர் ஆசிரியர் கலாசாலை,
மட்டக்களப்பு.

රජයේ ගුරු විද්‍යාලය,
මඩකලපුව.

**GOVT. TEACHERS' COLLEGE,**
**BATTICALOA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைச் செல்வி

334438

அரசினர் ஆசிரியர் கலாசாலை,
மட்டக்களப்பு.

— 1978 —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வாழ்த்து

1. உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகுஇ லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர்; அன்னவர்க் கேசரண் நாங்களே.

2. கூடிக் கூடி உன்னடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா
வாடி வாடி வழியற்றேன்
வற்றன் மரம்போல் நிற்பேனோ
ஊடி யூடி உடையாயொடு
கலந்துள் ளுருகிப் பெருகிநெக்(கு)
ஆடி யாடி யானந்தம்
அதுவேயாக அருள் கலந்தே.

3. நின்றாலு மிருந்தாலுங் கிடந்தாலு நடந்தாலும்
மென்றாலுந் துயின்றாலும் விழித்தாலு மிமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாத மொருகாலும் மறவாமை
குன்றாத வுணர்வுடையார் தொண்டராங்குணமிக்கார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மட்டக் களப்பா சிரிய கலாசாலைப்
பெட்டகம் ஆயகலைச் செல்விதனை - எட்டுத்
திசையும் புகழ்பெரிய தம்பிப் புலவர்மணிக்(கு)
இசையச் சமர்ப்பித்தோ மின்று"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலவர்மணி

# ஏ. பெரியதம்பிப்பிள்ளை

தோற்றம் : 8-1-1899

மறைவு : 02-11-1978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வாழ்த்துப்பா

**பல்லவி**

ஒருதனி முதல்தரு மாதமிழ் வாழ்க
ஓதும் நல் மாணவர் வாழ்க.

**சரணங்கள்**

ஸ்ரீலங்கா தேவிதரு மட்டுமா நகரில்
மாபெரும் ஆசிரியர் மன்றம்
ஆனநல் ஞான ஒளியினை உதவும்
அரசினர் நீடூழி வாழ்க
அறிவினை யாமறிவோமே
அறிவதும் பிறர்க்காமே
அழகுறப் பயின்றிடுவோமே - ஜெயமே
ஜெயமே, ஜெயமே, ஜெய ஜெய ஜெய ஜெயமே
ஓதும் நல் மாணவர் வாழ்க.

உண்மையும் நன்மையழகாகிய நோக்கமும்
உள்ளதோர் நல்லவராவோம்
திடகாத்திர தேகமும் காத்திர மனமும்
காணும் நல் வீரர்களாவோம்
கல்வியின் மூலமும் நாமே
கடவுளை அடைந்திடுவோமே
களங்கமில் தொண்டு செய்வோமே - ஜெயமே
ஜெயமே, ஜெயமே, ஜெய ஜெய ஜெய ஜெயமே
ஓதும் நல் மாணவர் வாழ்க.

நம் மாணவ மாணவி பரிசுத்த தன்மை
மதித்து நல் அறநெறி புகழ்வோம்
சாதனை போதனை யாவிலும் சுத்த சன்
மார்க்க நல் ஆசிரியராவோம்
ஆதியில் மானிடர் ஒன்றே
ஆண்டவன் என்பது ஒன்றே
ஓருயிர் போலினி வாழ்வோம் - ஜெயமே
ஜெயமே, ஜெயமே, ஜெய ஜெய ஜெய ஜெயமே
ஓதும் நல் மாணவர் வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாலைப் பணியிலே......

அதிபர் :-

மேஜர் சு. திருமலிங்கம் B. A. (Cey.) Dip-in-Ed.

விரிவுரையாளர்கள் :-

திரு. அ. வ. பாலசுப்பிரமணியம்,
First Class English Secondary Trained (Science)
B. A. (Cey.) S. S. C. (Sinhala).

திரு. கோ. கோணேசபிள்ளை,
First Class English Secondary. Trained (Maths). B. Ed.
Part II (Queensland). Certificate in Teaching
of Maths (Macquarie).

திரு. ஆ. சுந்தரலிங்கம்,
First Class English Secondary Trained (Agriculture)
Dip-in Agriculture (Cey).

ஜனாப் எம். எஸ். ஏ. அஸீஸ்,
Dip-in-Art, Drawing Teachers Certificate.

பகுதி நேரப் போதனாசிரியர்கள் :-

திருமதி ஜே. பி. ஜேசுதாசன், B. T. Dip-in-Phy. Ed. (Madras).
திரு. பி. பிறைசூடி, First Class Trained.
திருமதி எஸ். ஜீ. கனகசபை, Sangeetha Poosanam (Annamalai).
செல்வி இ. செல்லத்துரை, Dip-in-Baratha Natiyam
Nattuvangam (adayar).
வண. பிதா ஆர். எஸ். லோப்பு அடிகள், Mip. Ap.
திரு. எஸ். அன்றியாஸ், Special Trained First Class.
திரு. எஸ். டி. தங்கத்துரை, Evangelist.
செல்வி தே. சிவசுப்பிரமணியம், Special Trained
First Class (Maths).
திரு. என். கதிர்காமநாதன், Special Trained First Class.
திருமதி ப. சங்கரப்பிள்ளை, First Class Trained.

விடுதி மேற்பார்வையாளர் :-

திரு. சி. சா. இராசதுரை.

உதவி விடுதி மேற்பார்வையாளர் :-

செல்வி லி. ஜோ. ஜெ. சு. இராசையா.

எழுது வினைஞர் :-

திரு. வீ. தட்சணாமூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபரும் விரிவுரையாளர்களும்



இடமிருந்து வலம்:

திரு. சு. தருமலிங்கம் (அதிபர்) திரு. சி. சா. இராசதுரை. திரு. கோ. கோணேசபிள்ளை, செல்வி. வி. ஜோ. ஜெ. சு. இராசையா. செல்வி. இ. செல்லத்துரை, திருமதி ப. சங்கரப்பிள்ளை, செல்வி. ஜே. ஜே. ஸ்டீபன்· திருமதி. எஸ். ஜீ. கனகசபை, செல்வி. தே. சிவசுப்பிரமணியம், திரு. அ. வ. பாலசுப்பிரமணியம், திரு. எஸ். டி. தங்கத்துரை, ஜனாப். எம். எஸ். ஏ. அஸீஸ், திரு. ஆ. சுந்தரலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை

**வித்துவான் பண்டிதர் வி. சீ. கந்தையா** பி. ஓ. எல்.

---

மட்டக்களப்புத் தமிழகம் தந்த மாபெரும் தமிழ்மணியும், தனது வாழ்நாள் முழுவதும் தான் கொண்டிருந்த தமிழ்ப் புகழால் ''பண்டிதர்'' என்ற பொதுப் பேரைத் தனக்கே ஆக்கிக் கொண்டவரும், புலவர்மணிகள் பலரும் போற்றும் புலவர்மணியுமான பெரியதம்பிப்பிள்ளை இந்நாடு செய்த தவப்பயனல் தோன்றிய ஒரு பேரறிஞர். ஈடிணையற்ற தமிழ்ப்பெரும் புலவர்; வெண்பாவிற் புகழேந்தி போன்றவர், விருத்தமெனும் ஒண்பாவிற் கம்பனை நிகழ்ந்தவர்; கண்டனம்யாத்தலில் காளமேகத்தை ஒத்தவர். சொல்லின் செல்வர். பொருள்வளம் கனிந்த சொற்பொழிவுகளை ஆற்றுவதில் தனக்குத்தானே நிகராக மிளிர்ந்த தமிழ்ப்பேரறிஞர். தான் பிறந்த நாட்டிற்குத் தன்னலே புகழ் தேடித்தந்த பேராசான். அண்மையில் நேர்ந்த அன்னரது பேரிழப்பினை மட்டக்களப்பு மண்மகளாற் பொறுத்துக்கொள்ளவே முடியாதுபோயிற்று. அவளின் நெடுமூச்சாகிய நெருப்புக் காற்றே, கொடும் புயலாக மாறி வீசிற்றென்று இளம் கவிஞர்கள் பாடி அழுது புலம்பியிருப்பதையும் அறிவோம்.

எவனொருவனது பிரிவு, அகல்வு அல்லது இழப்பு என்பது சமுதாயத்தில் எதிரொலிக்கின்றதோ அல்லது சமுகங்களில் எதிர்த்தாக்கமாகப் பிரதிபலிக்கின்றதோ அவனே பெருமக்களின் வரிசையிற் சேர்க்கப்படத்தக்கவனுவான். இவ்வுண்மை ஆன்றோர் கண்ட முடிபு. அண்மைக் காலத்தில் நாம் அறிந்த அவ்வாறுன ஒரு கண்கண்ட தமிழ்ப்பெருமகன் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை எனலாம்.

மட்டக்களப்பிலே உள்ள முருகன் கோவில் கொண்டிருக்கும் பதிகளுள் ஒன்றுன மண்டூர்தான் புலவர்மணியவர்கள் பிறந்த மண்ணகமுமாகும். மண்டூர் முருகன் வளர்த்த தமிழ்க் குழந்தை அவர். ''முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் செவ்வேள்'' வளர்த்த பெரியதம்பி.

இப்பெரியார் தென்தமிழ்நாடு, யாழ்ப்பாணம், திருக்கோணமலை, கண்டி ஆகிய பெரும் பகுதிகளில் வாழ்ந்தபோது பெற்றுக்கொண்ட பேரறிஞர்களது கூட்டம், பெரிய சங்கங்களின் தொடர்பு, பேருரை நிகழ்ச்சிகள் என்பவற்றை நாம் எண்ணும்போது இவர்காலத்து வாழ்ந்த ஏனைய தமிழர்களுக்குக் கிடையாத பல அரிய பெரும்பேறுகளை வாய்க்கப்பெற்றிருந்தவர் புலவர்மணி என்பதை நாம் அறிந்து பெருமைப்படமுடியும்.

பகவத்கீதை மொழிபெயர்ப்புப் பல மொழிகளிலும் வெளிவந்துள்ளது. தமிழில் பலர் மொழிபெயர்த்துள்ளனர். பகவத்கீதை வெண்பா என்ற பெயரிலே வேறு மொழிபெயர்ப்புக்கூட உண்டு. எனினும், புகழேந்தியாரையும் மிஞ்சிய புகழாளரான பெரியதம்பியாரின் கனிவான இனிய வெண்பா நடையிலமைந்த மொழிபெயர்ப்பின் சிறப்பை, ஒப்புநோக்கத்தால் அறிஞர் என்று இன்புறுகிருர்கள். எமது எழுத்து வல்லமையாலும், கவிதைப் புலமையாலும் கட்டுரை (பேச்சு)ச் சிறப்பாலும், வெளியீட்டுப் பெருமையாலும் தமது இலக்கியப் பணிகளாலும், அறிஞர் பலரின் பாராட்டாலும், தமது சிறந்த ஆசிரியத் தொழிலாலும், எல்லா மக்கள் மனத்தகத்து நல்லிடம் பெற்று மட்டக்களப்பின் ஏகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதியானவர் புலவர்மணியார். இவ்வாறன பெரும் பேரறிஞரைக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி உரிய நிலையில் கௌரவிக்கவேண்டும் என்று அறிஞர் உலகு அதற்குரிய சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் வேளையில் காலன் கைப்பட்டது நாம் செய்த தவக் குறைவேயாகும். பொதுமக்களும், அறிஞரும் உண்மையில் நினைந்து வருந்தக்கூடிய ஒன்று இது. தான் முன்கூட்டியே வான்புகும் நிலையை உணர்ந்தோ என்னவோ, புலவர்மணி என்ற பட்டம் ஒன்றே தனக்குப் போதிய பாரத்தை (சிறப்பை, பெருமையை) தந்துள்ளது என மகிழ்ந்து அடக்கத்தோடு புலவர் மணி கூறிவைத்தார்.

இத்தகைய புலவர்மணியவர்களின் அடக்கம், அமைதி, பணிவு ஆகிய அரும் குணங்கள் கல்வி கற்றதோடு மாணவர் குலத்துக்குக் கற்பிக்கவும் விரும்பி அரிய பயிற்சிகளை மேற்கொண்டு முன்னேற்றப் பாதையில் நடைபோட்டுக்கொண்டிருக்கும் ஆசிரியர் குலத்துக்கு முன்மாதிரியாக நிச்சயம் அமைதல்வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். கலாசாலைச் சிறப்புமலர் ஒன்றினை வெளியீடு செய்து அதனை இத் தமிழ்ப் பெருமகனுருக்குச் சமர்ப்பணம் செய்துவைக்க முன்வந்த மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர், விரிவுரையாளர், பயிற்சி ஆசிரியர்கள் ஆகியோரது நல்லுள்ளச் சிறப்பை நான் மனமாரப் பாராட்டுகின்றேன்.

## புலவர்மணி அவர்களைப்பற்றி
## விபுலானந்த அடிகளார் பாடுகிறுர் :-

"பண்டூரு முகிற்குலங்கள் எமதிறைவர்
மருகர் திருப்பதியீதென்ன
விண்டூர மழைபொழியும் சிறப்பதனல்
வளம் மலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரில் உறைமுருகன் மலரடிக்கோர்
திருப்பதிகம் மரபிற் சொற்றுன்
கண்டூரு மினியமொழிப் பெரியதம்பிப்
பிள்ளைஎனும் கலைவல்லோனே"

— மண்டூர்ப்பதிகம் - சிறப்புப்பாயிரம்.

## அடிகளாரைப்பற்றி புலவர்மணியார் :-

"செவிக்கினிதாகச் செந்தமிழுறுத்துமென் தேசியமணிகண்டாய்
சீர்வளர் ஈழத்திருமணி பாரததேசப் பொதுமணிகாண்
புவிக்கினி அலைந்து வறுந்தளிர் கோதிவருந்தேல் போவாயேல்
புத்தமிழ்த்து அணைந்தமுத்தமிழ் இதழுன்பொன்வாய் விருந்திடு
தவிப்பனிநீங்கித் தமிழ்மொழி ஓங்கத் தாய்நாடின்புறவே [வான்
தமிழன் தன்தலை நிமிர்ந்தே உலகசமத்துவம் ஓங்கிடவே
கவிக்கினியான் சுகம் மீன்கெனவினிதே கூவாய்கவிக்குயிலே
கண்மணி விபுலானந்தன் மீள்கெனக் கூவாய் கவின்குயிலே.

— விபுலானந்தர் மீட்சிப்பத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புலவர்மணி - பல்வேறு துறைகளில் :-**

"இலங்கைமணித் திருநாடெங்கள் நாடே - இந்த
இனிய உணர்ச்சிபெற்ருல் இன்பவீடே."

"மாவலிகங்கை எங்கள் வளநதியே - அருள்
மன்னுசிவனொளிபாதம் எங்கள் மலையே
பூவலம்சேர்கதிரை எங்கள் தலமே - இதைப்
போற்றிப் புகழ்ந்தால் வரும் பெரும்நலமே"

— இலங்கைத் தேசிய கீதம்.

"வண்மைத் தமிழ்க்குவரம்பு வடமொழியின்
உண்மைத்தெளிவுக் குரையாணி - கண்மணிஎன்
கண்ணைக்குமார சுவாமிப்புலனடி.
சென்னிக்கு யான்செய் திறப்பு — குருபக்திச் சிறப்பு.

"ஒழுக்கத்துயர்குலமாம் ஓங்குபுக ழுண்டாம்
இழுக்கத்திழிகுலமாம் என்றே - விழுப்பத்து
நூற்குலத்தை எல்லாம் நுணுகியறிந்தாறுமுகன்
மேற்குலத்தனுனன் விரைந்து" — ஒழுக்கத்து உணர்வு.

"கண்ணு அதர்மம் கலந்தாற் கலநடையில்
மண்ணுவாரக்குலத்து மாதரார் - பெண்ணுவார்
நல்லொழுக்கம் தேடுற்ருல் நாட்டிற்குலநலந்தான்
புல்லொழுக்கினுற் கலந்து போம்"

— கருமயோகம், பகவத்கீதை வெண்பா.

"என்பேர் இயல்பினையும் என்யோக சக்தியையும்
அன்பா தெளிவாய் அறிகின்றேன் - என்பால்
நிலைபெற்றயோக நிலைசேர்வான் ஈதில்
இலைசற்றும் ஐயம் இலை"

— பக்தியோகம், பகவத்கீதை வெண்பா,

"பத்தி சிரத்தையுடன் பாரா முகமின்றிப்
புத்திபண்ணிக் கீதைப் பொருள்கேட்கப் - பெற்ரேனும்
துன்பம் துறந்து சுகபோக பூமிகளில்
இன்பம் சுகிப்பான் இனிது"

— ஞானயோகம், பகவத்கீதை வெண்பா.

"தொல்லாசிரியர் மரபுணர்ந்தோர் சொற்பொருள்தேர்
வல்லாரெனது பிழை மன்னிக்க - நல்லார்
தொழும் பகவத்கீதை வெள்ளம் தோய்ந்தே என்னுள்ளம்
அழுந்தியதாற் பாடும் அவா'

— "பணியுமாம் என்றும் பெருமை" -
பகவத்கீதை வெண்பா அவையடக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைச் செல்வம்

**செல்வி சரோஜினி இராமசாமி**
விரிவுரையாளர்,
சமூகவியல் துறை, கொழும்புப் பல்கலைக் கழகம்.

வரும் வருடத்தினைக் குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடுகின்ற நேரத்தில் எங்கள் சிந்தனையினைச் சற்றுக் குழந்தைகளின் பக்கம் திருப்பிப் பார்ப்பது பொருத்தமாகுமென நினைக்கிறேன்.

குழந்தைகள் நாட்டின் எதிர்காலப் பிரஜைகள், நாட்டின் முதுகெலும்பு, வீட்டின் செல்வம் என்றெல்லாம் பலவாறு உயர்வாகச் சொல்லப்படுவதைக் கேட்டிருக்கிறோம். அதனால் எமது நாட்டில்கூட எத்தனை குழந்தைகள் இந்த உயர்ந்த மதிப்பீட்டின் அடிப்படையில் நோக்கப்படுகிறார்கள்? எத்தனை குழந்தைகள் எதிர்காலப் பிரஜைகள் என்ற கருத்தில் வளர்க்கப்படுகிறார்கள்! என்றால் மிகப்பெரிய கேள்விக்குறியே எம்முன் நிற்கிறது.

குழந்தைகள் என்று சொன்னவுடன் அழகான, பண்பான, பலமான குழந்தைகளா எம் கண்முன் வருகிறார்கள். இல்லையே? ஆடைகளற்ற, அழுக்கான, போசாக்கான உணவு இல்லாது மெலிந்து வயிறு பெருத்த, தெருவில் திரியும் குழந்தைகளே அனேகமாக எம் மனதில் தோன்றுகிறார்கள். கிண்ணத்தில் பால் அன்னம் வைத்து ஊட்டப்படவேண்டியவர்களெல்லாம் எச்சில் இலைகளைப் பொறுக்கி உண்கின்றதைப் பார்க்கின்றபோது எதிர்கால மன்னர்களின் நிலை என்னவாக உள்ளது என்ற கவலை துளிர் விடுகிறது.

ஏன் இந்த நிலை? குழந்தைகள் இவ்வளவு கவனமாக விடப்படுவதற்கு என்ன காரணம்? குழந்தைகளைப்பற்றிப் பெற்றோரும், மற்றோரும் கொண்டிருந்த மதிப்பீடுகள் நிலை குலைந்தமைக்கு என்ன காரணம்? இதுவே பெருங் கேள்விக்குறியாக மனதில் உறுத்துகிறது. இதற்கு முக்கியமான காரணம் நாட்டின் பொருளாதார நிலை எல்லோரது தேவை கட்டும் நிறைவினைத் தேடும் முறையில் வியாபித்ததாக இல்லை என்றாலும் மக்களது கவனக்குறைவும், ஒத்துழையாமையும்கூட இதற்குக் காரணங்களாக அமையலாம்தானே. குழந்தைகளைப் பெறுகின்றபோது வெறும் உடல் இன்பத்திற்காக எனக் கருதுவதாலும், அவர்கட்கு இலவச மருத்துவம், இலவசக் கல்வி, ஓரளவுக்கு இலவச உணவுகூட அரசாங்கம் தருகிறதுதானே, அதில் வளர்ந்து விட்டுப் போகட்டும் என மக்கள் அபிப்பிராயப்படுவதாலுமா இந்த நிலை குழந்தைகளுக்கு ஏற்பட்டிருக்கிறது என நினைக்கத் தோன்றுகிறது.

அதிக குழந்தைகள் பெற்றுக்கொள்வதற்கான காரணங்களைக் கேட்டால் எமது மக்கள் பல வேறு காரணங்களைக் கூறுவர். சிலர் தாம் விவசாயக் குடும்பத்தினர் அல்லது ஏழைக் குடும்பத்தினர் என்கின்ற இடத்தில் உழைப்புச் சக்திக்கு அதிக குழந்தைகள் பயன்படுகிறதாகக் கூறுவர். ஆனால் தமது வருமானத்தில் அத்தனை குழந்தைகளுக்கும் வயிறார உணவு அளிக்கமுடிகிறதா? இல்லையா! ஏனையவர்களிடம் கையேந்தி நிற்கும் நிலையும், பெற்றோர்களாலும், மற்றோர்களாலும் தவறான வழிகளில் பயன்படுத்தப்பட்டு பணம் சம்பாதிக்கும் நிலையுமே இன்றைய குழந்தைகளுக்கு அளிக்கப்படும் மதிப்பீடு என்றால் எதிர்கால நிலை என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் குடும்பத்திலுள்ள அதிக குழந்தைகளைக் காப்பாற்ற முடியாத நிலையில், தவறான வழியில் அக்குழந்தைகள் சம்பாதிக்க வழி சொல்லிக்கொடுக்க பெற்றோரே காரணமாக நிற்கின்ற இன்றைய நிலையில் பிள்ளைகள் மத்தியில் பொய், களவு, ஏமாற்றுதல், புரட்டு, அலட்சியம். பயமின்மை போன்றன வளர்வதற்குத்தானே இடமளிக்கப்படுகிறது. இது எமது நாட்டின் நாளைய நிலைக்கு நல்லதா?

குழந்தைகள் எதிர்காலத்தில் தம்மைப் பாதுகாப்பதற்கு இருக்கவேண்டுமென்பதற்காக அதிக பிள்ளைகளைப் பெறுவதாக சிலர் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். ஆனால் பெற்றுவிட்டால் மட்டும் போதுமா, அவர்களை நல்ல முறையில் பேணி வளர்க்காவிட்டால் உங்களை எதிர்காலத்தில் அவை எவ்வாறு பாதுகாக்க முடியும்? பல பிள்ளைகளைப் பெற்று அவை எதுவுமே உங்களின் எதிர்காலத்தில் உதவ முடியாத நிலை ஏற்படுவதிலும் பார்க்க ஒன்றிரண்டு திடகாத்திரமான, நல்ல குணமுள்ள, அறிவுள்ள பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பது உங்களுக்கும் நல்லது, நாட்டிற்கும் நல்லது. இல்லையா?

பொதுவாகக் குழந்தைகள் அளவினைக் குறைத்துக்கொள்வதும் இன்றைய குழந்தைகளின் இழி நிலையினைப் போக்குவதற்கு ஒரு வழியாக இருக்க முடியும் எனப்படுகிறது. அதனால் கட்டுப்பாடு என வந்தவுடனேயே பல வேறு எதிர்ப்புகள் முளைத்துவிடுகின்றன. முதன்முதலில் பிரதானமாக இனவலிமை குறைந்துவிடும் என ஒவ்வொரு இனத்தவரும் பயப்படுவதே இந்த 'கட்டுப்பாடு' என்பதற்குப் பெரும்பாலானவர் கட்டுப்படாமைக்கு மறைமுகமான காரணம் என்பது விளங்குகிறது. ஆனால் இனப் பலத்திற்காக என்ற ஒரே காரணத்தினை வைத்து குழந்தைகளைக் கணக்கற்றுப் பெறுவதால் அவர்களைச் சரியான முறையில் பேணமுடியாமல், அவர்கள் சீர்குலைந்து போவதைவிட அவர்களால் உங்களுக்கு என்ன லாபம் ஏற்படப்போகின்றது. எனவே பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் போசாக்கான, கல்வியறிவுள்ள, ஒழுக்கமுள்ள குழந்தையாக இருந்தாலே அது உங்களின் இனத்திற்கு வலிமை தேடித் தருமே! ஏன் பொதுமக்கள் எவரும் இந்தக் கோணத்தில் இதனை அணுகிப் பார்க்க மறந்துவிட்டனர்?

பெற்றோர்களே! இந்தப் புனிதமான, குழந்தைகள் ஆண்டிலே நீங்கள் எல்லோருமே புதிய நோக்கினைக் கொள்ளுங்கள். குழந்தைகள் இன்று பெற்றுள்ள இழிநிலை தொடர்ந்தும் இல்லாமல் இருப்பதற்கு இந்த ஆண்டில் திடசங்கல்பம் பூணுங்கள். நீங்கள் அனாவசியமாக ஒரு குழந்தையேனும் பெற்று இந்த நாட்டிற்குச் சுமையாக இருக்கமாட்டேன் என உறுதியெடுங்கள். உண்மையிலேயே, நீங்கள் உங்கள் கவனயீனத்தால் குழந்தைகளைச் சிறப்பாக மதிப்பிடாமையால், நாட்டிற்கு உதவியாக இருக்க அல்ல, சுமையாக இருக்கத்தான் குழந்தைகளை அளித்துள்ளீர்கள். எனவே அந்த நிலையினை இனியும் நீடிக்க விடமாட்டோம், என்ற சபதத்தினை இன்று நீங்கள் எடுங்கள்.

உங்கள் எதிர்காலச் சமூகமும் குப்பைத் தொட்டியில் உண்ணும் குழந்தைகளைக் கொண்டிருக்கவேண்டுமா? தெரு நாய்களோடு சண்டை பிடித்து உணவு தேடும் நிலை குழந்தைகளுக்கு அவசியம் தானா? குற்றவாளிகளாக, பிச்சைக்காரராக சமூகத்தில் உலவுவது அவர்களுக்குத் தேவையா? உடையில்லாமல், படிப்பில்லாமல் தெருக்களில் வம்பு செய்துகொண்டும், சண்டை பிடித்துக்கொண்டும் திரியும் நிலை அவர்களுக்கு உரித்துள்ளதா? இல்லையே? அந்த நிலை மாற வேண்டுமாயின் பெற்றோர்களே, அது உங்கள் கையிலும் தங்கியிருக்கிறது. வெறுமனே பெற்றெடுப்பவராக மட்டுமிராது, பேணிக்காக்கும் கடமையும் உங்களுக்கு இருக்கின்றது என்பதனை ஏன் நீங்கள் உணர மறந்துவிடுகிறீர்கள்?

குடும்பத்திற்கு ஒளியூட்ட, நாட்டிற்கு வழிகாட்ட குழந்தைகள் அவசியம் தான். ஆனால் குடும்பத்தைச் சீர்குலைக்க, நாட்டைப் பாழ்படுத்த குழந்தைகள் தேவைதானா? இன்றைய நிலை நீடித்தால் அதுதான் எம் நாடுகளின் நிலையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே சீர்திருத்தத்தின் முதல்படி வீட்டில் ஆரம்பிக்கவேண்டும் என்ற முதுமொழிப்படி தாயும், தந்தையுமே இந்த நற்கருமத்தை ஆரம்பித்து வைக்கவேண்டும். உங்கள் ஆரம்பத்திற்கு இந்த ஆண்டு சுப முகூர்த்தமாக அமையட்டும், எதிர்காலக் குழந்தைகள் 'உண்மையான' பிள்ளைச் செல்வங்களாக உருவெடுக்க இன்றே விழித்தெழுங்கள் பெற்றோர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைக் கோயில்

இன்பத்துக்கதிபதிகள் நாமே கூடி
ஈழத்துக் கடற்கரையிற் கவிதைபாடி
நன்முத்துத் தெறிப்பதென நீரையள்ளி
நீள்கரையிற் கொட்டிவிட நண்டே துள்ளி
பொன்னூடு என்வீடு என்றே பொந்திற்
புதிதாக வளைவைத்தே போகுஞ் சந்தில்
உன்னோடு நானுட நேரமெங்கே
எடுத்தெறியும் அலைகளுக்கு ஓய்வுமெங்கே !

மணல்வீடு அமைத்திடுவர் மைந்தர் எல்லாம்
மண்பாலம் சமைத்திடுவர் வாழ்வை என்றும்
தணலாகக் காய்வதற்கே மூடரல்லர்
தருமநெறி பண்பாட்டிற் சிறுவர் அல்லர்
குணசீலர் வாழ்க்கையிலே குன்றுவீரம்
கொற்றமெனக் குழந்தைகளின் பாங்கே சாரும்
வணங்கால கைகளுந்தான் வணங்குமப்போ
வாழ்வுமுறை தழைத்துயர வழிகள்தப்போ !

அண்ணலிறை அருசுகங்கள் கோடி கோடி
அத்தனையும் இன்ப மலர்க் கூட்டமன்ன
கண்மணிகள் களங்கமில்லாக் கல்விக்கூடம்
காணவரும் கறைபடியா நெஞ்சத்தோர்கள்
எண்ணிடவே இன்பமழை பொங்கும் என்றும்
எதிர்காலம் எமையாளப் போகும் இன்பக்
கண்மணியர்கள் நெஞ்சகத்துக் களவி லென்றும்
கருத்துடனே குருவடிவாய் வாழ்வாய் நெஞ்சே.

**செல்வி சரோஜினி மாரிமுத்து**
(இரண்டாம் வருடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசிரியன்

அன்று சனிக்கிழமை. அதனால் பாடசாலைக்கு விடுமுறை நாளாகும். என்றாலும் கந்தசாமி ஆசிரியர் வழமைப்பிரகாரம் அன்றும் பாடசாலைக்குச் செல்லுகிறார். அங்கு படிப்பிக்கும் ஆசிரியர்களில் அவர் தனிரகம். பொதுவாகக் கூறப் போனால் ஆசிரியர் சமுதாயத்தில் அவர் ஒரு எடுத்துக்காட்டான நல்முத்தாகத் திகழ்ந்தார். பாடசாலை வளவுக்குள் கால் வைக்கிறார்.

அங்கேயும் இங்கேயும் சிதறிப் பலதும் பத்தும் கதைத்துநின்ற மாணவர்கள் அவரைக் கண்டதும் ''வில்லிலிருந்து அம்பு புறப்படுவது''போல் ஒரே இலக்காகத் தங்கள் தங்கள் இருக்கைகளில் போய் அமர்ந்துகொள்கிறார்கள்.

மெதுவாக நடந்து தனது மேசையை நோக்கி முன்னேறுகிறார் கந்தசாமி ஆசிரியர். மாணவர்கள் எதிலும் பராக்கின்றித் தங்கள் பாடங்களிலே கண்ணாகினர். மெதுவாக நடந்துவந்தவர் தனக்கேயுரித்தான அர்த்த திருஷ்டிப் பார்வையை மேயவிட்டவாறு ஒரு மெலிந்த புன்னகையைச் சிந்தியவராய்த் தனது இருக்கையில் அமர்ந்துகொள்கிறார்.

''இன்றென்ன விடுமுறை நாளிலும் பாடசாலையென்று கேட்கிறீர்கள்? ஆமாம். இன்று பாடசாலை இல்லைத்தான். ஆனால் கந்தசாமி ஆசிரியரைப் பொறுத்தவரை, அவர் படிப்பிப்பது வெறும் சம்பளத்துக்காக மட்டுமல்ல. ஆசிரியன் என்பவன் சமுதாயத்தைத் திருத்தும் முதற்தரமான ''கருவி'' என்பதை உணர்ந்தவர். பூரண ஆசிரியனாகத் தன்னை வளர்த்துக்கொண்டவர். ஏதோ கடமைக்குக் காலந்தள்ளும் சில ஆசிரியர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்தான் இந்தக் கந்தசாமி ஆசிரியன். விடுமுறை நாட்களிலும் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்காகத் தன் நேரத்தையே மாணவர்களுக்காகப் பயன்படுத்தித் தன்னையே உரமாக்கிக்கொண்டு வருபவர் அவர்.

வகுப்பு ஆரம்பமாகிறது. அன்றைய பாடத்தை புதிய கல்வித் திட்டத்துக்கு அமைய மாணவர்களின் மனதில் நன்கு பதிந்து செழுமைபெறப் பாடங்களை ஒழுங்காக நடத்துகின்றார். அவர் படிப்பிக்கும்பொழுது சுவாரஸ்யமான புத்தகம் ஒன்றை வாசிப்பதைப்போல் அவ்வளவு இனிமையாக அவரது படிப்பிக்கும் திறன் மாணவர்களை ஆட்கொள்ளும். இத்தனைக்கும் அந்தப் பாடசாலை தேயிலைத் தோட்டத்தின் மத்தியில் இருக்கும் ஒரு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

வகுப்பு உற்சாகமாக நடந்து கொண்டு இருக்கிறது. கந்தசாமி ஆசிரியர் சுறுசுறுப்பாகப் பாடங்களை நடத்திக் கொண்டிருக்கிறார். மாணவர்களின் சந்தேகங்கள் உடனுக்குடன் தீர்த்துவைக்கப்படுகின்றன. புரியாத மக்கு மாணவனும் அவர் படிப்பிக்கும் அவருக்கே கைவந்த அந்தக் கலையால் எல்லாம் தெரிந்த மாணவனாக உருவாக்கப்பட்டுவிடுவான். அன்றைய பாடம் பயன் உள்ளதாக முடிய மாணவர்கள் சுவையான விருந்துண்ட நிறைவோடு தங்கள் இல்லம் நோக்கி நடையைக் கட்டுகிறார்கள்.

அதோ கந்தசாமி ஆசிரியர் வெளியேறும் மாணவர்களைக் கூர்ந்து நோக்கியவராய் தன்னிருக்கையிலே அசையாமல் இருக்கிறார். அந்த மலையகத்துப் பாடசாலையில் படிப்பிக்கும் ஆசிரியர்களில் கந்தசாமி ஆசிரியர் முற்றிலும் மாறுபட்டவர்தான். சக ஆசிரியர்கள் இவரோடு அண்டியுறவாடக் கூச்சப்பட்டார்கள். பொதுவாகக் கூறப்போனால் உற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடப் பிடிப்பில்லாமல் ஒதுக்கியே வைத்தார்கள். காரணம் என்ன? அவரோடு படிப்பிக்கும் கந்தப்பு ஆசிரியர் ஒருநாள் பேச்சுவாக்கில், ''கந்தசாமி உன்னுல் எங்களைப்போல் ஆசிரியர்களால் தலை நிமிர்ந்து வாழமுடியாமல் இருக்கிறது'' என்று கூற, கந்தசாமி ஆசிரியருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. ''ஏன்? எதற்காக?'' என ஆத்திரத்தோடு கேட்டார். ''நம்மட கௌரவத்தைத் தூக்கி வீசியெறியிறமாதிரி லீவு நாளிலும் என்ன வகுப்பு வேண்டிக்கிடக்கிறது? தோட்டக்காட்டானுக்குப் படிப்பிச்சு என்னத்தைக் காணப்போகிறோம்'' என்று கந்தப்பு ஆசிரியர் தான் ஆசிரியன் என்பதை மறந்து பிலாக்கணம் பாடியபோது கந்தசாமி ஆசிரியர் துள்ளியெழுந்தார். ''உங்களைப்போல ஆசிரியர்களால்தான் ஆசிரிய சமுதாயம் மதிப்புக் குன்றி இந்த அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. மாதாமாதம் சம்பளத்தை மட்டும் சுளை சுளையாக எண்ணிக்கொண்டு வெட்டிப் பொழுதுபோக்க நினைப்பதில் உண்மையான ஆசிரியனுக்குச் சரியான அவமானச் சின்னம் ஆகாதா? கேவலம். வெறும் பணத்தை மட்டும் நம்பி ஒரு தூய ஆசிரியர் தன்னை நம்பிவரும் ஒரு இளம் சமுதாயத்தை நாசமாக்கலாமா? நாடும் வீடும் செம்மை காண்பது பண்பட்ட ஆசிரியர்களால் அல்லவா? 'தோட்டக்காட்டான் படிப்பதா?'' என்று விதண்டாவாதம் செய்கிறீர்கள் உங்களை எப்படி ஒரு பூரண ஆசிரியனுகக் கணிப்பது? தேயிலைத் தோட்டத்து மக்களால், அவர்கள் இரத்தம் சிந்தும் உழைப்பினுல் நமது தலைவிதியையே நிர்ணயித்துக்கொள்ளும் நாம் நமது கெட்ட போக்கால் அல்லவா, ''நாயிலுங் கடையரா''க நினைக்கிறோம். ''சாதியிரண்டொழிய வேறில்லை, மனிதரில் பேதம் இல்லை'' என்று ஔவைப் பிராட்டி சொன்னதை மறந்து வாழலாமா?'' என்று மடமட என்று கந்தசாமி ஆசிரியர் வார்த்தைகளை அள்ளி வீசினுர். கந்தப்பு ஆசிரியரோ பெட்டிப் பாம்பாக அடங்கினுர்.

தன் கடும் உழைப்பால் அந்தத் தேயிலைத் தோட்டத்தில் வாழும் மாணவர்களைச் சிறந்த ஒழுக்கசீலர்களாக, பண்பாளர்களாக, எல்லாம் தெரிந்த கெட்டிக்கார மாணவர்களாக அவர் உருவாக்கி வைத்திருந்தார். அவரது விடா முயற்சியினுல் அந்தப் பாடசாலையின் பரீட்சை முடிவுகள் மிகவும் சிறப்பாக மற்றப் பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக இருந்துவந்தது.

மாணவர்கள் தங்கள் அறியாமைகளைத் தூக்கியெறிந்து குருவுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையையும் கொடுக்கவைத்தவர் கந்தசாமி ஆசிரியர் தான் என்றுல் அது மிகையாகாது. ஆசிரியரென்பது சமுதாயத்தின் தீர்க்கமான சின்னம் என்பதை அவர் தன் வாழ்க்கையிலே நிரூபித்துவந்தார். மாணவர்கள், ஆசிரியர்கள் எப்படிப் பழக வேண்டும் என்பதைத் தன் வாழ்க்கையிலே மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டி வந்தார். ''உனக்கல்லடி உபதேசம் ஊருக்கு'' என்று உபதேசம் செய்யும் போலிகளிலிருந்து அவர் முற்றிலும் மாறுபட்டவர். பண்டைக்காலத்துக் குரு சிஷ்ய பரம்பரையின் மறு பிம்பமாகத் திகழ்ந்தார் கந்தசாமி ஆசிரியர். ஆசிரியர் கெட்டால் அச்சமுதாயமே கெட்டுவிடும் என்ற உண்மையைப் புரிந்துகொண்டவர் அவர். இருண்டுபோய்க் கிடக்கும் தோட்டக்காடென்று சொல்லும் அவலத்தை மாற்றி அமைக்கப் புறப்பட்ட நவீன ஆசிரியர் அவர். தன் ஜீவத் தொண்டு மாணவர்களை நல்வழிப்படுத்துவதென்று வாழ்ந்துவந்தவர். நிலை கெட்டுப்போய் வெறும் ஆசிரியர்களாக உலவிவந்த போலி ஆசிரியர்கட்கு கந்தசாமி ஆசிரியர் ஒரு சவுக்கடியாகத் திகழ்ந்தார்.

கந்தசாமி ஆசிரியரின் புனிதமான தொண்டால் அம்மலையகமே புது ஒளி பெறலாயிற்று. அவரது அரும்பெரும் முயற்சியினுல் எத்தனையோ பல மாணவ மாணவிகள் தங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்திக்கொண்டதோடு டாக்டர்களாகவும், எஞ்சினீயர்களாகவும் உத்தியோகம் பார்க்கவும் முடிந்தது என்றுல் அது கந்தசாமி ஆசிரியரின் விடாமுயற்சியினுல் கிடைத்த பலன்தான். கல்வியதிகாரிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க உத்தியோகத்தர்களும் கந்தசாமி ஆசிரியரின் திறமைக்குத் தலை வணங்கிஞர்கள். அரசாங்கத்தின் பாராட்டுதலைப் பெற்ற ஆசிரிய மணியாக அவர் விளங்கிஞர்.

அதோ கந்தசாமி ஆசிரியர் அந்தப் பாடசாலையை விட்டுத் தன் இல்லம் நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறூர். ஆசிரியர் உலகத்தில் ஆயிரம் சிக்கலான பிரச்சனைக்குள் அவர் தன்னை விடுவித்துக் கொண்டு ஒரு புதிய மனிதஞக, படம் போட்ட தங்கமாகத் தன்னை மறந்து நடந்துகொண்டிருக்கிறூர். அவரைப் போன்ற ஆசிரியர்களைத்தான் நாடும் உலகும் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறது. அது கிடைக்குமா....?

இ. கனகசபை,
(முதலாம் வருடம்)

" பறவைகளைப்போல நாம் பறக்கமுடியாது. ஏனென்ருல் நமக்கு அந்த அளவு தன்னம்பிக்கை கிடையாது. வாழ்க்கையில் நம்பிக்கையே நமக்கு இறக்கைபோல இருந்து மேலே தூக்கிவிடமுடியும். "

— ஜே. எம், பாரி.

*With Best Compliments*

*from*

**V. K. M. NAGALINGAM & SONS**

**JEWELLERS & RADIO DEALERS**

**KANDY.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிந்தவர் கூடினால்?

ஐயோ அம்மா! என்று அலறிய வண்ணம் ஒரு வாலிபன் வீதியின் ஓரத்தில் போய் விழுந்தான். அவனது நெற்றியில் இருந்து குருதி கசிந்துகொண்டு இருந்தது. அவன் தேம்பித்தேம்பி அழுவதைப் பார்த்தால் எந்தக் கல்நெஞ்சக்காரனின் மனமும் கரைந்துவிடும். அதே போல்தான் நானும் என்னுள் இனம் புரியாத ஓர் அநுதாப உணர்ச்சி அவன்பால் தூண்டப்பட்டு அவனிடம் சென்று ''தம்பி, என்ன நடந்தது? ஏன் இப்படி குருதி பெருகுகின்றது?'' என்று ஆதரவாகக் கேட்டேன். அப்போது அவன் சிரித்த சிரிப்பு, அப்பப்பா! எனக்கு இப்போது நினைத்தாலும் உடல் நடுங்குகிறது. சிரித்துவிட்டு அவன் ''ஐயா, பெரியவரே! என் கதை ஒரே தொடர் கதைதான். இவ்வளவு நாளுக்கு நீங்கள் ஒருவர்தான் என்னிடம் விசாரிக்கிறீர்கள். உங்களிடம் என் கதையைக் கூறி நான் மன அமைதி பெற விரும்புகிறேன். கேளுங்கள்!'' என்று கூறித் தொடர்ந்தான்.

நான் பெரும் செல்வக் குடும்பத்தில் பிறந்தேன். பணமானது மனிதனை மேலேயும் இழுத்துச்செல்லும், அதள பாதாளத்திற்கும் இறக்கிவிடும். என்னையோ அது பெரும் பாதாளத்திற்குள் இறக்கிவிட்டது. செல்வமும், செல்லமும் என்னை ஊதாரியாக்கியது. ஆரம்பத்தில் போக்கிரி, பின் கள்வன், கொலைகாரன் இப்படியே என் தீயகுணங்களில் நான் பதவி உயர்வடைந்துகொண்டே சென்றேன்.

ஒருநாள் நான் என் பட்டாளத்துடன் ஓர் வீட்டைத் திட்டமிட்டுக் கொள்ளையடிக்கச் சென்றேன். ' பலநாட் திருடன் ஒருநாள் அகப்படுவான்'' என்பதற்கொப்பாக நான் திருடிக்கொண்டிருந்தபோதே பொலிஸ் அதிகாரியான என் தந்தையிடமே கையும் மெய்யுமாகப் பிடிபட்டேன். அன்றுமுதல் என் கஷ்டகாலமும் ஆரம்பமாகியது. நான் எவ்விதமோ சிறையிலிருந்தும், அப்பாவிடமும் இருந்து தப்பி ஓடிவிட்டேன். என் புகைப்படம் எல்லா பொலிஸ் நிலையங்களிலும் தொங்கவிடப்பட்டது. இறுதியில் நான் சட்டத்தின் பிடியில் சிக்கி பத்து வருடங்கள் சிறைக்கு அனுப்பப்பட்டேன். புத்தருக்கு போதி மரத்தடியில் ஞானம் பிறந்தது. சிறையிலிருந்து வெளியேறும்போது புது மனிதனாக வாழ்க்கையை ஆரம்பிக்கவேண்டும் என்று திருந்திய உள்ளத்துடன் திரும்பி வந்தேன். ஆனால் இந்தப் பாழாய்ப்போன சமுதாயம் என்னைக் கொள்ளைக்காரனின் கோணத்தில் வைத்தே எடைபோட்டது. என் பெற்றோர் அவமானம் தாங்கமுடியாமல் ஊரைவிட்டே சென்றுவிட்டனர்.

என் பெற்றோரை எங்கெங்கோ தேடியும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் பெரும் ஏமாற்றமடைந்த நான் வேலை தேடும் படலத்தில் இறங்கினேன். இது என் பெற்றோரைத் தேடிய முயற்சியைவிடக் கடினமானது என்பதை உணர்ந்தேன். இருந்தும் என் விஷயம் அறியாத ஒரு பெரிய தனவந்தர் வீட்டில் வேலைக்கு அமர்ந்தேன். அங்கு ஆரம்பத்தில் என் திறமையைப் பாராட்டினார்கள். நாட்கள் செல்லச் செல்ல என் பழைய வாழ்க்கை அத்தியாயத்தை மீண்டும் புரட்டி எடுத்துக்காட்டிவிட்டனர் யாரோ. அதன்பின் வீண் சந்தேக வியாதியினால் என்னை ஒரு சிறு தவறு நடந்தாலும் கண்டிக்கலாயினர்.

அந்தத் தனவந்தரின் மகளோ நான் அங்கு சென்று சிறிது நாட்களிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்மீது காதல் கொண்டாள் இதனை அவள் என்னிடம் கூறியபோது எனக்குக் கோபம்தான் வந்தது. நான் சிறைவாசம் அநுபவித்தவன் என்பதனை என்ஞல் எடுத்துக்கூற முடியவில்லை. இதைச் சொன்ஞலோ இருக்கும் வேலையும் இல்லாமற் போகுமே என அஞ்சினேன். நானும் மனிதன்தானே! உலக சுக சந்தோஷங்களை அநுபவிக்க எனக்கு மட்டும் ஆசை இருக்காதா? ஆஞல் என் செய்வது. இன்று என் நிலை அப்படி ஆயிற்றே. என்னை நானே கட்டுப்படுத்திக்கொண்டேன். ஆசைகளுக்கு அணைபோட்டு வைத்திருந்தேன். என் முரட்டுப் புத்தியே என் எல்லாச் சுபாவங்களிலும் தலைதூக்கி நின்றது. இதஞல் அவளைக் கடுஞ்சொற்கள் கொண்டு பேசினேன். அப்போதாவது அவளுக்கு என்மேல் வெறுப்பு உண்டாகட்டுமே என்று. என் கடுஞ் சொற்களைக் கேட்ட அவள் ஆத்திரம் அடையலாஞள்.

இதன் விளைவைப் பின்னரே நான் உணரக்கூடியதாயிருந்தது. அவளோ என்னைப் பழிவாங்க எண்ணித் தன் தந்தையிடம் நான் அவளைக் காதலிப்பதாகக் கூறவே, இதனைக்கேட்ட தந்தையார் ஆத்திரம் மேலிட, வந்த வேகத்தில் எதையுமே விசாரிக்காமல் ஏற்கனவே சந்தேகப்பட்டவர் என்னை அடித்து இந்த வீதியிலே உருட்டிவிட்டார். இதஞலேயே இந்நிலை ஏற்பட்டது.

''ஐயா! நான் பெரும் பாவிதான். எனினும் திருந்திய பாவி. இப்போ என் இலட்சியம் ஒன்றேதான். அதாவது என் பெற்ருேரை அடைந்து மன்னிப்புக் கேட்டு அவர்களுக்கு ஊழியஞய் வாழ்வது'' என்று கூறி விம்மவும், அவனது தந்தையாகிய நான அவனை ''மகனே'' எனக் கூறி அரவணைக்கவும் சரியாக இருந்தது. அவனும் ஆனந்தத்தால் ''அப்பா'' என்று வியப்பால் கதறிஞன். பிரிந்தவர் கூடிஞல் பேசவும் வேண்டுமோ?

ஜெயந்தி கதிரேசன்,
(முதலாம் வருடம்)

'' ஈரமண்ணுலான குடத்தில் நீரெடுத்தால் குடமே உடைந்து விடுகிறது. சுட்ட குடத்தில் நீரை எடுத்தால் தங்குகிறது. அதுபோல் வைராக்கியமில்லா மனத்தில் ஞானம் தங்குவதில்லை. வைராக்கியம் இருந்தால் திடமான ஞானம் மனத்தில் தங்குகிறது.

— கிருஷ்ணப் ரேமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழகி நெருங்கிவிட்டோம்!

ஆசிரியர் பயிற்சிக்கென அழைப்பிதழ் வந்ததுமே
ஆனந்தம் அகமகிழ்ச்சி அளவில்லை நினைந்ததுமே
பெட்டி படுக்கையெல்லாம் கட்டி எடுத்துக்கொண்டு
இட்டமுடன் புறப்பட் டில்லாளிடம் விடைபெற்றேன்
மக்களிடம் விடைபெற்று மற்றோரிடம் விடைபெற்றேன்
தக்கதென வாழ்த்தி வழியனுப்பி வைத்தனரே.

பதுளையில் ஏறிப் பப்பத்து மைல்வந்த பேருந்து
மெதுவாக நின்றிந்த மீன்பாடும் தேனுட்டில்
கையிலே பையும் பழுவான பெட்டியுமாய்
கலாசாலைச் சாலைநோக்கிப் பாங்குடனே நடக்கும்போது
'ராக்கிங்'கின் எண்ணங்கள் நெஞ்சிலே படபடக்க
நாக்கிலே நீரில்லை யென்றாலும் கிலியின்றித் துணிந்திட்டேன்.

மெல்லெனவே அடிவைத்துப் பள்ளிக்குள்ளே நுழைந்தபோது
பல்வின மரத்தினிடைப் பரந்திருந்த முற்றத்திலே
அங்கொருவ ரிங்கொருவர் ஆசிரிய மாணவர்கள்
''இங்கிருக் காபீசு'' என்றங்கே வழிகாட்டி
சென்றிடுவீர் பதிவுசெய்வீர் ''பிளேட்டி''னையே வைத்திடுவீர்
என்றதுமே செய்திட்டேன் எதுவுமே பிசகாமல்.

'செக்கண்டியர் போய்ஸ்கள்' சிக்கிடாதீர் அவர்கையில்
செய்திடுவார் ராக்கிங் கென்றுபலர் சொல்லுகையில்
தப்பவழியில்லை தடுமாறிப் பயனுமில்லை
எப்படியும் சமாளிப்போம் என்று மனம் திடங்கொண்டேன்
முதலிரண்டு நாளும்போய் மூன்றும் நாளிரவுதனில்
பதறிநின்ற எம்மைப் பத்துப்பேர் சுற்றிநின்றார்.

அறிமுகம் ஹாஸ்டலில் அப்புறந்தான் ஹாலிலென்றார்
அருந்தப் பென்றெண்ணி அப்படியே செய்துவிட்டோம் – எம்
வரலாறுகூறிச் சிலர் வாய்திறந்து பாடிவிட்டோம்
குறைசொல்ல இடமின்றி குதூகலமாய் பேசிக்கொண்டோம்
குசலம் விசாரித்துப்பின் 'குட்நைட்'டும் கூறிவிட்டோம்
சயனம் ஆகிவிட்டோம் 'சைலன்டாய்' படுக்கையிலே.

ஆட்டிறைச்சி விருந்தோடு அறிமுகம் அடுத்தனள்
பாட்டுக்கள் பாடி நல் ஆட்டங்களுமாடி
'செக்கண்டியர்', 'பெஸ்டியர்' எல்லாமே ஓர் 'இயராய்'
பக்கத்தேயிருந்து பழகி நெருங்கி விட்டோம்
ஈராண்டு பயிற்சிக்கு எமையழைத்த பேரறிஞர்
நூறாண்டு வாழ்கவென உளமார வாழ்த்திடவே.

வை. நடனசபாபதி,
(முதலாம் வருடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்பற்றல்

சமூக வளர்ச்சியில் பின்பற்றல் மிகவும் முக்கியமானது. இதுவே நாம் இருக்கும் நிலையைத் தீர்மானிக்கிறது. கண்ணாடி எந்த உருவத்தையும் பிரதிபலிக்கிறது. அதேபோல் நாமும் ஒருவனுடைய செயலைப் பார்த்து அன்னவரின் ஒழுக்கம், பேச்சு, சீவியம் என்பனவற்றைப் பற்றிப் பின்பற்றுகிறோம். இன்னும் உலக காரியங்களாகிய சுகவாழ்வு, பொருள், உலக சம்பத்து என்பவற்றை நமக்கு அவர் கொடுப்பாராயின் மிகவும் இன்பமடைவோம். இந்த இன்பமும் இவ்வுலக வாழ்வும் நிலையில்லாதது. ஆகவே என்றும் நீங்காத இன்பத்தை அளிக்கும் பரம காரியங்களைத் தேடவேண்டியவர்களாய் இருக்கின்றோம். இவைகளை நாம் எங்கே காணலாம்? பரிசுத்த வேதாகமத்திற் காணலாம். இப் பரிசுத்த வேதாகமம் தெய்வீகத்தை உணர்த்தும் கண்ணாடியென்றே சொல்லலாம். இந்நூலை வாசிப்பவர் பின்வரும் வாக்கியங்களின் தாற்பரியத்தை உணராதிரார்.

''இழந்துபோனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனித குமாரன் உலகத்தில் வந்தார்''. ''மனித குமாரன் கெட்டுப்போனதை இரட்சிக்க வந்தார்''. ''பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து உலகத்தில் வந்தார்''. இந்த வாக்கியங்களுக்கு ஏற்ப இவ்வுலகின்கண் வந்தவர் இயேசு பிரானன்றோ! இந்த உலகம் பெரிய உலகம்; அது என்னையும் என் பெற்றோரையும் அடக்கியதல்ல; இந்த உலகிற்குக் கிறிஸ்துவின் போதனையும், சாதனையும் எவ்வளவு அருமையானவைகள்; உலகம் முழுவதும் உயர்ந்த சனங்களல்ல. பெரும்பாலும் தாழ்மையானவர்களே. அவர் தாழ்மையான கோலமெடுத்து, தாழ்மையானவர்கள் மத்தியில் ஊழியம் செய்தார். இவரின் தாழ்மையான பிறப்பு, அவரின் சீவியம், போதனைக்கேற்ற சாதனை, ஊழியம், பாடு, மரணம், உயிர்த்தெழுதல் என்பன நம் அகக் கண்களைத் திறக்கும் காரியங்களன்றோ!

''கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார், தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும். கர்த்தருடைய அனுக்கிரக வருடத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார்'' (லூக்கா 4 : 8-19) என்ற வாக்கியங்கள் ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் எழுதியிருக்கிறதைக் கண்டார். இவ்வாக்கியங்கள் தெளிவாக்கும் காரியங்கள் யாவும் தம்மூலமாகவே நிறைவேறுமென்று கூறுகின்றார்.

'' தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க என்னை அனுப்பினார்'' என்று தம்மைப்பற்றி அவர் சொல்லும் சாட்சி எவ்வளவு அருமையானது. இன்னும் அவர் ''வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள். என் சுமை இலகு'' என்று நம்மை அழைக்கிறார். இப்படியான பெருங்குணமே நமக்கு வேண்டும்.

சமாரிய ஸ்திரி ஒருத்தி தனது நிலைமையை எடுத்துரைத்தபோது அப்பெண்ணுக்குக் கிறிஸ்து கூறிய மறுமொழி நம்மைக் கவருகிறது. அதாவது நம் வணக்கம் ஆவியுள்ளதாகவும், உண்மையுள்ளதாகவும் இருக்கவேண்டுமென்பதே. ''கடவுளை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும்'' என்று கூறினார். ஆவியும் உண்மையும் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களாகத் தொழுவோமாயின் நம் துன்பம் இன்பமாக மாறும்.

சகேயு என்ற ஒரு ஆயக்காரனிருந்தான். அவனைச் சனங்கள் அவமதித்தார்கள். அவன் இயேசுவைக் காணவிரும்பினான். கிறிஸ்துவே அவனைக் கண்டார். இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. "இன்றைக்கு இவனின் வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது. இன்றைக்கு நான் உங்கள் வீட்டில் தங்கவேண்டும்" என்றார். பாவ உணர்ச்சியை மறந்து மனந்திரும்பித் தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கு, அவர் மன்னிக்கும் சிந்தையுள்ளவராகவும், இரட்சிப்புக் கொடுக்கிறவராகவும் இருக்கிறார்.

அவரின் போதனையும் சாதனையும் எவ்வளவு சிறந்தவைகள். பசியாய் இருக்கிறவர்களுக்குப் போசனம் கொடுத்தல், தாகமுள்ளோரின் தாகத்தைத் தீர்த்தல், வியாதியஸ்தரைப் பார்க்கப்போதல், அன்னியரைச் சேர்த்துக்கொள்ளல், வஸ்திரமில்லாதவருக்கு வஸ்திரம் கொடுத்தல் எவ்வளவு மேலானவை. இச்செயல்களைக் கடைபிடிக்கும் பொருட்டே "இந்தச் சிறியவரில் ஒருவனுக்கு எதைச் செய்கிறீர்களோ அதை எனக்குச் செய்கிறீர்கள்" என்று கூறுகின்றார்.

ஜப்பான் தேசத்தில் ஒரு பக்தன் ஊழியம் செய்தார். அவரின் பெயர் "தெயோக்கி கோககாவா". அவர் இயேசுவின் இணையடியையே பின்பற்றியவர். அவர் கூறுவது என்ன? "அன்பு எங்கே இருக்கிறதோ அங்கே கடவுள் இருக்கிறார். கடவுளைக்காண நாம் கோயிலுக்குப் போகவேண்டியதில்லை. சிறைக் கூடத்துக்குப் போ. அங்கே கடவுள் இருக்கிறார்" என்பதே. இப்படியான சிந்தையே நமக்குத் தேவை.

கி. பி. 32ம் வருடத்தில் கலிலேயாவில் கிறிஸ்து சபையைச் சேராத ஓர் மனிதன் இருந்தான். அவன் பெயர் "றிச்சேட் உவாட்சன் கில்டர்". அவன் ஆண்டவரைக்குறித்துக் கொடுத்த சாட்சி "ஆண்டவரைச் சிலர் மனிதன் என்கிறார்கள். சிலர் அவர் தேவன் என்கிறார்கள். அவர் மனிதனோ தேவனோ எப்படியிருந்தாலும் அவரே எனக்குத் தேவை. அவர் தேவனானால் வானத்திலும் பூமியிலும் தண்ணீரிலும் அவரே தேவன். வேறொருவன் இல்லை. நான் அவரையே வணங்குவேன். மனிதனானால் அவர் மாத்திரமே மனிதன். வேறே மனிதன் இல்லை. எங்கும் என்றும் அவரைப் பின்பற்றியே சீவிப்பேன்" என்றான். அவனின் சாட்சி நம் இதயக்கமலத்தை விரியச்செய்கிறது. அவரின்மேல் அவர்கொண்ட அன்பின் விசுவாசந்தானென்னே! நாம் அவரின் போதனையையும் சாதனையையும் கண்டும், கேட்டும், ருசித்தும் இருக்கும்போது அவரின் இணையடிகளைப் பின்பற்றவேண்டாமா? ஆண்டவர் தமது அன்பைப் பின்பற்றுவோருக்கு "நானே வழியும் சத்தியமும் சீவனுமாயிருக்கிறேன். என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14-6) என்று கூறுகிறார். இந்த விசுவாசம் நமக்குள்ளே நிலவுமாயின் நாம் அவரைப் பின்பற்றாமலிருக்கமுடியாது.


"என் ஆத்துமா உம்மைத்
தொடர்ந்து பிடிக்கிறது.
உமது வலதுகரம் என்னைத்
தாங்குகிறது.
*(சங்கீதம் 63 : 8)*

**செல்வி கு. ஜுலியட் ஏபிரகாம்,**
**(முதலாம் வருடம்)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாலைச் சாரணர் படை



# கலாசாலை வழிகாட்டிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுவங்கேணியில் மூன்றுநாள்

அன்ருெருநாள் வெள்ளிக்கிழமை ஒரே ஆரவாரம். விடுதியில் எங்கு நோக்கினும் பொதிகள். முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள் அங்கு மிங்குமாக சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டு இருக்கின்ருர்கள். சிலர் தாங்கள் கொண்டுசெல்லும் பொருட்களின் பெயர்ப் பட்டியலைச் சரிபார்த்துக் கொண்டு இருக்கின்றனர். திடீரென விசில் சத்தம் கேட்கிறது. எல்லோரும் திமு, திமு என்று ஓடி சாரணர் கூடும் இடத்தில் அணி, அணியாக நிற்கின்றனர். அங்கே சாரணர் பயிற்சி ஆசிரியரும், மட்டக்களப்பு பிரதேச சாரணர் மேலதிகாரியுமான திரு. வீ. பாலசுப்ரமணியம் அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அனைவரும் சாரண மரியாதை செய்தனர். பின்பு அவர் பாசறையில் நடந்துகொள்ளும் முறைபற்றியும் அங்கு செய்யவேண்டிய கடமைகள் பற்றியும் எடுத்துரைத்தார். அதன்பின்னர் கலாசாலை அதிபர் அவர்கள் அறிவுரை புகன்று நல்லாசி கூறி அனைவரையும் அனுப்பிவைத்தார். எங்களோடு வழிகாட்டிகளும் வந்து சேர்ந்து கொண்டார்கள். எல்லோருமாக 96 பேர்கள் மட்டக்களப்புப் புகையிரத நிலையத்தில் மூட்டை முடிச்சுக்களுடன் போய்ச் சேர்ந்தவுடன் ஒரே ஆரவாரம். அங்கு நிறுத்தி இருந்த புகைவண்டியில் ஏறி அமர்ந்துகொண்டோம். எல்லோருக்கும் ஒரே சந்தோஷம். தாளக் கருவிகள் ஒலி பரப்ப இன்னிசை முழங்கத் தொடங்கி விட்டது. எல்லோரும் தங்களை மறந்து பாடலுக்கு ஏற்ப ஆடத் தொடங்கிவிட்டார்கள். எங்களோடு சேர்ந்து சாரண ஆசிரியரும் ஆடுகிருர். வந்தாறுமூலை என்ற இடம் வந்ததே தெரியவில்லை. எல்லோரும் அவர் அவர் பொருட்களைத் தோளிலும், கையிலும் சுமந்துகொண்டு இறங்கி களுவங்கேணியை நோக்கி நடக்கலானேம். மிகுதிப் பொருட்கள் அனைத்தும் வாகனத்தில் வந்துகொண்டிருந்தன. களுவங்கேணியை அடைந்துவிட்டோம். அங்குள்ள பாடசாலையில் வழிகாட்டிகள் அனைவரையும் தங்க ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு சாரணர்களும், ஆசிரியரும் எங்கள் பயணத்தைத் தொடரலானேம். களுவங்கேணி கடற்கரைக்கே சென்றுவிட்டோம். அங்கிருந்து திரும்பி ஓர் ஒற்றையடிப்பாதை வழியாகக் காட்டைநோக்கி ஒருவர்பின் ஒருவராக நடக்கின்றேம். எதிரே ஒரேயொரு வீடு, அதன் அருகே ஒரு கிணறு. மேலும் உள் நோக்கி வெகுதூரம் நடக்கின்றேம். எங்கும் ஒரே முட்காடு. இடை இடையே முற்புதர்கள். இதற்கிடையிலே தலைவர் கூறிய இடங்களில் அணி, அணியாகக் கூடாரங்களை அமைக்க முற்பட்டோம். கூடாரங்களும் கட்டிமுடிய ஆதவனும் மறைந்தான். நடந்த களைப்பும், பசியும் மேலிட எல்லோரும் உணவு அருந்திவிட்டு சற்று இளைப்பாறினேம்.

சிறிதுநேரத்தில் விசில் சத்தம் கேட்கிறது. எல்லோரும் மத்திய நிலையத்தை நோக்கி ஓடினேம். அடுத்தநாள் செயல் திட்டம்பற்றி அறிவிக்கப்பட்டது. அதன்பின் சாரணர் கீதங்களை இசையோடு பாடத்தொடங்கினர்கள். உற்சாகமிகுதியால் இரவு ஒரு மணிவரை ஆடிப்பாடிக் கொண்டு இருந்தோம். இசை ஒலி காடே அதிரச்செய்தது. காலைக்கடனை முடிப்பதற்கு அவசியம் ''கைபோ'' வேண்டும் என்பதால் இரவோடிரவாகக் காட்டில் சென்று மரம் வெட்டிவந்து ''கைபோ'' அமைத்தோம். பின்பு எல்லோரும் நித்திரைக்குப் போனேம். புதிய இடம், புதிய அனுபவம், நுளம்பு, பூச்சிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லை, நித்திரைவர மறுத்துவிட்டது. அதி காலையிலேயே எழுந்துவிட்டோம். காலைக் கடனை முடித்துவிட்டுக் குளித்தோம். குறிப்பிட்டபடி ஏழு மணிக்கு சாரணர் கொடியேற்றம் நடைபெற்றது. பின்னர் காலை உணவை அருந்தினோம். கூடார பரிசீலனை நடைபெற்றது. அதில் ஐந்து அணிகளுக்கிடையே முதலாம்நாள் முதலிடத்தைப் புலி அணி பெற்றது. பின்னர் சாரண வகுப்பு நடைபெற்றது. அதில் பல நுட்பங்களும், அறிவுரைகளும் செயற்பாடுகளும் புகட்டப்பட்டன.

மத்தியானம் பன்னிரண்டு மணி பகல் உணவு அருந்தினோம். ஒரு மணி நேரம் ஓய்வு பெற்றபின்பு மீண்டும் சாரண வகுப்பு நடைபெற்றது. பின்னர் அன்று இரவு நடைபெற இருக்கும் பாசறை தீ நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வழிகாட்டிகளும் வருகிறார்கள் என்ற செய்தி கேட்டு சாரணர்கட்குச் சந்தோஷம் தலை, கால் புரியவில்லை. மிக சுறு சுறுப்பாக இயங்கத் தொடங்கினார்கள். சிலர் தீ நிகழ்ச்சிக்குரிய ஆயத்தங்களையும், ஒரு குழு உணவு தயாரிப்பதிலும், சிலர் தங்களை அலங்கரிப்பதிலும், வேறுசிலர் கூடாரங்களை ஒழுங்குபடுத்துவதிலும் முனைந்தார்கள். நேரம் போனதே தெரியவில்லை. மாலை 4 மணி இருக்கும். வழிகாட்டிகளும், ஆசிரியைகள் திருமதி சங்கரப்பிள்ளை, செல்வி இராஜசிங்கம். திருமதி இரட்ணயக்கா ஆகியோரும் பாசறையை வந்தடைந்தார்கள். அத்தோடு எங்கள் கலாசாலை அதிபரும், இன்னும் சில விருந்தினர்களும் வந்தடைந்தார்கள். பாசறை மிகக் கலகலப்பாக இயங்கியது.

சாரணர்கள், வழிகாட்டிகள் ஆகிய இருபாலருக்குமாக நுட்பமான விளையாட்டுப் போட்டிகளும், விவேகப் பயிற்சிகளும் நடைபெற்றன. பாசறை நிகழ்ச்சிகள் நன்கு சூடுபிடித்து இயங்கிக்கொண்டிருந்தன. பின்னர் மாலை 6 மணி அளவில் இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கட்குச் சின்னஞ் சூட்டும் வைபவம் நடைபெற்றது. பின்னர் 7 மணி அளவில் பாசறைத் தீ விழா நடைபெறத்தொடங்கியது. அதில் சாரணர்களால் மந்திரவாதி, எமதர்மன் தீர்ப்பு, கிச்சன் பேன்ட், களுவங்கேணி வானொலி நிலையம், பட்டிக் காட்டு மாப்பிள்ளை. குறிசொல்லும் குறத்தி, பத்மபூஷணி, என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்னும் ஹாஸ்ய நாடகங்கள் எல்லோரையும் சிரிப்புக் கடலில் ஆழ்த்தியது மட்டுமல்ல, இந்தப் பாசறை நிகழ்ச்சிகளை மேலும் மெருகூட்டினாற்போல் இருந்தது.

இவ்விழா முடிவடைய ஆட்டுக் கறியும், சோறும் வயிறார உண்டுகளித்தோம். அதன்பின்னர் வழிகாட்டிகளும், தலைவிகளும் தாங்கள் தங்கும் பாடசாலைக்குப் பிரிய மனமில்லாமல் பிரிந்துசென்றார்கள். அதன் பின்னரும் சாரணர்கள் சாரண கீதங்களைப் பாடிக்கொண்டு இருந்துவிட்டு நித்திரைக்குச் சென்றார்கள். மூன்றாம் நாட் காலை கூடார பரிசீலனை நடைபெற்றது. அதன் பின்பு ''ஞாபகப் போட்டி'', ''கள்ளக்கடத்தல்'' என்னும் நுட்பமான விளையாட்டுக்கள் என்பன எல்லோரையும் சுறுசுறுப்படையச் செய்தன. தங்களை மறந்து செயல்பட்டார்கள். நிகழ்ச்சிகள் எல்லாம் ஒருநாளைக் கொருநாள் மேலும் மேலும் உற்சாக மூட்டக்கூடியதாகவே அமைந்தன. இதனால் கலாசாலையை மறந்தோம். சுற்றுடலை மறந்தோம். எங்கு இருக்கின்றோம் என்று தெரியாமல் எங்களையே மறந்து சந்தோஷமாக இருந்தோம்.

பகல் 12 மணியளவில் மத்தியான உணவை உண்டோம். கொடி இறக்கம் நடைபெற்றது. கூடாரங்கள் கலைக்கப்பட்டன. பொருட்களையெல்லாம் பொதிகளாக்கினோம். எங்களை அழைத்துச்செல்ல இரண்டு பஸ்வண்டிகள் வந்தன. இன்னும் சில நாட்கள் பாசறையில் தங்கக் கொடுத்துவைக்கவில்லையே என்ற ஏக்கத்தோடு பஸ்களில் அமர்ந்தோம். எங்களை அறியாமல் சாரணர் கீதங்கள் ஒலித்தன. ஆடலும், பாடலும் பஸ்ஸை அதிர்ந்தது. மாலை 4 மணி அளவில் பஸ் கலாசாலை வாசலை அடைந்தபோதே எங்களுக்குக் கலாசாலை ஞாபகம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் களுவங்கேணிப் பாசறை எங்களுக்களித்த நன்மையோ ஆயிரம். எத்தனை மதிநுட்பங்கள், எத்தனை அனுபவங்கள், என்னென்ன வாழ்க்கை முறைகள், எல்லாவற்றையும் கற்றுக்கொடுத்தது இந்தப் பாசறைதான். ஏன் எந்த வசதியுமே இல்லாமல் தனிமையில் ஒருவன் எல்லா வசதிகளையும் ஆக்கிக்கொண்டு வாழமுடியும் என்பதை உணர்த்தியது இப்பாசறைதான். சரீர உழைப்பால் எம்மையும், பிறரையும் சந்தோஷமாக வாழவைக்கலாம் என்ற உண்மையை எங்களுக்கு எடுத்துக்காட்டியது இப்பாசறை வாழ்க்கைதான். மூன்று நாளில் எங்களை முழு மனிதனாக ஆக்க உதவியது. இந்தப் பாசறையை அமைக்க அயராது உழைத்த, அறிவு புகட்டிய மதிப்பிற்குரிய எங்கள் சாரண ஆசிரியர் திரு. V. பாலசுப்பிரமணியம் அவர்கட்கும், இதற்குப் பூரண ஒத்துழைப்பு நல்கிய கலாசாலை அதிபர் அவர்கட்கும் எங்களின் அன்புகனிந்த நன்றி உரித்தாகுக.

வளர்க சாரணர் இயக்கம்!
வாழ்க அவர்களின் கொள்கை!!
ஓங்குக அவர்களின் சேவை!!!

ஏ. தேவராஜா,
(முதலாம் வருடம்)

Donated by

APPUDURAI & CO.,
DEALERS IN NEW AND SECOND HAND MOTOR SPARES
38, CLOCK TOWER ROAD,
JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்த்துவிடில் கண்ணீர்!

கனவினிலும் கருதியிராக் காட்சி - அன்று
கடுகதியில் வந்தலைச்சுப் போச்சு
காலமெல்லாம் கருகிவிடும் நெஞ்சு - இனி
கார்கால மெனில் உறுதி நம்பு.

வயல் செழித்து வளம்கொழிக்கும் வேளை - உடன்
வந்தழித்து மறைந்துவிட்ட கோரம்
வானோங்கும் வளர்மாடிக் கூடம் - இன்று
வெறிச்சோடிப் பாழ்கிடக்கும் கோலம்.

மீன்பாடிப் புகழ்பெற்ற நாடு - இன்று
மீனென்றால் எங்கென்று தேடும்
பரிதாபம் பசிபிணியால் மக்கள் - உடல்
பரிதவித்து உயிர் பதைக்கும் காட்சி.

கடுகதியில் வளர்ச்சிபெற்ற பள்ளி - அருகே
கண்போன்ற எங்கள் கலாசாலை
களங்கமற்றுச் செழித்தலர்ந்த பூக்கள் - இன்று
காண்பதெனில் கனவினில்தான் ஆகும்.

சோலையோ சோலையெனத் தென்னை - அங்கு
செழித் தடர்த்தியாய்ச் செறிந்த(பல) குலைகள்
சிதறிச் சிதறிமண்ணில் வீழ்ந்து - மரம்
சாய்ந்த வடுக்கூட இன்று இல்லை.

புயலுக்குப் பின்பிழைத்த மக்கள் - இன்று
புதிய வழி வாழ்க்கையினைக் கற்று
புதுப்பயிற்சி பெற்று வரும் கோலம்
பரிதாபம் பார்த்துவிடில் கண்ணீர்!

செ. துரைநாயகம்,
(முதலாம் ஆண்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக் கிழவன்

பண்டைய தமிழன் உலகை ஐந்து விதமான நிலங்களாகப் பிரித்து குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனப் பெயர்சூட்டி, அந்நிலங்களுக்கேற்ற தெய்வங்களையும் ஏற்படுத்தி வணங்கிய பெருமை தமிழனைச் சாரும். குறிஞ்சிக்கு முருகன், முல்லைக்குத் திருமால், பாலைக்குத் துர்க்கை, மருதத்திற்கு இந்திரன், நெய்தலுக்கு வருணன் எனத் தெய்வங்களைச் சொந்தங்கொண்டாடினர். இப்படியாக சொந்தங் கொண்டாடப்பட்ட தெய்வங்களுள் தமிழனின் மனதைக் கொள்ளைகொண்டவன் குறிஞ்சிக் கிழவன் முருகன். குறிஞ்சி நிலத்துக்கு உரியவனை முருகன் படிப்படியாக ஏனைய நில மக்களிடையேயும் புகுந்து புகழ் பரவத்தொடங்கினன். இன்று தமிழினத்தின் அரும்பெரும் தெய்வமாகத் திகழ்பவன் முருகன் என்றால் அது மிகையாகாது. இவனது புகழ் இலங்கையில் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் பரவிவிட்டிருந்தது என்பதற்கு இலங்கை வந்திறங்கிய விஜயன் பாழடைந்திருந்த கதிரையம்பதியைத் திருத்திக் கட்டினன் என்பதிலிருந்து தெரியவருகிறது. இத்துணைச் சிறப்புப் பெற்ற வேலவனின் புகழானது தமிழரிடையே மட்டுமின்றி சிங்கள மக்களிடையேயும்பரவி அவனுக்குக் கோவில் கட்டி வணங்கி அருள் பெறுகிறார்களென்றால் முருகனின் அருள் பெறாவிட்டால் ஈழத்தில் வாழ முடியாது என உணர்ந்ததாலோ! இன்று ''கதரகம தெய்யோ'' என அவனைப் பாடல் பெற்ற கதிர்காமத்தில் இருத்திஅருள் பெறுகின்றனர்.

தமிழகத்திலே ஆறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழமுதிர்சோலை, சுவாமிமலை, பழனி, திருத்தணிகைமலை, ஆகிய திருத்தலங்களிலிருந்து அருள்புரியும் முருகன் இலங்கையிலும் பல இடங்களில் குடிகொண்டுள்ளான் அவற்றுள் முக்கிய திருத்தலங்கள் யாழ்ப்பாணத்தில் நல்லூர், செல்லச் சந்நதி, மாவிட்டபுரம் முதலியனவும், மட்டக்களப்புப் பகுதியில் சித்திரவேலாயுத சுவாமி கோவில், மண்டூர்க் கந்த சுவாமி கோயில், சிற்றாண்டிக் கோயில்களும், கதிர்காமமும் சிறப்புடையன. இவற்றுள் நல்லூர், செல்வசந்நதி முதலியனவற்றில் முருகனின் வேலையே பிரதானமாக வணங்கப்படுகிறது.

உருவமே இல்லாத முருகனுக்குப் பெயர்கள் அநேகம் சூடி மகிழ்ந்தவன் தமிழன். அவற்றினில் எமது மனதைக் கவர்ந்த சில பெயர்களில் முருகனனவன் எமக்கு அருள் புரிகின்றான். ஒவ்வொரு பெயருக்கும் தனித்தனிக் கருத்துப் புலப்படுவதை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது.

முருகன் - என்றும் இளமையோடு வாழ்பவன். எத்தனை ஆயிரம் ஆண்டுகள் பல சென்றாலும் கட்டிளமை மாறாதவன். கந்தன் – பற்றுக்கோடாக இருப்பவன். உலக பற்றை நீக்கவேண்டுமானால் இவனைப் பற்றிக்கொண்டால் ஒழிய நடவாது. கந்தனுக்கு ஆறுமுகம் என்றும் மற்றுமொரு பெயர் உண்டு. முருகன் ஆறு முகங்களும், பன்னிரு கைகளும் உடையவன் என்பதும், இவ்வாறு முகங்களினின்றும் ஆறுவகையான இயல்புகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடையவன் என்றும் கூறப்படுகிறது. இத்திருமுகங்களின் தன்மையை அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில்,

"ஏறிமயி லேறிவிளை யாடுமுக
மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக
மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக
மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம்
ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுக
மொன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுக
மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல்
வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு
மாளே"

எனக் கூறுகிறார். இதனை நக்கீரர் திருமுருகாற்றுப் படையினில் "கதிர் பரப்பும் முகம் - வரம் தரும் முகம் - வேள்வி காக்கும் முகம் - எஞ்சிய பொருள்களை விளக்கும் ஒரு முகம் - வெல்லும் முகம் - இன்ப முகம்" எனக் கூறுகிறார்.

கங்கையில் தோன்றி சரவணப் பொய்கையில் எழுந்தருளி கார்த்திகைப் பெண்களுக்காக ஆறு குழந்தைகளாக உருமாறி விளையாடிய முருகன் உமாதேவியினால் அணைக்கப்பட்டு, ஆறு முகத்துடனும், பன்னிரு கரங்களுடனும் ஓருருவமாகத் தோன்றி கந்தன் எனப் பெயர்பெற்றான். கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டதால் கார்த்திகேயன் எனப்பட்டான். கானகக் குறத்தி வள்ளியை இவ்வுலகில் அதுவும் எமது இலங்கையில் வந்து ஆட்கொண்ட முருகன் "வள்ளி மணாளன்" ஆனான். இந்திரன் மகள் வெள்ளையானையால் வளர்க்கப்பட்ட தேவயானையை மணந்ததன் மூலம் "தெய்வயானை மணாளன்" ஆனான். இதுமட்டுமா? சாமி - சகலதும் உடையவன், குகன் - காத்தருள்பவன், சரவணபவன் - சரவணப் பொய்கையில் காட்சி கொடுத்தவன். இப்படியாக அவன் திருப்பெயர் புகழ் பாடிக்கொண்டே போகலாம்.

எக்கோவிலில் நாம் நுழைந்தாலும் முதன்முதலாகத் தோன்றுவது வாகனந்தான். சிவபெருமான் கோவிலானால் நந்தியை வணங்கிவிட்டுத்தான் உட்செல்லமுடியும். அப்படித் தரிசித்துவிட்டுத்தான் ஆலயத்தினுள் செல்கிறோம். இதேபோல் முருகனின் ஆலயமானால் முருகனின் மயிலை வணங்கியபின்னர் தான் வேல்கொண்ட வேலவனை வணங்கச் செல்கிறோம். முருகன் என்றால் மயில், வேல், சேவல் இவை மூன்றும் எமது ஞாபகத்திற்கு உடன் வருவதில் ஆச்சரியமொன்றுமில்லை. மயிலை வணங்குவதும், சேவற் கொடியை வணங்குவதும் வேலவன் முருகனை வணங்குவதற்குச் சமனே. இதனையே,

"ஆடும் பரிவேல் அணி சேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானை சகோதரனே"

என முருகனின் மயில், வேல், சேவல் இவைகளை போற்றிப் பாடும் அருளையே வரமாகத் தரவேண்டுமென முருகனையே இறைஞ்சுகிறார் கந்தரநுபூதியில் அருணகிரிநாதர்.

மயில், வேல், சேவல் இவை மூன்றிலும் தனிச் சிறப்புடையது முருகனின் வேல். முருகனின் கையில் இருக்கும் வேல் தன்னை நாம் அவதானித்துப் பார்த்தோமானால் அவ்வேலானது, முருகனின் அடியிலிருந்து முடிவரை செல்வதைக் காணலாம். இவ்வேலை அடி முதல் முடி வரை கண்டு நோக்கி வணங்குவது முருகனின் அடி முதல் முடி வரை கண்டு வணங்குவதற்கு ஒப்பாகும் என்கிறார்கள் பெரியோர்கள். வேலின் சிறப்பை அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற நாயன்மார் காலங்களுக்கு 500 ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்கு முன்பே நக்கீரர் செந்தமிழில் திருமுருகாற்றுப்படையில் ஓர் இடந்தனில்,

''வீரவேல் தாரைவேல்
விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேற்
திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல்
சூர்மார்பும் குன்றும்
துளைத்த வேல் உண்டே துணை''

என மனம் உருகப் பாடியுள்ளார்.

முருகன் - அழகன். உலகிலே அவனுக்கு நிகரான அழகேதும் கிடையாத கட்டழகன். அவனே சிவன், அவனே உமை, அவனே விநாயகன், அவனே கந்தன் என்கின்றனர் ஆன்றோர். தந்தைக்குப் பொருள் உரைத்தவனும் முருகன், ஔவைக்கு அருள் புரிந்தவனும் முருகன், பிரமாவைத் தலையிற் குட்டிச் சிறைக்கனுப்பியவனும் முருகன். சூரரைக் கொன்றவனும், அசுரர்களை அழித்தவனும் அவனே. அருணகிரிநாதருக்குக் கிளியாக இருந்து கந்தரநுபூதியை காதினில் ஓதிய வள்ளலும் அவனே. இக் கலியுக காலத்தில் மக்களின் துன்பம் துடைக்க வந்த கலியுக வரதனும் முருகன் தாள் பணிந்து நாமும் சிறப்புற வாழ்ந்து இப் பிறவிப் பெருங்கடல் நீக்கி வாழ்வோமாக. வான்புகழ் வள்ளுவரும்,

''பிறவிப் பெருங்கடல்
நீந்துவார் நீந்தார்
இறைவன் அடி சேராதார்''

என்கிறார்.

வேலும் மயிலும் துணை.

**திருமதி லோ. இரகுநாதன்**
(முதலாம் வருடம்)

---

'' நட்புக்கொள்ளும் விஷயத்தில் அவசரப்படாதீர்கள்! நிதானமாக இருங்கள். அதற்குப்பின் அந்த நட்பு நிலைக்க வழி தேடுங்கள். — சாக்ரட்டீஸ்.

'' ஒருவன் மற்றொருவனுக்குச் செய்யக்கூடிய தருமங்களிலெல்லாம் தலை சிறந்தது ஞானதானமே; பசித்த ஒருவனுக்கு இன்று நாம் உணவு கொடுத்தால் நாளையும் அவனுக்குப் பசிக்கும். ஆனால் அறிவைப் பயன் படுத்தக்கூடிய ஒரு தொழிலை அவனுக்குக் கற்றுக்கொடுத்தால், ஆயுள் உள்ள அளவும் அவன் பிழைப்புக்குத் தேவையானதைப் பெற்றுக்கொள் வான்.''

— சுவாமி ராமதீர்த்தர்.

'' பெரியவர்கள் குழந்தைகளை அடிக்கடி கண்காணிப்பது, நடைமுறையில் சாத்தியமில்லாத புத்திமதிகளைக் கூறுவது, அடிப்பது முதலியனவற்றைக் கைவிடவேண்டும். இவை குழந்தைகளுடைய வாழ்வில் இடையூறு உண்டு பண்ணுவதல்லாமல், அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகவும் இருக்கின்றன.''

— மாண்டிஸோரி அம்மையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர் சமுதாயம்

நீர்வளம், நிலவளம், மலைவளம், பொருள்வளம் அனைத்தும் ஒருங்கேயமையப்பெற்ற நாடு நமது ஈழநாடு. இந் நாட்டின் மத்திய பாகத்தில் மலைநாடு அமைந்துள்ளது. ஆங்கிலேயர் இலங்கையை ஆண்ட காலத்தில் அதாவது ஒன்றரை நூற்றுண்டுகளுக்கு முன்னர் அவர்கள் தங்களுடைய தேவைகளுக்காக மலைப்பிரதேசத்தில், தேயிலை, இறப்பர் தோட்டங்களைத் திறந்தனர். அங்கு வேலை செய்வதற்காகத் தென் இந்தியாவி லிருந்து தமிழர்களைக் கொணர்ந்து இங்கு குடியமர்த்தினர். அவர்கள் பெருங் காடாய்க் கிடந்த பிரதேசங்களை, இன்று காணப்படும் தேயிலை, இறப்பர்த் தோட்டங்கள் என்ற உருவிற்குக் கொண்டு வந்தனர். இத்தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களில் எண்பது வீதத்தினர் இந்தியத் தமிழர்களேயாவர்.

இலங்கை அறுபது வீதம் முதல் அறுபத்தாறு வீதம்வரை அந்நிய செலாவணியைப் பெறுவதற்கு இன்னும் விரிவாகக் கூறினுல் நம்முடைய நாட்டு ஏற்றுமதியில் 52% முதல் 82% வரை வருவாயைப் பெறுவதற்கு உதவி செய்வது இத்தேயிலை இறப்பரிலிருந்து பெறும் வருமானமே எனலாம். இதன் உழைப்பாளர்களே தோட்டத் தொழிலாளர்கள். நம்முடைய நாட்டு மக்களின் உணவுத் தேவையை நிறைவேற்றிக்கொள்ளவும், ஏனைய தேவைகளில் அதிகமானவற்றைப் பூர்த்தி செய்வதற்கும் உதவி செய்பவர்கள் இத் தோட்டத் தொழிலாளர்களே என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத ஒன்றுகும். எம் நாட்டின் உயிர்நாடி இத் தேயிலை, இறப்பர் தோட்டங்களே. நம் நாட்டின் முதுகெலும்பு தோட்டத் தொழிலாளர்களேயாவர்.

இவர்களின் தொகை கிட்டத்தட்ட பத்து இலட்சமாகும். இதில் இந்தோ-பாகிஸ்தான் சட்டத்தாலும், நேரு-கொத்தலாவலை ஒப்பந்தத்தாலும் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து ஐயாயிரம்பேர் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டவர்களாகும். மற்றவர்கள் நாடற்றவர்களாக இருக்கின்றனர். தங்கள் நிலையை சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தினுல் நிர்ணயித்துக்கொள்ள வேண்டியவர்களாவார்கள். இம் மொத்தத் தொகையில் தொழிலாளர்களாக வேலை செய்பவர்களில் ஆண்களைவிடப் பெண்களே கூடுதலாகக் காணப்படுகின்றனர். இம்மலையகச் சமுதாயத்தினரிடையே படித்துவிட்டுப் பிரஜா உரிமை இல்லை என்ற காரணத்தினுல் வேலையின்றி அன்ருட வாழ்க்கைக்கே திண்டாடும் வாலிபர்கள் இன்று ஆயிரக்கணக்காஞேர் இருக்கின்றனர். இவ்வேலையில்லாத் திண்டாட்டம் இலங்கை முழுதும் காணப்பட்டாலும் மலையகத்தே இந்நிலை பல்கிப் பெருகியுள்ளது.

இலங்கை வாழ் தொழிலாளர்களுள் மிகுந்த கஷ்டத்துக்குள் வாழ்பவர்களும், அதிக கடினமாக உழைப்பவர்களும், ஏனையோரிலும் குறைவாகச் சம்பளம் பெறுபவர்களும், அரசியல் அனுதைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாகவும், இவர்களைத்தவிற வேறு யாருமே இந்த உலகத்தில் வாழ்வதாகத் தெரியவில்லை. தோட்டத் தொழிலாளர்கள் நாட் சம்பளமகா கிட்டத் தட்ட பத்து ரூபா மாத்திரம் பெறுகின்றனர். இது இவர்களுடைய ஒருநாள் உணவுச் செலவிற்கே போதாமல் இருக்கின்றது. இந்நிலையை ஆராயுமிடத்துச் சட்டரீதியாகவும், தர்மரீதியாகவும் வஞ்சிக்கப்படுகிறார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமே இல்லை. தோட்டத் தொழிலாளர்கள் தம் ஒருநாள் வாழ்க்கையில் நடத்தும் போராட்டம் எண்ணிப் பார்க்கமுடியாத துயரங்கள் நிறைந்தவை.

இத் தொழிலாளர்கள் காலை ஏழுமணிக்குமுன் குறிப்பிட்ட இடங்களில் தங்கள் வேலையை ஆரம்பித்துவிட வேண்டும். ஏழுமணி பிந்தினால் அன்று வேலை இல்லை. காலை ஏழு மணிமுதல் மாலை நான்கு மணிவரை வெயில் அல்லது மழை என்ற இயற்கைச் சக்திகளுடன் நெற்றி வியர்வை நிலத்திற் சிந்த தன் சக்தி முழுவதையும் கொண்டு போராட வேண்டும். பகல் பன்னிரண்டு மணி முதல் ஒரு மணி வரையும் மதிய போசனத்திற்கு ஓய்வு கொடுக்கப்படும். சாதாரணமாக ஒரு மனிதனுக்கு மலையிலிருந்து மலையடிவாரத்தில் இருக்கும் தன் வீட் வீட்டிற்கு இல்லை! இல்லை!! தோட்டத் துரைமார்களுடைய மிருகம் வளர்க்கக் கட்டப்பட்டிருக்கும் கொட்டில்கள்போன்றும் இல்லாத ''லயம்'' என்ற புனைப் பெயரையும் சூட்டியிருக்கும் அந்தக் கொட்டிலுக்கு வந்து சாப்பிட்டுச் செல்வதற்கு இரண்டு மணித்தியாலங்கள் கொடுத்தாலும் போதாது. அதனால் பெரும்பாலான தொழிலாளர்கள் பகற் போசனத்தைத் தங்களின் பிள்ளைகள் மூலம் வேலை செய்யுமிடத்திற்குக் கொண்டுவரச்செய்து அங்கேயே சாப்பிட்டுவிட்டு மீண்டும் வேலையை ஆரம்பிக்கின்றனர். மாலை நான்கு மணி அளவில் வேலையிலிருந்து வீடு திரும்புகின்றனர். அதன்பின்னர் அவர்கள் வேலை செய்த களைப்பைப் போக்க ஆறுதல் பெறுவதா? உடலழுக்கைப் போக்கக் குளிப்பதா? குடும்பத்திற்குத் தேவைப்படும் பொருட்களைத் தேடப் பட்டணத்துக்குப் போவதா? பெற்ற பிள்ளைகளைக் கவனிப்பதா? இவர்களின் அன்றாட வாழ்க்கை பெருந் திண்டாட்டமானது. பிள்ளைகளைப்பற்றிக் கவனிக்க நேரமில்லாத வாழ்க்கையில் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கும் படிப்பிற்கும் அக்கறை காட்ட நேரமேது? இதனால் பிள்ளைகளின் வாழ்க்கை முன்னேற்றம் பாழாய்ப் போகிறது.

இப்படிக் கஷ்டப்படும் நிலையில் பல போராட்டங்களாலும், அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தின் காரணத்தாலும் தொழிலாளர்களின் சம்பளம் சற்று உயர்த்தப் பட்டது. தோட்டங்கள் அனைத்தும் தேசியமயமாக்கப்பட்டதால் முதலாளிகளின் அடக்குமுறையினின்றும், தோட்ட உத்தியோகத்தர்கள், துரைமார்கள் ஆகியோரின் மிரட்டலிலிருந்து இன்று சற்று விடுதலை பெற்றுள்ளனர். ஆனால் அது பூரண விடுதலை என்று எண்ணுவதற்கில்லை. யானை, புலி, கரடி வாழ்ந்த காட்டை ஆயிரமாயிரம் மனித உயிர்களைப் பலிகொடுத்து அழித்து இன்று செல்வம் கொழிக்கும் சீர்பெற்ற ஸ்ரீ லங்காவை ஆக்கிய இந்தியத் தமிழர் ஸ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்தத்தால் அதிகமானோர் இந்தியா செல்ல, மிகச்சிலர் இங்கேயே தங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தங்களின் சகோதரர்களையும் சகோதரிகளையும் இழந்து வாழ்வது மட்டுமல்ல அவர்கள் விட்டுச்சென்ற காலி இடங்களுக்கு இன்னொரு இனமும் பலாத்காரமாகப் புகுத்தப்பட்டுவருவதால் தொழில்களையும் இழந்துகொண்டு வருகிறார்கள்.

இந்நிலை இம்மக்களுக்கு ஏற்படக் காரணம் இவர்கள் மலையகத்தில் வாழத் தொடங்கிய ஒன்றரை நூற்றாண்டு காலத்திலும் தமிழ் மக்கள் ஒன்று சேராமல் வாழ்ந்ததேயாகும். இதற்கு முதல் காரணம் அதிகம் இலாபம் பெற எண்ணி பிரித்தாளும் உபாயத்தைக்கொண்டு ஆதிக்கம் செலுத்திய ஆங்கிலேயர் இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பிரித்துவைத்தமையாகும். இரண்டாவதாக இவர்களின் தொழிற்சங்கங்கள் மலைநாட்டு மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொண்டு போட்டாபோட்டிகளில் பல தொழிற்சங்கங்களை ஏற்படுத்தி மக்களுடைய பணத்தைக் கொள்ளையடிக்கும் ஸ்தாபனங்கள் என்ற நிலைக்குத் தாழ்ந்துவிட்டமை. இதனால் இம்மக்கள் அதிக மோசமான கஷ்டங்களை எல்லாம் அனுபவித்துக்கொண்டு நாட்டுக்காக உழைத்தும், பொருளாதார வசதியற்று, நவீன வாழ்க்கை என்றால் என்னவென்று அறியாமல் வசதியற்ற வாழ்க்கை வாழ்ந்துகொண்டு இருக்கின்றார்கள். பொருளாதார ரீதியாகப் பகடைக் காய்களாக வஞ்சிக்கப்படும் இவர்களின் வாழ்வு தழைக்கவேண்டும் என்றால் அது புரட்சிகரமான சமூக பொருளாதார அரசியலமைப்பு மாற்றத்தினால்தான் சாதிக்கப்படுமேயொழிய வேறு வழி இல்லை என்ற ரீதியில் ஒன்றுபடுவோம் - உறுதி கொள்வோம் - வெற்றி எமதே.

**திருமதி சந்திரா தேவராஜா,**
(முதலாம் வருடம்)

---

" பகைவரையும் நேசி; உன்னை வெறுப்பவருக்கும் நன்மை செய்; உன்னைச் சபிப்பவரையும் வாழ்த்து; உனக்குத் தீமை செய்வோர்க்கும் பிரார்த்தனை செய் "
— இயேசுநாதர்.

" கல்வி என்பது குழந்தைகளிடமிருந்து முழுமனிதனை வெளிக்கொணர்வது. முழு மனிதனை உருவாக்குவது அவனுடைய ஆளுமை. எனவே மனிதனின் உடல், உள்ளம், ஆன்மை, இருதயம் என்பவற்றை ஒருமித்த வகையில் விருத்திசெய்து ஆளுமையடையச் செய்வதே கல்வியின் பயனாகும் "
— காந்தியடிகள்.


" கொஞ்சம் பேசுபவன் பெரும் பேறு பெற்றவன். மௌனம் கண்ணியம் அளிக்கிறது; நம் குறைகளை மறைக்கும் திரை அது. உன் உள்ளத்தே எழும் எண்ணங்களை உடனே கக்கிவிடாதே. அவற்றை ஆராய்ந்து பார்த்து வெளியிடு. மிருகங்கள் பேசுவதில்லை. மனிதனுக்கு மட்டும் பேசும் சக்தியை இறைவன் அருளியிருக்கிறான். ஆனால் வீண் பேச்சுப் பேசுவோர் மிருகங்களிலும் கடையானவர்கள் "
— மகான் ஷைகு சாஅதி.

" கல்வியென்பது ஒருவனுடைய மூளையில் பல விஷயங்களைத் திணித்துவிடுவதன்று. கற்கும் பொருள்கள் உயிர் ஊட்டுவனவாய் மனிதத்தன்மை தருவனவாய் ஒழுக்கம் அமைப்பனவாய் இருக்கவேண்டும்" —விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர், விரிவுரையாளர்களுடன் இரண்டாம் வருட பயிற்சி ஆசிரியர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரையாள்

பூத்துவரும் புதுநிலவே புதுமைப் பெண்ணே
நேற்றுவரை நீயில்லை வேறொருத்தி நின்றுள்
பழகியவள் ஏனென்றால் பார்க்கவில்லை
போய்விட்டாள் முகத்தைக் கோணி.

இன்முகத்தைக் காட்டி நீயும் இன்று வந்தாய்
என்னிதயம் துடிக்கும் வேளை இங்கு வந்தாய்
என்னே உன்னழகை எப்படியான் கூறுவது
என் மனமே இங்கில்லை உன்னிடத்தேயன்றோ.

முத்துச் சிரிப்பழகை முழுமதியாம் ஒளிநிலவை
தித்திப்பாய் அள்ளிநான் பருகிடவோ உந்தன்
கன்னத்தின் கதகதப்பை, குமிழ்ச் சிரிப்பை
கன்னியே நீ கண்ணாடிக் கன்னத்தைக் காட்டு.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதோடொன்
என்றாலும் முன்னிளமை எழுச்சியோடு [பதே
காவியங்கள் இலக்கியங்கள் கவிகளுண்டு
எம் தமிழில் அத்தனையும் அழிந்திடுமோ.

புதுமைதனைப் பலதுறையில் புகுத்தும் வேளை
பலதொல்லை எமது நாட்டில் பகரலாமோ
ஒதுக்கல்கள் எம்மவர்கள் ஒதுங்குதற்கு
ஓரிடமில்லை உண்மையிதை உணர்வாய் நீயே.

பல கலைகள் பயிற்றுவிக்கும் பாசறையில்
நல்லவராய் நாமெல்லாம் நமது நாட்டில்
சொல்லரிய பல கல்வி சேர்த்து நாமே
நல்கிடவே சித்திரையாள் வருக நீயே.

புத்தாண்டில் புதுப்பொலிவு சேருமெனக்
காத்திருக்கும் தமிழரெல்லாம் கலங்காது
புதுவரிதான் பிறப்பதெப்போ புகன்றிடுவாய்
புதுமைப் பெண்ணே நீயும்.

பசிபோக்கி உடையுடுத்தி உறையுள்கள்
பலகட்டி கல கலப்பாய் பாரில் நாமும்
நிலையான ஓரிடத்தில் நிம்மதியாய்
அலையாத வாழ்வு வாழ அருள்வாய் நீயே.

கலைகளிலே புதுமை காட்சியிலே புதுமை
கல்வியிலே புதுமை இல்லங்களிற் புதுமை
மலர்கள் போற் பலபுதுமை முகிழ்க்கும் நானே
பலர் போற்றும் புதுமைப் பெண்ணே வருவாய் நீயே.

சித்திரையாள் அடியெடுத்து இத்திரையின் மீது
முத்திரையாய் பொலிவு காட்டும் அவள் முகத்தை
எத்திசையும் ஒளிபரப்பும் வடிவத்தாள் - என்றும்
சத்திதர வந்திடுவாள் சித்திரையதனில்.

— "யாழமுதன்"

334438

1979 ஜூலை 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபவங்கள் உறங்குவதில்லை

இதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியது என்னவென்று கேட்கிறீர்களா? சூறுவளி! ஆஆ! என்ன பயங்கரம்! கலாசாலையில் நான் அநுபவித்த சூறுவளி அநுபவம். இஃதினை வாழ்நாளில் எங்கனம் ஒருதடவை உச்சரிப்பேன்? நேரடியாக அநுபவித்த என்னுல் எங்கனம் உச்சரிக்க நா எழும்? எனவே தான், எழுத்து வடிவில் வர்ணிக்க முயல்கின்றேன்.

''விதியை மதியால் வெல்லலாம்'' என்பர் ஒரு சாரார். ''மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்'' என்பர் பிறிதொரு சாரார். இவை இரண்டினையும் மீறியதால் எனக்கு ஏற்பட்ட சூறுவளி அநுபவம்தான் என்னே!

அவசர தேவையையொட்டி விடுமுறையிற் சென்றிருந்த நான் நவம்பர் மாதம் 22ம் திகதி புதன்கிழமை நண்பகலில் வடக்குக் கிழக்கை நோக்கிப் பலத்த சூறுவளிக் காற்று வீசுவதாக வானெலிமூலம், அன்று காலைச் செய்தியில் கேட்டிருந்தும், எனது மூத்த சகோதரன் இன்று பிரயாணம் செய்வது புத்தியல்ல என்று கூறியிருந்தும், கலாசாலைக்குச் சமூகமளிக்கவேண்டிய காரணத்தால் இவற்றைப் பொருட்படுத்தாது, காலை 7-15 மணியளவில் என் பிரயாணத்தை ஆரம்பித்து, மாலை 3-30 மணியளவில் கலாசாலையை அடைந்தேன். நண்பகலைக் கடந்த காரணத்தினுல் காற்று இடம் பெருது என்ற மனத் துணிவுடனும், மழையுடனும் கலாசாலையை அடைந்தேன்.

எனது இருப்பிடமாகிய முதலாம் வருட விடுதிக்குச் சென்றபோது அங்கு மூன்று சகபாடிகள் தமிழ்மொழி சம்பந்தமான கதைப் படங்கள் வரைவதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களிடம் நான் முதலில் கூறிய வார்த்தை ''இன்று, வடக்குக் கிழக்கை நோக்கிப் பலத்த புயற்காற்று வீசுவதாக வானெலியில் கூறியிருந்தும், நான் வந்து சேர்ந்துவிட்டேன். காற்று வீசவில்லை'' என்பதே. எனது சகபாடிகள் ஆச்சரியமாக ''நாங்கள் கேள்விப்படவில்லையே'' என்றனர். இத்துடன் நின்றுவிடவில்லை நான். தேநீர் அருந்தி விட்டு வந்த என் சகபாடிகளிடமும் வானெலிச் செய்தியைக் கூறினேன். அவர்களும் அதை உண்மை என விசுவாசிக்கவில்லை.

மறுநாள் 23ம் திகதி காலை வானெலிச் செய்தியில் சூறுவளி குறித்துக் காலநிலை அறிவிக்கும்போது ஒரே ஒரு சகபாடி மாத்திரம் ''பத்மா அக்கா நேற்றுக் கூறியது இன்றுதான் வானெலியில் கூறப்படுகிறது'' என்று கூறிஞர். அத்துடன் அதைப் பெரிதாகப் பொருட்படுத்தாது எமது நாளாந்தச் செயற்பாடுகளில் நாம் வழமைபோல் ஈடுபட்டோம். காலை ஒன்றுகூடல், விரிவுரை மண்டபத்தில் நடந்தேறியபின். இரண்டாம் வருட சகபாடிகளில் ஒருவர் ''இன்று ஓர் முக்கிய அறிவித்தல், எல்லோரும் கேளுங்கள். இன்று பலத்த சூறுவளி மட்டக்களப்பை நோக்கி வீசும். 71 சடலங்கள் கலாசாலையில் மீட்கப்படும்'' என எப்பொழுதும் நகைச்சுவையாகப் பேசுவதுபோல் 8-05 மணியளவில் எங்கள் மத்தியில் கூறிஞர்.

தேநீர் இடைவேளை நேரமாகிய 10-15 மணிக்கு எமது முதலாம் வருட சகபாடிகள் ''வீதியொன்றில் ஓரிரு பச்சை மரங்கள் முறிந்துவிட்டன. என்று அளவளாவிக்கொண்டிருந்தது என் செவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் கேட்கத்தான் செய்தது. அவ் வமயம் இலகுவான காற்றுடன் மழையும் பெய்துகொண்டிருந்ததை மட்டும் என்னால் உணரமுடிந்தது. முதலில் இலகுவாக ஆரம்பித்த காற்றும் மழையும் படிப்படியாக வேகமாக வீச ஆரம்பித்ததால் வழமைக்கு மாறாக விரிவுரை வகுப்பை முடித்துக்கொண்டு, மாலைத் தேநீருக்கு முன்கூட்டியே சென்றோம். தேநீர் அருந்தியதும் மேல்மாடியை நோக்கி விரைந்தோம். மாலை 6 மணிக்குப் பலத்த காற்று சுழன்று சுழன்று வீச ஆரம்பித்ததும், எமது விளையாட்டு மைதான மரங்கள் ஆட்டங்கொண்டு முதன் முதலாக ஒரு மரம் விழ ஆரம்பித்தது. இக்காட்சியை விடுதி விறாந்தையில் நின்று மழைச்சாரலையும் பொருட்படுத்தாது வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்தோம். இந்நிலையில் மின்சாரம், தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப் பட்டுவிட்டன என்ற செய்தியும் கிடைக்கப்பெற்றது.

6-30 மணிக்கே இருள் கவ்விக்கொண்டது. மின்சார ஒளியில்லாத காரணத்தால், 6-45 மணியளவில் இரவுப் போசனத்திற்குச் செல்ல ஆயத்தம் செய்கையில், விடுதியில் உள்ள சாளரங்கள் வேகமாக ஆடத்தொடங்கி, எனது கட்டிலின் எதிர்ப்பக்கத்தில் உள்ள சாளரம் ஒன்று முற்றாகக் கழன்று கீழே விழுந்து விட்டது. சாளரம் விழுந்ததும் மழைச் சாரலும், காற்றும் வேகமாக விடுதிக்குள் புகுந்துகொண்டன. இந்நிலையில் கையில் மெழுகுவர்த்தியுடன் மேல்மாடியில் இருந்து கீழ்மாடிக்குச் சென்றோம். போசன மேசையில் சிரட்டைக்குள் மெழுகுவர்த்திகளை வைத்து ஒளி ஏற்றி விட்டு இரவுப் போசனத்தில் கலந்து கொண்டோம். போசனம் உண்டபின் மேல்மாடிக்குச் செல்ல ஒளியின்றித் தவித்துக்கொண்டிருக்கையில், அதிபர் மின் விளக்குடன் (டோர்ச் லைட்) இரவுப் போசனத்துக்ககாப் போசன அறையை நோக்கி வந்துகொண்டிருந்தார். மேல் மாடிக்குச் செல்ல ஒளி காட்டி உதவினார் அதிபர்.

சிலர், மேல்மாடிக்குச் சென்றதும், அதிகரித்துவரும் காற்றின் பயங்கரத்தால் தமது இருப்பிடத்தைவிட்டு இரண்டாம் வருடத்தினரின் இருப்பிடத்தை நோக்கி ஓடினர் முதலாம் வருட விடுதியில் இருந்தோர், என்னுடன் இருவர் மட்டும் முதலாம் வருட இருப்பிடத்தில் தங்கினோம். புகலிடம் தேடிச்சென்ற என் சகபாடிகள் அங்கு ஒரு ஓடு உடைந்து ஒருவரின் தலையில் விழுந்தருணத்தில் அவர் விலகி விட்டார். காற்றினால் கதவு ஆட்டங் கொள்வதைத் தடுக்கச் சென்றபோது ஒருவரின் நெற்றியில் காயம் ஏற்பட்டு இரத்தம் பெருக்கெடுத்தது. அத்துடன் விடுதி மேற்பார்வையாளரின் கை விரல்களிலும் காயம் ஏற்பட்டது. இந்நிலையில் மேல்மாடியில் இருத்தல் ஆபத்தானது என்று உணர்ந்த சகபாடிகள் விரிவுரை மண்டபத்தைநோக்கி விரைந்து வந்தனர், எமது இருப்பிடத்தைவிட்டுச் செல்வதில்லை என்று இருந்த எமக்கு இரண்டாம் வருட விடுதியில் நடந்த இச்செய்தியைக் கையிற் காயங்களுடன் வந்த விடுதி மேற்பார்வையாளர், பரிதாப நிலையில் நின்றபடி எமக்குக் கூறினார். இதனைக் கூறியது மட்டுமின்றி "எல்லோரும் கீழே போவோம்" என்று கூறிக் கொண்டு என் கட்டிலுக்கருகில் வந்து "பத்மா, பத்மா கீழே போவோம் வாரும்" என்று என்னையும் அழைத்தார். நிலைமை மோசமாகிப் போவதை உணர்ந்த நானும் "இனி இங்கிருப்பதில் பயனில்லை" என்று கூறிக்கொண்டு கையில் தலையணையுடனும், படுக்கைப் போர்வையுடனும் இருளில் தடவித் தடவிப் படிகளில் இறங்கினோம். மழைச்சாரலின் காரணத்தினால் படிகள் நனைந்திருந்ததால் நான் மூன்று தடவை விழுந்து, விழுந்து விரிவுரை மண்டபத்தை நோக்கி ஓடினேன். சிலர் மாடிப்படிகளில் அசையாவண்ணம் சிலைகளாயினர்.

விரிவுரை மண்டபத்திற்குச் சென்றதும், சத்தம் தாங்கமுடியவில்லை. காற்றின் பேரிரைச்சல் காதைச் செவிடு படுத்துமளவிற்கு வேகமாகியது. காற்றின் வேகத்தால் சாளரங்களின் கண்ணாடிகள் கணீர் கணீர் என உடைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னலின் வேகம் ஒருபுறம். இதற்கிடையில் மாடிப்படிகளில் நின்றோரும் பண்டபத்திற்குள் சேர்ந்துவிட்டனர். கண்ணாடித் துகள்கள் எம்மைத் தாக்காவண்ணம் சிறிய மேசைகளின்கீழ் புகலிடம் நாடினோம். ஒவ்வொருவரும் தாம் வழிபடும் தெய்வங்களை நினைந்து குரல் எழுப்பினர். இடைக்கிடையே ''ஐயோ''க் குரல்களும் எழுந்தன. ஒருசிலர் மயக்க நிலையையும் எய்தினர். நான் காற்றின் சத்தம் வந்த திசையை நோக்கிப் பீதியுடன் அங்கும் இங்கும் அலைந்தவண்ணமாய், நாற்காலியில் இருப்பதும் எழும்புவதுமாகவே நிம்மதியற்றிருந்தேன். 9-45 மணியளவில் தொடங்கிய இரண்டாவது காற்று அதிகாலை 3 மணிவரை தொடர்ந்து வீசியது. மிகவும் வேகத்துடன் பலமாக ஆரம்பித்து முடிவடையும் நேரத்தில் வேகத்தைக் குறைத்துக் கொண்டது. இரண்டாவது காற்றினால் ஏற்பட்ட சேதத்தினை வர்ணிக்க இயலாது. காற்று ஓய்ந்ததும் 4 மணியளவில் எமது கலாசாலையைச் சுற்றி இருந்தவர்கள், கலாசாலையை நோக்கிவந்து நாமிருந்த மண்டபத்தினை நிறைத்தனர். 5 மணியளவில் நானும் எனது சகபாடிகளும் வெளியிற் சென்று சேதங்களைப் பார்வையிட்டோம். நாங்கள் இவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கையில் கலாசாலைக்கு வெகு தூரத்தில் உள்ளவர்கள் நாலா பக்கமும் பரிதாபகரமான நிலையுடன் ஓடோடி வந்துகொண்டிருந்தனர். எமக்கும் கலாசாலையில் இருக்க இடம் கிடைக்குமா? என்ற நிலையில் சுற்றாடலில் ஏற்பட்ட சேதங்களைப் பார்த்ததும் பார்க்காததுமாய் மேல்மாடிக்குச் சென்று எங்கள் பொருட்களை எடுத்து, அதிபர் எமக்கு ஒழுங்கு செய்துகொடுத்த விரிவுரை மண்டபத்தை எமக்குச் சொந்தமாக்கிக்கொண்டோம். போசன மண்டபத்தில் உள்ள மேசைகளை அடுக்கிக் கட்டில்களாகப் பாவித்தோம். நாற்காலிகளை வரிசைகளாக அடுக்கி எங்கள் உடுப்புப் பெட்டிகளை அடுக்கினோம். மெழுகுவர்த்திகளை ஒளிக்காகப் பயன்படுத்தினோம். கட்டிலுக்குப் பதிலாக அடுக்கிய மேசைகள் எல்லோரும் உபயோகிக்க இயலாத காரணத்தால் நாற்காலியில் இருந்த வண்ணம் துயில்கொண்டோம். சமையல் செய்வதும், உடைகள் துவைப்பதும், கிணற்றில் ஸ்நானம் செய்வதும், நனைந்த புத்தகங்களைக் காயவைப்பதும், அகதிகளாக வந்தோரை அவதானிப்பதுமாக ஒருவார காலத்தைச் சகபாடிகளுடன் கழித்தேன். குறிப்பிட்ட சிலர் ஒருவார காலத்திற்குள் தத்தம் இடங்களுக்குச் சென்றுவிட்டனர். ''விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல்'' என்ற சமூகப் பழமொழிக்கிணங்க, இக்கட்டான அந்த ஒருவார காலத்திலும் இரண்டு நாட்கள் கண்நோயினால் அவதியுற்றேன். ஒருவார காலம் பூர்த்தியானதும், கலாசாலைக்கு ''டாட்டா'' கூறிவிட்டு எஞ்சிய சகபாடிகளுடன் ''பஸ்'' பிரயாணத்தை மேற்கொண்டேன். குறிப்பிட்ட ஒருவார காலத்தினுள்ளும் கண்ணை இமை காப்பது போல் எம்மைப் பாதுகாத்தார் எங்கள் அதிபர். அதுமட்டுமா? எங்களை வழியனுப்ப இறுதிவரை பஸ்தரிப்பு நிலையத்திற்கும் சமூகமளித்து வழியனுப்பிவைத்த பெருமையும் அதிபரையே சாரும். கலாசாலை வாழ்க்கையில் மறக்கமுடியாத அநுபவம் மட்டுமின்றி, என் வாழ்க்கையிலும் உறங்கமுடியாத அநுபவமாகிவிட்டது, இயற்கை அன்னையின் பயங்கரச் சீற்றமாகிய சூறாவளி. இப்போ நீங்கள் வாசித்துவிட்டீர்கள்தானே! நீங்களே நிதானியுங்கள். ''அநுபவங்கள் உறங்குமா?''... விடை பெறட்டுமா''... வணக்கம்.

**செல்வி பி. ப. முத்தையா,**
(முதலாம் வருடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியாவிடை கூறுகின்றோம்




எங்கள் கலாசாலையில் மனையியல் விரிவுரையாளராகக் கடமையாற்றிய திருமதி பி. ஜி காசிநாதர் அவர்கள் 1-4-1978ல் கடமையிலிருந்து இளைப்பாறியுள்ளார். 19 ஆண்டுகள் (1959 – 1978) இக்கலாசாலையில் அரும்பணியாற்றிப் பல சிறந்த ஆசிரியர்களை உருவாக்க உறுதுணையாக இருந்துவந்துள்ளார். மனையியலோடு, ஆங்கிலம் சுகாதாரவியல் போன்ற பாடங்களைக் கற்பித்தலிலும், வழிகாட்டிகள் இயக்கம், கிறிஸ்தவ மாணவர் மன்றம் ஆகியவற்றிற்கு ஆலோசகராகவிருந்தும் வழி நடத்தியுள்ளார். அன்னாரின் சேவைக்கு நன்றி தெரிவித்து அவர் என்றும் இன்புற்று நலமே வாழ இறைவனைப் பிரார்த்தித்துப் பிரியாவிடை கூறுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருந்துகிறோம்



## பிரம்மஸ்ரீ சதானந்த ஐயர் அவர்கள்

எங்களுடன் பயிற்சி மாணவராக இருந்து கடந்த 21-9-1978ல் திடீரெனச் சிவபதமடைந்த பிரம்மஸ்ரீ சதானந்த ஐயர் அவர்களின் மறைவு குறித்து எங்கள் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சண்முகக் குருக்கள் - சௌந்தரம்மா தம்பதிகளின் பஞ்சம புத்திரரான பிரம்மஸ்ரீ சதானந்த ஐயர் அவர்கள் அளவெட்டி அருணாசலம் வித்தியாலய பழைய மாணவராவார். ஆசிரிய கலாசாலைக்கு வரும்முன் அப்புத்தளை ஹெல்பேன் தோட்டத்தில் ஆசிரியராகவிருந்து அரும்பணி செய்தார்.

இரண்டு குழந்தைகளின் தந்தையான இவர் தனக்கே உரிய பாணியில் அன்புடனும் பண்புடனும் பழகி அதிபர், விரிவுரையாளர்கள், சக மாணவர்கள் ஆகியோரின் நெஞ்சங்களில் நீங்காத இடம் பெற்றூர்.

நோய் காரணமாகத் திடீரெனக் காலமான அவரை இழந்து துடிக்கும் அவரது அன்புப் பாரியார் திருமதி சத்தியலெட்சுமி சதானந்தன் அவர்களுக்கும், குழந்தைகளுக்கும், உற்றூர் உறவினருக்கும் எங்கள் ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் ஆறுதலும் கூறுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்கும் காலம்

கல்வியின் நோக்கமும், அதன் பெறு பேறும் காலத்திற்குக் காலம், இடத்திற் கிடம், சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு வித்தியாசமான கொள்கைகளையுடையன வாய்க் காணப்படுகின்றன. பூர்வீகக் கிரேக்கர், இராணுவப் பயிற்சியே சரி யானமுறைக் கல்வி என்றும், உரோமர், ஒருவனை நல்ல பிரஜையாக்கவேண்டிய அறிவை ஊட்டுவதே சிறந்த கல்வியென் றும், பூர்வீக இந்தியர், கல்வியறிவற்ற ஏழை மக்களுக்கு வேண்டிய அறிவைப் புகட்டுவதற்கு ஏற்படும் தன்னலமற்ற நற்குணசாலிகளின் இயக்கப் பயிற்சியே கல்வியென்றும் கருதினர். தற்காலத் திலும் கல்வியின் நோக்கங்கள் பலவுள. அவற்றுள் நிறைந்த ஐஸ்வரியமான வாழ் வுக்கு ஆயத்தம் செய்துவிடுதலும், கல்வி யின் ஒரு முக்கிய நோக்கமாகும்.

கல்வியென்னும் உயர்ந்த கோபுரம், இளஞ் சிறுர்களின் உள்ளம், இயல்பு, அமைப்பு, நிகழ்ச்சிகள் முதலியவற்றின் திட்டமான அறிவால் நிலைநிறுத்தவேண் டும். இவ்வாறு பிற்கால வாழ்க்கையாகிய சிறந்த கோட்டையைக் கட்டுவதற்குகந்த அத்திவாரமிடும் பருவம் இளமைப் பரு வமே! அறநூலாரும் பேரின்பம் பெறு தற்காய் மனம், மொழி, மெய் என்பவற்றைத் தூய்மைப்படுத்தி, அன்பு, அறம், ஒழுக்கம் முதலிய தீய குணங்களை கைவரச் செய்தற்கும், நன்னிலையடை தற்கும் இளமைப் பருவமே ஏற்ற பருவ மெனக் கூறுவர். ஒருவனுக்கேற்ற மகிழ்ச்சியையும், திருப்தியையும் கொடுக் கும் ஒப்பற்ற செல்வம் மக்கட் செல்வ மாகும். இச்செல்வம் கல்வி, கேள்வி களிற் சிறந்து, பேரும் புகழும் பெற்று, பெருமதிப்புடன் விளங்கவேண்டுமென்ற பெருநோக்கைக் கொண்ட அவன், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத் துத் தன் பணத்தை மனங்கோணுது பிள்ளைக்காகச் செலவழிக்கின்முன்.

மக்கள் கவலையற்று களிப்புடன் இருக்கவேண்டும் என்பதில் அக்கறை கொண்ட பெற்ருேர் தம்மாலானவற் றைச் செய்யக் காத்திருப்பதால், மாணுக் கனுக ஒருவன் இருக்கும் இளமைப் பரு வமே கவலைகளற்ற பருவமாகும். மாணுக் கனின் மனம் கவலைத் திரைகளாற் சூழப் படாதிருத்தலாம், களங்கமற்ற தூய பளிங்குபோற் காணப்படுகிறது. கவலை யற்ற கள்ளமில்லாது துள்ளும் இப்பரு வத்தில்தான் எண்ணங்கள் மனதில் பதி கின்றன. அப்பொழுதுதரன் பிள்ளை பெருந்தன்மை, எளியதன்மை, பிறர் நினைவு, தன்நினைவு, நியாயம், அநியாயம், உண்மை, பொய், முயற்சி, சோம்பல் இவைகளின் வித்தியாசத்தைக் காண் கிறுன். இன்னும் இக்காலத்திற்தான் பிள்ளையின் பழக்கப் பயிற்சி முதன் முத லாக நிச்சயிக்கப்படுகின்றது.

தெளிந்த நீரிலும், களங்கமற்ற கண்ணுடியிலும் பிரதிபிம்பம் துலாபார மாய்த் தெரியும். கறையற்ற வெள்ளைத் தாளில் எழுதிய எழுத்து நன்கு புலப் படும். பலமுறை மையொற்றும் தாளில் எழுதிய எழுத்து துலாபாரமாகத் தோன் ருததுபோலப் பல தொல்லைகளும், அல் லல்களும் சூழ்ந்த முதியோர் மனத்தில் கல்வி நிலைகொள்ளாது. சிறந்த பொழி வுடன் விளங்காது. அன்றியும் கல்வி கற்றற்கான நேரமும், காலமும் கிட் டாது. வாழ்க்கையின் தேவைகளைப் பெறுவதற்காகப் போராடும் பருவத்தைக் கல்வித் துறையில் செலவிடுதல் எப்படி? ஆகவே, இளமைப் பருவமே கல்வி கற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கு ஏற்ற பருவமாகும். ஆன்றோர் கூறிய ''இளமையிற் கல் சிலையில் எழுத்து'' என்ற முதுமொழி இதனை விளக்கும்.

மானிடனாகப் பிறந்தவர்க்கு ஆறறிவு உண்டு. அவன் கற்கும் ஆற்றலுடையவன், பகுத்தறிவுடையவன். ஆயினும், இவன் அறிவு நிரம்பாத்தன்மை உடையது. இந்நிரம்பாத்தன்மையே, அவனை ஏற்றத்திற்கும், புகழுக்கும் உரியவனாக்குகிறது. ஆனால் ஊண், உடை, பழக்க வழக்கம், ஒழுக்கம் முதலியவற்றில் மனிதனுக்கு மனிதன் வேறுபாடுடையவனாகக் காணப்படுகிறான். வாழ்க்கையில் ஒருமைப்பாடில்லை. ஆனால் பிறர் உதவி இன்றேல் மனிதன் ஓர் அனாதை. ஒரு குழந்தை பால்குடி மறந்தபின்பும், நடக்கத் தொடங்கியபின்பும், தன் வாழ்க்கையைத் தானே நடாத்தும் அறிவற்ற அனாதையாயிருக்கிறான். இவன் தன் வாழ்க்கைக்குப் பெற்றோர், ஆசிரியர், சுற்றத்தார், சமூகத்தார் உதவிகளை எதிர்பார்க்கிறான். ஆகவே மனிதன் தன் தேவைகளைப் பெறுதற்கும், பிறர் தேவைகளுக்குதவவும், ஒற்றுமைப்பாடில்லாத சமுதாயத்தில் தான் கலந்து பொருந்தி வாழவும், தக்க கல்வியைத் - தன் இளமைப் பருவத்தில் தேடிக்கொள்ளவேண்டும்.

பறவை, மிருகம் போன்ற பிராணிகளின் இளமைப் பருவம் மிகக் குன்றியது. பறவை பறக்கவும், மிருகம் பால் குடி மறக்கவும் தொடங்கும் வரை அவற்றை அவற்றின் தாய் பாதுகாக்கின்றது. பின்னர் அவை தம் இயல்பூக்கத்தால் தாமே வாழ்கின்றன. அவற்றின் வாழ்வு ஓர் ஒற்றுமைப்பாடுடையது. ''கண்ட மாதிரியிற் கொண்டை முடிக்கவேண்டும்'' என்ற ஆசை அவற்றிற்கில்லை. நூற்றாண்டுக்கு முன் காகம் கட்டிய கூட்டுக்கும், தற்போதைய கூட்டுக்கும் வித்தியாசம் காண்பதரிது. மனிதன் அவ்வாறில்லாமல் புதுப்புது முறைகளைப் பின்பற்றக்கூடியவன். அவனுக்குக் கல்வி அறிவு இன்றியமையாதது. இதனை தெய்வப்புலவர் திருவள்ளுவர் கீழ்வரும் அடிகளில் மிகவும் தெளிவுற விளக்கியுள்ளார்.

''விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனையவர்''.

காலத்திற்குத் தக்கமுறையில் வாழவும், வாழ்வை நல்ல முறையில் விருத்தி செய்யவும் ஒழுக்கத்தோடியைந்த கல்வி வேண்டும். ''தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்'' என்றும், ''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?'' என்றும் ஆன்றோர் கூறுவர். ஒழுக்கம் விழுப்பம் உடையது. அதனை உயிரினும் ஓம்பிப் பாதுகாக்கவேண்டும். ஒழுக்கம், கல்வி, என்பவற்றிற்கு ஏற்ற பருவம் இளமைப் பருவமே! சுருங்கக்கூறின் இளமைப் பருவம் என்பது சக்தி மிகுந்த காலம், துணிச்சல் மிகுந்த காலம். இளைஞன் என்றால் தளர்வு, சோர்வு என்பதை அறியாதவன். அழகிய வீணையைச் செய்து சாக்கடையில் எறியலாமா? அதேபோல் கிடைத்த அருமையான இளமையைக்கொண்டு உலகுக்குப் பயன் கொடுக்க இளமைக்கல்வி அருமையுடைத்து.

**செல்வி பி. அருணாசலம்,**
(முதலாம் வருடம்)

''கல்வி ஒருவனை நல்ல மனிதப் பண்புடையவனாகவும், நற்குடிமகனாகவும் ஆக்கவேண்டும். ஆகவே கல்வி நல்ல மனிதரை உருவாக்கி அவர்களினூடாக நல்ல சமுதாயத்தை உருவாக்கவேண்டும்.'' — ரூசோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப் பாசம்

ஆலய மணி கணீர் கணீரென ஒலிக்கிறது. அமைதி நிறைந்த ஆலயத்தில் மேலும் அமைதி. எல்லோரும் எழுந்து நின்று பாடலை ஒலிக்கின்றனர்.

''அன்பின் தேவ நற்கருணையிலே
அழியாப் புகழுடன் வாழ்பவரே
அன்புப் பாதையில் வழி நடந்தே
அடியவர் வாழ்ந்திட துணைசெய்தீர்''

பாடல் தொடர்ந்துகொண்டே போகிறது. கடைசி வாங்கில் சோகமே உருவாக அமர்ந்திருந்த ஹென்றியின் உளளத்தில் பெரும் வேதனையை ஏற்படுத்தியது இந்தப் பாடல். ஆம். அவனது தாயாரோடு கடைசியாக இவ்வாலயத்திற்கு வந்த அன்று இதே ஆலயத்தில் இதே பாடல் ஒலித்ததே. அவனது சிந்தனைக் குதிரை பின்நோக்கி ஓடத் தொடங்குகிறது.

பாசம், அன்பு, கருணை அத்தனையும் சேர்த்த ஓர் இதயம்தான் தாய். ஒவ்வொருவரும் தாயின் அன்பையும் கருணையையும் பற்றி ஏதேதோ கூறுவர். ஆனால் எல்லாவற்றிலும் ஊறித்திளைத்து – அநுபவித்து இன்று அந்த ஆன்மா இல்லையே என்று ஏங்கித் தவிப்பவன் ஹென்றி. உண்மைதான். தாயின் அன்பிற்கு ஈடான அன்பு இந்த உலகத்தில் எதுவுமே இல்லை. ஹென்றி வளர்ந்துவிட்டான். அவனும் இன்று ஒரு வாலிபன். ஆனால் அந்தத் தாய்க்கு அவன் ஒரு குழந்தை. ஹென்றியின் முகம் சிறிது வாடியிருப்பதையோ, அன்றி அவன் இரவில் படித்துக் களைத்திருப்பதையோ பார்த்துப் பொறுக்க மாட்டாதவள். மனம் கலங்கிப்போவாள். ஏதோ ஒரு பெரிய விபரீதமே நடந்ததைப்போலத் தவிப்பாள். அவனும் ''என்னம்மா நடந்துவிட்டது? ஏன் இப்படி வேதனைப்படுகிறீர்கள்? நான் என்ன சின்னப் பிள்ளையா?'' என்றால் போதும். ''நீ என்னடா கூறுகிறாய்? டில்லிக்கு ராஜாவானாலும் தாய்க்குக் குழந்தை தானே. இதெல்லாம் உனக்கு விளங்காது. இனி நீ இரவில் கண்விழித்துப் படிக்க வேண்டாம்'' என்று தடை போட்டு விடுவாள். அப்படித் தன் உயிரிலும் மேலாக அன்பாக நேசித்து வளர்த்த தாய் இன்று அவன் ஓர் உன்னத நிலைக்கு வரும் சமயம் - அதைப் பார்த்து மனச் சந்தோஷப்பட இல்லையே என்று எண்ணும்போது அவன் உள்ளம் ஏங்கித் தவித்தது. திடீரெனத்தான் நினைத்தான், பக்கத்தில் தம்பியும் அல்லவா இருக்கிறான். அவன் முன்னிலையிலா தன் வேதனையைக் காட்டுவது. நானே இவ்வளவு வேதனைப்படும்போது என்னினும் சிறியவனான அவன் எவ்வளவு வேதனைப் படுவான்? அவனிடத்தில் தன் இயலாமையைக் காட்டக்கூடாது என்று எண்ணிய அவன், சற்று நிமிர்ந்து வாங்கில் அமர்கிறான். தன் முகத்திலும் போலிப் புன்னகை ஒன்றை ஏற்படுத்திக்கொள்கிறான். பாடலும் முடிகிறது.

அடுத்து போதகர் மேடையில் ஏறுகிறார். அவர் கூறுகிற ஒவ்வொன்றும் நேரடியாகக் கடவுளே வந்து அவரிடம் பேசுவதுபோல் இருக்கின்றது. உலகம் ஒரு மாயை. கண் விழித்து கண் மூடுவதைப்போல்தான் வாழ்க்கை. அந்த இடைவெளிக்குள் எங்களுக்கு எத்தனை சொந்தம் - எத்தனை பந்தம். இறைவன் சிலவற்றை நாம் பிறக்குமுன்னே ஏற்படுத்தியுள்ளார். சிலவற்றை நாமே ஏற்படுத்திக் கொள்கிறோம். சிலருக்கு வாழ்க்கை ஒரு போராட்டமாக - புயலாகத் தோன்றுகிறது. சிலர் அவைகளுக்கு எதிர் நீச்சல் போட்டு வெற்றி காண்கிறார்கள். சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற இடத்திலே நிற்கிறார்கள். சிலரின் வாழ்க்கை தெளிந்த நீரோடைபோல் சலனமற்று ஓடுகிறது. இத்தனைக்கும் காரணம் இறைவனின் செயலே. ஏழையையும் படைத்தார், பணக்காரனையும் படைத்தார். குடிசை இருப்பதால்தான் கோபுரத்திற்குப் பெருமை. அதேபோல் தான் ஏழையினால் செல்வந்தனுக்கு அந்தஸ்து, கௌரவம். இன்னும் ஏதேதோ கூறுகிறார். அவை ஒன்றும் அவனது மனதில் படவில்லை. கடைசியாகக் கூறிய வார்த்தைகள் அவன் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. ஆம். அவர் கூறுகிறார். "உன் வழிகளைக் கர்த்தருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிரு. அவரே உன் காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்." மனதில் ஒரு நம்பிக்கையோடும், உற்சாகத்தோடும் ஆலயத்தைவிட்டுத் தம்பியுடன் வெளியேறுகிறான்.

வீட்டிற்கு வந்த அவன் தனது நொண்டியான தந்தையுடனும், தம்பியுடனும் இருந்த பழஞ்சோற்றைச் சாப்பிட்டான். தன் அறைக்குச் சென்று தன் மேசையில் இருந்த கடிதங்கள் ஒவ்வொன்றையும் பிரித்தான். சிலது அவனது நண்பர்கள் அவன் பட்டதாரியாகி வெளியானபோது பாராட்டுத் தெரிவித்து எழுதியவை. சிலது அவனது தாயின் இழப்பிற்காக அவனுக்கு எழுதிய அனுதாபக் கடிதங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அவன் வேலைகளுக்கு விண்ணப்பித்திருந்த விண்ணப்ப மாதிரிக் கடிதங்களும் – நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு அனுப்பியிருந்த கடிதங்களுமாம். எல்லாவற்றையும் பார்த்து ஓர் ஏக்கப் பெருமூச்சு விட்டான். இனி எங்கே தனக்கு உத்தியோகம் என்று வேதனைப்பட்டவனாகப் படுக்கையில் விழுந்தான். இருப்பினும் ஆலயத்தில் கேட்ட நம்பிக்கை வாசகங்கள் அவனுள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியை அளிக்கிறது. வாசகங்களை ஒருமுறை கூறிப்பார்க்கிறான். எத்தனை நம்பிக்கையான வார்த்தைகள். எண்ண அலைகள் பின்னோக்கி ஓடத்தொடங்கின.

சிறுவனான ஹென்றி தனது வீட்டு முற்றத்தில் தம்பியுடன் மண்ணில் வீடு கட்டி விளையாடுகிறான். அவனது தாய் இவர்களது விளையாட்டை ரசித்தவாறே தகப்பனின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு நிற்கிறாள். ஒரு வக்கீல் வீட்டுக் கார்ச் சாரதி அவனது தந்தை. காலை ஆறு மணிக்குச் செல்பவர் மாலை ஆறு மணிக்குத்தான் வருவார். இதை அறிந்தும் அவனது தாயின் உள்ளம் அன்று பரபரப்பு அடைகிறது. ஏனோ வழக்கத்திற்கு மாறான நேரத்தில் அவனை எதிர்பார்க்கிறாள். பக்கத்து வீட்டுப் பையன் ஒருவன் ஓடிவருகிறான். இவள் உள்ளம் வேகமாக அடிக்க ஆரம்பிக்கிறது. தன்னை மறந்தவளாக, தன் கரங்களை மார்பில் வைத்தவளாகப் பரபரக்கிறாள். ஓடிவந்த அந்தப் பையன் கூறுகிறான்: "மாமி! மாமி!! மாமாவின் கார் ஒரு லொறியுடன் மோதியதால், மாமா பலத்த காயங்களுடன் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்படுகிறார்". பையன் ஒரே மூச்சில் இளைக்க இளைக்கக் கூறிவிட்டான். ஆனால் அதைக் கேட்கும் நிலையற்ற ஹென்றியின் தாய் மூச்சற்று அடியற்ற மரம்போல் விழுந்தாள். அவர்கள் உள்ளத்திலும் ஏதோ தடுமாற்றம். ஓடிப்போய் அம்மாவைத் தட்டிப்பார்க்கிறார்கள். ஊம்... ஹூம்... சப்தம் எதுவுமே இல்லை. வீறிட்டுக் கத்துகிறார்கள். அதற்குள் பக்கத்து வீட்டுச் சிறுவன் அவனது தாயை அழைத்துவருகிறான். சிறிது நேரத்தில் தெளிவடைகிறாள். பிறகு அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக அவர்கள் இருவரையும் அணைத்தபடி தள்ளாடித் தள்ளாடி நடக்கிறாள். யார் யாரோ பல ஆறுதல் மொழிகளை அம்மாவிடம் கூறுகின்றனர். எதுவுமே அம்மாவிற்குக் கேட்பதாகத் தெரியவில்லை. அம்மா புலம்பியபடியே வைத்தியசாலையை நோக்கி நடக்கிறாள் – நடக்கவில்லை ஓடுகிறாள்.

அங்கு அப்பா உடைகள் அனைத்தும் இரத்தம் தோய்ந்த நிலையில் விழிகள் மூடியபடி எவ்வித சலனமுமின்றி கட்டிலில் கிடக்கிறார். சீருடையில் இருந்த தாதிமார் வைத்திய பரிசோதனைக்காக வைத்தியர் வருவதாகவும், எங்களைப் பார்க்க அனுமதிக்க முடியாதென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிவிட்டார்கள். அம்மா ஏங்கிப்போய் விட்டாள். செய்வதறியாது வெளியேறுகிறாள். சோர்ந்த முகத்துடன் அங்கு கிடந்த வாங்கில் அமர்கிறாள். மாலை ஐந்து மணி. மணி அடிக்கும் ஒலி கேட்டு அனை வரும் அவசர அவசரமாக உணவுப் பொட்டலங்களுடனும் தேநீர் இன்னும் இதரப் பொருட்களுடனும் வார்டினுள் நுழைகின்றனர். தாயாரும் எங்களை அழைத்துக்கொண்டு சோர்ந்த முகத்துடன் உள்ளே நுழைகிறாள். அங்கே அப்பாவைப் பார்க்கிறோம். அப்பாவின் உடம்பிலிருந்து அதிகமான இரத்தம் வெளியேறிவிட்டதால் அப்பாவிற்கு இரத்தம் கொடுக்கப்படுகிறது. இன்னும் பிரக்ஞையற்ற நிலையிலே மூடிய விழிகளுடன் இருக்கிறார். அம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொல வெனக் கொட்டுகிறது. வைத்தியர் வருகிறார். அவரைக் கண்டதும் அம்மா வழிந்தோடும் கண்ணீரைத் துடைக்கிறாள். அப்பாவின் வலதுகால் எலும்பு பலத்த சேதத்துக்குள்ளாகி இருப்பதாகவும், அந்தக் காலை எடுக்கவேண்டும் எனவும் வைத்தியர் கூறுகிறார். அம்மா பேசத் திராணியற்று சிலையாய் நிற்கிறாள். பேச்சுக்குரல் கேட்டு அப்பா கண்விழித்தார். அப்பா ஏதோ பேச முயற்சித்தார். கதைக்கமுடியாத நிலையில் ஓர் ஏக்கத்தோடு எங்கள் ஒவ்வொருவரையும் பார்த்தார்.

நிமிடங்கள் மணித்தியாலமாகி, மணித்தியாலங்கள் நாட்களாகி, நாட்கள் வாரமாகி, வாரங்கள் மாதமாகி, மாதமும் மூவிரண்டாகிவிட்டது. அப்பா ஒட்டிய கன்னங்களுடனும், உலர்ந்த உதட்டுடனும், ஊன்றுகோல்களை இரு கையிடுக்கிலும் பிடித்தவாறு வீட்டினுள்ளே நுழைகிறார். திரண்ட தோள்களும், அகன்ற மார்பும், வீறு நடையும் தனக்கே உரியது என்று வாழ்ந்த அன்புத் தந்தையின் தோற்றமா இது. இந்த ஆறு மாதங்களுக்குள் அம்மா பட்ட கஷ்டங்கள்... எண்ணிப்பார்க்க முடியாதவை. விடிய நான்கு மணிக்கே எழும்பி விடுவாள். அப்பம், இடியப்பம், பிட்டு அவித்துக் கடைகளுக்குக் கொடுப்பாள். மிகுதி நேரத்தில் தையல் இயந்திரத்தோடு இயந்திரமாக இயங்கி ஆடைகள் தயாரித்து விற்பாள். இத்தனையும் செய்து எனக்கும், தம்பிக்கும் உடை, பாடசாலைச் செலவு, வீட்டுச் செலவு எல்லாவற்றையும் கவனித்து வறுமையிற் செம்மையாக வாழ்க்கை நடத்தினார். ''உண்டான போது கோடானு கோடி உறமுறையார் செல்வம் துஞ்சிவிட்டாற் கண்டாலும் பேசார் அழைத்தாலும் வாரார்'' என்று யாரோ கூறிய உண்மைக்குஒப்ப ஹென்றியின் குடும்பம் சிறப்போடு வாழ்ந்த காலத்தில் எந்நேரமும் விழாக்கோலம் பூண்டிருந்த அவனது இல்லம் இன்று மயான அமைதியோடு காட்சி அளிக்கிறது. கூடப் பிறந்தவர்கள்கூட இன்று தெரியாதவர்களாகி விட்டார்கள்.

ஆனால் இத்தனைக்கும் இடையில் ஹென்றியின் தாய் தன் இரு செல்வங்களையும் நேர்மையாய் வளரப் பழக்கினாள். ஒருமுறை நடந்த சம்பவத்தை எண்ணிப் பார்க்கலானான். அவனது தந்தை ஒவ்வொரு மாதமும் சம்பளம் எடுத்தவுடன் இவர்கள் இருவருக்கும் உண்டியலில் போட சில்லறைகள் கொடுப்பது வழக்கம். ஒருநாள் ஹென்றிக்குத் திடீரென ஓர் ஆசை ஏற்பட்டது. நண்பர்கள் கடையில் போய் பொருள்கள் வாங்குவதுபோல் தானும் வாங்கவேண்டும் என்று எண்ணியவனாகத் தன் பணத்தை எடுத்துக்கொண்டு தாய்க்குத் தெரியாமல் போய் பென்சில், றப்பர் போன்ற சில்லறைப் பொருள்களை வாங்கித் தன் நண்பர்களுக்கும் கொடுத்துத் தானும் எடுத்துக்கொண்டான். வீட்டுக்கு வந்த அவன் உள்ளம் குறுகுறுக்கிறது. அவன் முகத்தைப் பார்த்த அவனது தாய் விடயத்தைக் கேட்க அவன் முதலில் மறுக்கிறான். பின் உண்மையைக் கூறுகிறான். அவனது தாய் அவனையும் இழுத்துக்கொண்டு கடையில் போய்க் கடைக்காரரிடம் உண்மையைக் கூறுகிறாள். அவன் எல்லோர் முன்னிலையிலும் மன்னிப்புக் கோருகிறான். அந்தச் சிறு நிகழ்ச்சி அவனது வாழ்வில் மறக்கமுடியாததாகிவிட்டது. அன்றிலிருந்து வீட்டிலோ, பள்ளியிலோ ஒரு சிறு பொருளைக்கூட எடுக்க அவனது கை நீள்வதில்லை. இதனால் அவன் பள்ளியில் அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது நண்பர்கள், ஆசிரியர்கள், அதிபர் உட்பட அனைவரின் நன்மதிப்பையும் பெற்றான். இவ்வாறு சிந்தித்தவன் நித்திரையாகிவிட்டான்.

மாலையில் நண்பர்கள் யாரையாவது சந்தித்து உதவி கேட்போம் என்ற நிலையில் நடக்கிறான். பாதையில் நடந்த அவன், தன் ஆசிரியர் ஒருவரைக் கண்டு தன்னை மறந்து நிற்கிறான். அவனுக்கு ஆரம்ப வகுப்பில் படிப்பித்த ஆசிரியர் - வாரிசு அற்றவர் - இன்று ஒரு பெரிய தோட்டத்திற்கு அதிபதியாய் இருப்பவர். திரும்பி அவரையும் கூட்டிக்கொண்டு தன் வீட்டுக்குப் போனான். அங்கு அவனது நிலைமையைக் கூறாமலே உணர்ந்த ஆசிரியர், தான் அங்கு தன் நண்பர் வீட்டுக்கு வந்ததாகவும், தன் ஊருக்குப் போய் கடிதம் எழுதுவதாகவும் கூறிப் போகிறார். அவர் போனபின் யோசிக்கிறான். இவரிடமாவது எனக்கு ஒரு வேலை தேடித்தருமாறு கேட்டிருக்கலாமே என. பின் அன்று ஆலயத்தில் கேட்ட வசனத்தை நினைத்து ஆறுதல் அடைந்தான்.

ஆசிரியர் போய் மூன்றாவது நாள். வழமையாக யோசிப்பது போல் தன் கட்டிலில் சாய்ந்து யோசிக்கிறான். தம்பி ஒரு கவருடன் வந்து ''அண்ணா, கடிதம்'' எனக் கொடுக்கிறான். கையெழுத்தைப் பார்க்கிறான். தெரிந்ததாக இல்லை. எங்கேயாவது நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு வந்திருக்கும், போவதற்குப் பணம் வேண்டுமே என்று அழுதவனாகப் பிரித்துப் படிக்கிறான். ஆசிரியர்தான் எழுதியுள்ளார். நூறு ரூபா பணமும் அனுப்பியுள்ளார். அவர் எழுதியதாவது, உடனே வந்து தனது தோட்டத்தில் காலியாகி இருக்கும் இலிகிதர் பதவியை மேற்கொள்ளும்படி. தான் காண்பது கனவா நனவா என்று அவனுக்கு விளங்கவில்லை. தன்னைக் கிள்ளிப் பார்த்துக்கொள்கிறான். உண்மைதான் கனவல்ல. உண்மை என்பதை விளங்கிய அவன் ஓடிப்போய்த் தந்தையிடம் கூறுகிறான்.

அடுத்த நாளே வண்டி ஏறுகிறான். அங்கு ஆசிரியர் வீட்டிலே தங்கினான். கடைசி இலிகிதர் வேலை. ஏழாவது இடம். வேலையை முகமலர்ச்சியோடு ஏற்றுக்கொண்டான். வேலையில் தன் முழுத் திறமையைக் காட்டினான். தன் வேலையைத் தவிர ஏனையவர்களின் வேலையையும் செய்யப் படித்தான். மூன்றே மாதத்தில், மூன்றாவது இலிகிதர் வேலையை விட்டு விலகினார். இவனது திறமையைக் கண்ட தோட்டச் சொந்தக்காரரான ஆசிரியர் அவனை அப்பதவியில் சேர்த்தார். அத்தோட்டத்தில் ஊழல்கள் அதிகம் என்பதையுணர்ந்த ஹென்றி மற்ற அனைவருக்கும் முன்மாதிரியாக நடக்க ஆரம்பித்தான். இவனது நேர்மையில் ஆசிரியருக்கு முன்னிலும் பல மடங்கு அன்பும் மரியாதையும் ஏற்பட்டது.

ஒருநாள் அனைவரும் சாப்பிடும்போது ஆசிரியர் கூறுகிறார், ''மகனே! எனக்கோ வயதாகிவிட்டது. இனிமேல் தோட்டத்தை நிருவகிக்கவோ, ஓடியாடித் திரியவோ என்னால் முடியாது. இவ்வளவு நாளும் தகுதியான ஆள் இல்லையே என மிகவும் கவலைப்பட்டேன். கடவுள்தான் உன்னைக் காணச்செய்துள்ளார். எனவே தோட்டம், தொழிற்சாலை அனைத்தையும் உன்பேரில் எழுத உன்னைப் பெறாத தாயான என் மனைவியிடமும் கூறிவிட்டேன். அவளும் முழுச் சம்மதத்தையும் தெரிவித்துவிட்டாள். ஆதலால் இது விடயமாக நாளைக்கு ஒரு வக்கீலைப் பார்க்க யோசித்துள்ளேன். உன் விருப்பம் என்ன?'' என்று கேட்டார். ஹென்றியும் சூழ்நிலையை மறந்து கண் கலங்கியவனாக ஓடிப்போய் ஆசிரியரைக் கட்டிப் பிடித்து ''அப்பா! இவ்வளவு பெரிய வசதியை நான் கேட்கவில்லை. எனக்குக் கிடைத்த உத்தியோகமே போதும். உங்கள் ஆசீர்வாதத்தையும் அன்பையும்தான் எதிர்பார்க்கிறேன்'' என்றான். பிறகு ஒருவாறாக அவனைச் சமாதானப்படுத்தி ஆசிரியரும் மனைவியும் சம்மதிக்க வைக்கின்றனர்.

அடுத்த நாளே ஆசிரியர் இவனது வீட்டிற்குச் சென்று, இவனது தந்தை, தம்பி, இவனது தந்தை சாரதியாக வேலை செய்த வக்கீல் அனைவரையும் கூட்டிக் கொண்டு வந்தார். இவனுக்கு ஆசிரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரின் சொத்து முழுவதும் எழுதப்படுகிறது. வக்கீலுக்கோ பெரிய அதிர்ச்சி. வாழ்க்கையிலே பெரிய தோல்வியைக் கண்ட குடும்பம் - யாருமே கைகொடுத்து உதவாத - எல்லோராலும் காரி உமிழப்பட்ட குடும்பம், இன்று ஓர் உன்னத நிலைக்கு வந்துவிட்டது. எல்லோரும் மகிழ்ச்சியில் திளைக்கின்றனர். இவன் உள்ளத்தில் மட்டும் ஒரு கவலை. ஆம். அவனுக்காகக் கஷ்டப்பட்ட - அவன் வாழ்வின் முன்னேற்றத்திற்காகத் தன்னையே மெழுகு வர்த்தியாக உருக்கிய அன்புத் தாய் இல்லை இன்று.

இவனது வாழ்வின் முன்னேற்றத்திற்கு யார் காரணம்? தன் சுகத்தைவிட மகனின் கல்வியில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென இரவு பகலாக உழைத்த தாயா? அவனது சொந்த முயற்சியா? அவனது தாய் படிப்பித்த நேர்மையா? அல்லது எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனின் அருளா? உண்மைதான் இவன் கடவுளில் வைத்த நம்பிக்கைதான் அவரால் காட்டப்பட்ட நற்காரியம்.

**செல்வி ருத் சமாதானம்,**
(முதலாம் வருடம்)

---

" பிறர் உனக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிருயோ அதையே நீ பிறர்க்குச் செய் "
— இயேசுநாதர்.

" ஒரு மணி நேரத்திற்குள் பன்னிரண்டு அறிஞர்கள் அளிக்கக்கூடிய பதில்களைவிட ஒரு நிமிஷத்தில் ஒரு முட்டாள் கேட்கக்கூடிய கேள்விகள் அதிகமாய் இருக்கும் "
— லெனின்.

" தனக்கு ஒன்றும் தெரியாது என்று நினைப்பவனுக்குக் கொஞ்சமாவது புத்தி உண்டு. தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைப்பவன் முழு முட்டாள் "
— புத்தர்.

" பிள்ளையின் வாழ்விலும், அதன் அனுபவங்களிலுமே அதனுடைய கல்வி அடங்கியுள்ளது. எனவே பிள்ளையின் இயல்பும், அதன் விருத்தியுமே பிள்ளையின் கல்வியில் முக்கிய அம்சமாகும் "
— ரூசோ.

" மனிதனிலிருக்கும் முழு நிறைவை விருத்தி செய்வதே கல்வி "
— கார்ல்மார்க்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றங்கள் கண்டீரோ வாழ்க்கையிலே!

மலையேறித் தளிர் பறிக்கும் மாதர்களே
மாற்றங்கள் கண்டீரோ வாழ்க்கையிலே
தலைமேற் கூடைபோட்ட மாதர்களே
தனி நிகராய் வாழவேண்டும் இந்நாட்டினிலே.

காலைமுதல் மாலைவரை கஷ்டப்பட்டும்
கவலையைப் போக்கிட வழியில்லையோ?
சாலையிலே தேயிலையை நிறுத்துவிட்டு - கல்விச்
சாலையினை தேடினையோ வாழ்க்கையிலே.

பனிபடர்ந்த மலைகளையும் பார்த்திடுவாய்
பகலவனைக் கண்டவுடன் மாறவில்லையோ?
துணிவுடனே துன்பமதை போக்கிடவே
தோள் கொட்டி எழுந்திடுவாய் மேதினிலே.

மலையகம் உயர்ந்து நிற்பதுபோல் - நம்
நிலையினை உயர்ச்சி காட்டிடுவாய்
அலையென துன்பங்கள் வந்தாலும்
அனைத்தையும் விரட்டி ஓட்டிடுவாய்.

மந்தைகளாய் எந்நாளும் வாழாமல்
மாற்றங்கள் செய்திடுவீர் வாழ்க்கையிலே
கந்தனை எந்நாளும் துதித்திடுவீர்
காலமெல்லாம் களிப்புடனே வாழ்ந்திடவே.

ச. சுந்தரம்பிள்ளை,
(1978 - 1979)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணளி மதியும் தமிழ்க் கவிஞரும்

இயற்கையின் எழில் நடங்கண்டு களிநடம் புரிபவன் கவிஞன். இயற்கையின் ஒவ்வோரணுவும் கவிஞன் மனதில் கலைக்கூத்தாடுகின்றது. கதிரவன் ஒளி புகாவிடத்தும் கவிஞனின் ஞான ஒளி புகுந்து கவிதையொலி பரப்புகின்றது. நம் கண்முன் ஊசலாடும் பொருட்களைப் பற்றியோ அன்றி நம் கற்பனைக்கும் எட்டாத அசாதாரணப் பொருட்களைப்பற்றியோ, அபாரமாகப் புகழ்ந்து கவிபாடும் சக்திமிக்கவனாகக் கவிஞன் உலகிடைத் தோற்றுகின்றான். பொதுவாகச் சந்திரனைப்பற்றிப் பாமாலை தொடுக்காத பாவலன் இல்லையென்றே கூறலாம். ஒவ்வோர் கவிஞனும் ஒவ்வோர் கோணத்தில் வெண் மதியின் தண்ணளியைக் காண்கிறான்.

"மீனிலமோடிப் பறக்குதம்மா - ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா"

எனக் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை தம்மை மறந்து நின்று பாடுகின்றார். எண்ணிலடங்கா மின்னும் தாரகைகள் நீலவானில் நீந்தி விளையாடுகையில் அதனூடே வெள்ளிப் படகெனச் சந்திரன் தோன்றும்பொழுது நம்மில் யாருக்காவது மீன்களைப்பற்றியோ அன்றேல் சாதாரண ஓடத்தைப்பற்றியோ ஞாபகம் உதயமாகிறதா? இல்லை. இம்மட்டோ

"திங்கள் முடிசூடு மலை - தென்றல்
விளையாடு மலை"

எனக் குளிர்மதியை மலைகட்கெல்லாம் முடியென விளங்கும் இமாலயத்தின் முடியெனக் காண்கிறார் ஒரு புலவர். அம்மலைக்குச் சந்திரனைச்சூடி அழகாகப்பாடி அழியாப் புகழ் அளித்து ஆனந்தமடைகின்றார் அக்கவிஞர்.

கார்முகில் கண்டு தோகைமயில் ஆடுதல்போன்று, இயற்கையைக் கண்டு இன்புறுகின்றான் கவிஞன். அந்த இயற்கை இன்பத்திலொன்றியெழுந்த கவிதா உணர்ச்சியால் காவியச்சோலை அமைத்தலே கவிஞன் இயல்பு. அக்காவியச் சோலையில் நவரசங்களும், இயற்கை, செயற்கை காமலர்களுமுள. பாலர்முதல் முதியோர் வரையும் படித்து ரசிக்கும் வண்ணம் பாமலர் தொடுத்த பாமாலைகளையளிப்பவர் பாவலர்.

இன்னும் அம்புலி ஆகாயத்தில் உதயமானவுடன் சிறுவர்கட்குத்தான் என்ன ஆனந்தம்! அவர்கள் உடனே "அம்புலி! அம்புலி! வா! வா!! வா!!! ....." எனப் பாடி ஆடுகின்றனர். அப்பாலர்களின் தூய உள்ளத்தில் சந்திரனின் இயற்கை அழகை ரசிக்கும் சக்தியைக் கவிமூலம் ஊட்டிய கவிஞன் பெருமைதானென்னே!

"நிலா! நிலா!! வா, வா, வா.
நில்லாமல் ஓடி வா"

என்னும் கீதம்பாடி நிலாவைக் காட்டிக் குழந்தையை ஏமாற்றி, அமுதூட்டும் எத்தனையோ அன்புத் தாய்களை நாம் காண்கின்றோம். சில சமயங்களில் சிறுவர் மாத்திரமல்ல, நாமும் அப்பாட்டில் மயங்கி ஆகாய வீதியிற் பவனிவரும் முழுமதியிடம் நம்மைப் பறிகொடுக்கின்றோம். இத்தகைய கவிபாடிய கவிஞனின் குழந்தையுள்ளந்தானென்னே!

ஒரு புலவர் மதியின் ஒளியால் மனம் புண்படும் ஒரு தலைவனைப் பாட்டில் வெகு அழகாகக் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மேனி கொதிக்குதடி – நிலவு
வெறி கொண்டு தாக்குதடி''

என உளமுருகிப் பாடுகின்றான். தலைவன். இந்நிலையில் அவனுக்குத்தான் திங்கள் மீது எவ்வளவு வெறுப்பு. அதேநேரத்தில் இன்னொருபக்கம் தங்கள் இதயங்களை மாற்றிக்கொண்ட இருவர் நிலாவொளியில் நின்று,

''நீலவானும், நிலவும்போல்
நிலைபெயராது இன்பம்
காண்போம்''

எனத் தம்மை மறந்து பாடுகின்றனர். இக்கவிகள் இரண்டையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது இரு பாக்களிலும் வட, தென் துருவங்கள் போன்ற அபிப்பிராய பேதங்கள் தோன்றுகின்றனவன்றோ! இரண்டும் ஒரே சந்திரனைக் குறித்து வெறுப்பும், விருப்பும் காட்டுகின்றனவே! இதற்கிடையில் இன்னொருவர் சந்திரனைத் தமது தூதாக எண்ணி,

''எனது உயிர் உருகும் நிலை
சொல்லுவாய் நீ வான்மதி''

என்று உளமுருகித் திங்களை நோக்கிப் பாடுகின்றார்.

இவர்களெல்லாம் ஒருபுறமிருக்க, தேசவிடுதலைக்குப் பாமுரசறைந்த பாரதியிடஞ் செல்வோம். அவரும் இயற்கையைக் கண்டு இன்புறாது இருந்துவிடவில்லை. அவருடைய விடுதலைப் போர்ப் பாட்டுக்களிலும். அமோகமாக இயற்கை மணங்கமழ்கின்றது. பாரதியும் சந்திரனை மறந்துவிடவில்லை.

''மேனி கொதிக்குதடி - தலை சுற்றியே
வேதனை செய்குதடி!
வானிலிடத்தையெல்லாம் –
இந்த வெண்ணிலா
வந்து தழுவுது பார்'' என்று பாடிய

பாரதி மீண்டும்,

''எல்லையில்லாதோர் வானக்கடலிடை
வெண்ணிலாவே - விழிக்
கின்பமளிப்பதோர் தீவென்றிலகுவை
வெண்ணிலாவே'' — என்றும்,

''சீதமணி நெடுவானக் குளத்திடை
வெண்ணிலாவே - நீ
தேசுமிகுந்த வெண்டாமரை
போன்றனை
வெண்ணிலாவே'' என்றும் பாடுகின்

றார். அவர் வெண்ணிலாவைப் பலவிதமான காட்சிகளிலும் கண்டு ரசித்துப் பாடுகின்றார். முதலில் கடலெனத் தோன்றிய மேகமண்டலம், சிறிது நேரத்தில் குளமாகத் தோன்றுகின்றது. தீவு போன்று காட்சி கொடுத்த குளிர்மதி பின்னர், வெண்டாமரையாக மாறிவிடுகின்றது. பாரதியின் இயற்கையைக் கண்டு ஆனந்திக்கும் கவிதாசக்திதானென்னே!

''வாராய் நிலவே வையத்திருவே
வெள்ளைத் தீவில் விளையும் கடலே
வானப் பெண்ணின் மதமே ஒளியே
வாராய் நிலவே வா!''

என்று ஒருவன் தன்னை மறந்து உணர்ச்சி வசப்பட்டுச் சந்திரனை ஆசையுடன் கூவி அழைக்கின்றான். சந்திரன் இல்லாவிட்டால் வானத்தை இருள் கவிந்துவிடுமன்றோ! அதை எவ்வளவு அழகாகப் பாடிவிட்டான். சந்திரனே ஆகாயத்தின் ஒளி, வானப் பெண்ணின் மதம் என்று வியந்து கூறுகின்றான்.

அழகிய பொருளில் சிறிய குறையிருப்பின் அது பெருங் குறையாகவே நமக்குத் தோன்றும். ஆனால்

''...........திங்கள்
கறையிருளை நீக்கக் கருதாதுலகில்
நிறையிருளை நீக்குமே நின்று''

என்று பாடுகின்றார் புலவர். சந்திரனிடமுள்ள சிறிய கறையைக்கொண்டே புலவர் சந்திரனைச் சிறப்பிக்கின்றார். அத்துடன் சந்திரனின் தயாள குணத்தையும் வெளிப்படுத்தி நம் எல்லோரையும் சந்திரன்மீது நன்றி ததும்பப் பார்வை செலுத்தச்செய்யும் புலவரின் புலமையே புலமையாகும்.

இஃதிவ்வாறிருக்க இளங்கோவடிகளின் முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தைப் பார்ப்போம். அவர் சந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரனை மறந்துவிட்டாரா! சிலம்பு காரண மாக நிகழ்ந்த வரலாற்றைக் கூறும் போது சந்திரன் வர்ணனை தேவையில்லை யென எண்ணிவிட்டாரா! இல்லை

''திங்களைப் போற்றுதுந்
திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்
வெண்குடை போன்றிவ்
வங்கணுலகளித்தலான்''

என்று திங்கள் என்ற மங்கல மொழி யைத் தமது காப்பியத்தில் முதலிலேயே கூறிவிட்டார். ஆனல் சாதாரணமாகக் கூறிவிடவில்லை. திங்களைப் போற்று வோம் என்று பக்தியுடன் கூறுகின்றார் இளங்கோவடிகள்.

இச்சான்றுகளிலிருந்து சந்திரன் எத் தனையோ எண்ணிலடங்காத கவிஞரின் இதயங்களைக் கொள்ளைகொண்டான் என் பதில் ஐயமில்லை. ஒவ்வோர் புலவரும் இயற்கை வனப்பில் சந்திரனிடத்திலேயே அதிகமாகத் தம்மைப் பறிகொடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**திருமதி R. சிவபாலன்,**
(முதலாம் வருடம்)

---

'' கபடமற்ற உண்மையுள்ள பண்பு சுவர்க்க வாயிலின் திறவுகோல் ''
— மகான் அரவிந்தர்.

'' உலகத்திலே மிகச் சிறந்த சீர்திருத்தக்காரன் யார் தெரியுமா ? தன்னைச் சீர்திருத்திக்கொள்பவனே ''
— பெர்னட்ஷோ.

'' பரிசுத்தமான இருதயத்தில்தான் அன்பு இருக்கும் '' — மகாத்மா காந்தி.

'' எவ்வுயிரிலும் இரக்கங்கொள்ளுங்கள் '' — புத்தர்.

'' குழந்தையின் உள்ளம்போல் கள்ளமற்று இருங்கள் '' — இயேசுநாதர்.

'' மனிதனுல் முடியாத காரியம் ஒன்றும் இல்லை '' — நெப்போலியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தப் பயங்கர இரவினிலே....

இப்பும் மந்தாரமுமான காலை நேரம். அன்று கிழக்கில் சூரியோதயமும் இல்லை; அவற்றின் கிரணங்களும் வெளி வரவில்லை. தான் உதயமாகின்ற கிழக்கு மாகாணம் அழிவுறப்போகின்றதென்ற மனக்கலக்கத்தால் தானும் துன்பக் கடலில் மூழ்கினாற்போல் தனது ஒளிக்கதிர்களை ஒளித்துக்கொண்டான்.

அனைத்துலகத்தையும் படைத்துக் காக்கின்ற இறைவன் மக்கள் துன்பமுறப் போகின்றார்களே என்று எண்ணி விம்மி அழுது கண்ணீர் பெருக்குவதுபோல அன்று பிற்பகல் நாலு மணிவரை அடைமழையும், பெரும் மழையும், காற்றுமாக இருந்தது. வீதிகளிலே சனநடமாட்டம் இல்லை. இஃது இவ்வாறிருக்க எமது கலாசாலையில் ஆசிரிய மாணவர் பட்ட அவதிகளை, பதகளிப்பை, மனக்கலக்கத்தை, சோகத்தை, கரைகாணமுடியாது மூழ்கித் தவித்த துன்பசாகரத்தை எம்போன்றோர்களால் எடுத்தியம்புவது அரியதாகுமேயன்றி எளிதன்று. எளிதன்றாயினும் யான் முயன்றுதரும் கதை கேளீர்.

அன்று காலை ஆறு மணிக்கும் மதியம், பன்னிரண்டு மணிக்கும் செய்தி பரப்பிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தாரும், இந்திய வானொலிச் செய்தி அறிவிப்புக்களும் வங்காள விரிகுடாவில் உயரமுக்கம் தோன்றுகின்றதென்றும், அது ஈழத்தின் கரையோரத் தாழ்வுப் பகுதிகளான மட்டக்களப்பு, அம்பாறை, கிழக்குப்பகுதிகளைத் தாக்கக்கூடுமெனவும் ஐயப்பாட்டுடன் தெரிவித்தன. நாங்கள் கடும் பீதி அடையவில்லை. காரணம் சாதாரண நாட்களில் தென்றல் காற்றை அனுபவித்திருக்கின்றோம். பெரும் காற்று என்றால் நமது ஊரில் வழமையாக வீசும் கச்சான் காற்றுப்போல் இருக்கும் என்று எண்ணியதுதான்.

ஆனால்! நாலு மணியளவில் கடும் மழை பெய்யத்தொடங்கியது. காற்றும் தன் விஸ்வரூபத்தை, அகோர குணத்தை, மெல்லமெல்லக் காட்டத்தொடங்கியது. கலாசாலையிலே நின்ற தேக்குமரம், மற்றும் மா முதலிய மரங்கள் எல்லாம் இடையிடையே பூமியை வீழ்ந்து வணங்குவதுபோலத் தரையிலே மோதி, மோதி மேலே சென்றன. சிறிது நேரத்தில் ஒரு சில மரங்கள் நிரந்தரமாகவே நிலத்தில் படுத்துக்கொண்டன.

இஃது இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது சூறாவளி தன் அசுரவேகத்தைக் காட்டத்தொடங்கியது. இரவு எட்டு மணியிருக்கும் ஊழிக்காலப் பெருங்காற்றைப்போல வீசியது. இராமன் காடேகப்போகின்றான் என்பதற்காக "விரித்தபந்தர் பிரித்ததாமென மீனொளித்தன வானமே" என்று கம்பர் கூறியதைப்போல நாடு கடும் துன்பத்துக்குள்ளாகப்போகின்றது என்பதை முன்கூட்டியே தெரிவிப்பதுபோல செயற்கையான மின்விளக்குகள்கூட ஒழித்தன. எங்கும் ஒரே காரிருள், மழைக்கால இருள், மந்திகூடப் பாயமுடியாத இருள். எதிரே ஒருவர் வந்து மோதினாலும் தெரியாத இருள்.

இவ்வேளையிலே ஆசிரிய மாணவர்களும், அதிபரும், விடுதி மேற்பார்வையாளரும், மெழுகுதிரி வெளிச்சத்தின் உதவியுடனும், லந்தர் விளக்கின் உதவியுடனும், இரவு உணவினை, உண்டபாதி உண்ணாத பாதியாக முடித்துக்கொண்டோம். வயிறெல்லாம் பீதியினால் நிறைந்தமாதிரி இருந்தது. சூறாவளியை எண்ணிப் பயந்து மலசல விமோசனம் செய்தோரும் உண்டு. உணவை முடித்ததும் ஆண்கள், ஆண்கள் விடுதிக்கும், பெண்கள், பெண்கள் விடுதிக்கும் போய்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தோம். குடையும் பிடிக்கமுடியாத நிலையில் கும்மிருட்டிலே ஆண்கள் நனைந்தபடியே விடுதியை நாடிச் சென்றனர். பெண்களுக்கும் அதே நிலைதான். மழைநீர்ச்சாரல் விருந்தைகளையெல்லாம் நனைத்து வெள்ளப்பெருக்காய்க் காட்சி தந்தது ஒரே நடுக்கம். ஒருவரை ஒருவர் கைகளில் பிடித்துக்கொண்டு இவ்விரண்டு பெண்களாக மேல்மாடியை நோக்கிச் சென்றோம்.

இது இங்ஙனமாக நடைபெற முதலாம் நாள் பரீட்சையை முடித்துக் கொண்டு இரண்டாம் நாள் பாடத்திற்காக ஆயத்தம் செய்த இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள் அல்லோல கல்லோலப்பட்டார்கள். மெழுகுவர்த்தியின் உதவியுடன் படிக்க முயல்வோரும், முயன்று தவறுவோரும், மீண்டும் மீண்டும் முயல்வோருமாகத் துன்பப்பட்டார்கள். இவர்களுக்கு வெளிச்சங்கள் செய்து உதவுவதில் முதலாம் வருடத்தினர் ஈடுபட்டுக்கொண்டிருந்தோம். அப்போது தான் பயங்கரச் சத்தங்கள் காது செவிடுபடும்படி கேட்கத்தொடங்கின.

முதலாம் வருடப் பெண்கள் படுத்திருந்த படுக்கையறை மழைநீர் கொட்டப்பட்டு ஒழுக்கால் நனையத்தொடங்கி விட்டது. எல்லோருடைய கட்டில்களிலும் ஒழுகத் தொடங்கியதால் உறங்க முடியாத நிலை. எனவே எல்லோரும் இரண்டாம் வருடத்தினர் உறங்கும் அறையில் வந்து தங்க ஆயத்தமானோம். ஆனால் படுக்கையறைக் கதவுகள் திறக்க முடியாதபடி அடைத்துக்கொண்டன. பின்பு நான்கைந்து பேர் சேர்ந்து கதவினை இழுததுப்பிடிக்க ஒவ்வொருவராகச் சுவரைப் பற்றியவண்ணம் காற்றோடு காற்றாய்த் தள்ளப்பட்டு இரண்டாம் வருடத்தினரின் படுக்கையறைக்கு நனைந்தபடி வந்து சேர்ந்தோம்.

காற்றின் வேகம் குறைந்தபாடில்லை. இருந்த கட்டில்களை நெருக்கிப் போட்டுக் கொண்டு ஒரு கட்டிலுக்கு இருவர் வீதமும், இரண்டு கட்டில்களுக்கு மூவர் வீதமும் அமர்ந்து பயத்தினுல் நடுங்கிக் கொண்டிருந்தோம். அப்போதுதான் அந்தப் பயங்கரம் நடைபெற்றது. சுமார் முப்பது முப்பத்தி ஐந்து ஓடுகள் 'சீலிங்' குடன் சேர்ந்து நொருங்கி எனது கட்டிலின்மேல் விழுந்தது. நல்ல வேளையாக நானும் எனது நண்பியும் குதித்து ஓடித் தப்பிக்கொண்டோம். அருகில் இருந்த சகோதரிகள் அனைவரும் கூக்குரலிட்டுக் கத்தி ஆரவாரித்தனர். ஒரு சகோதரி அவ்விடத்திலேயே மயக்கமடைந்து விழுந்துவிட்டார். அவர் மயக்கமடையக் காரணம் ஓடுகள் விழுந்ததால் அதன்கீழ் இருந்தவர்கள் ஆபத்தில் மாட்டிக்கொண்டார்கள் என்றும் உயிர் பிழைக்கமாட்டாரென எண்ணியதுதான்.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஒரே ஆரவாரம். அழுகைக்குரல்கள். ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக்கொண்டு அழத்தொடங்கிவிட்டார்கள். இயற்கை தன் கோர விளையாட்டைக் காட்டிக் கொண்டே இருந்தது. தொடர்ந்து ஓடுகளும், பலகைகளும், கண்ணுடிகளும், கதவுகளும் நொருங்கிக்கொண்டே இருந்தன. எல்லோரும் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்துக்கொண்டு உடுத்திருந்த இரவுடைகளுடனேயே கீழ்த்தளத்திற்கு விரைந்தோம். ஒறுன்கூடல் மண்டபத்தில் எல்லோரும் இருப்பதற்கு வந்தோம். ஆனுல் பாழாய்ப்போன அந்தச் சூறுவளி எங்கள்மீது எள்ளளவும் இரக்கம் காட்டவில்லையே. கதவுகள் திறக்கமுடியாதபடி மூடிக்கொண்டன. நாலாபக்கமும் இருந்து கண்ணுடித்துண்டுகள், தகரங்கள், பலகைகள் எல்லாம் வந்து வந்து எங்கள்மீது விழத்தொடங்கின. அவற்றிற்கெல்லாம் விலகி, விலகி ஓடி ஓடித் தப்பினேம். இறுதியாக மூவர் கதவை இழுத்துப் பிடிக்க ஒவ்வொருவராக ஒன்றுகூடல் மண்டபத்தில் பாதுகாப்பாக இருந்தோம். கதவினுள் நுழையும்போது ஒரு சகோதரியின் தலையில் காயமும் ஏற்பட்டது.

ஒன்றுகூடல் மண்டபத்தினுள் மேசைகளை அடுக்கிவைத்து அதன்மேல் எல்லோரும் ஏறிக் குந்திக்கொண்டு இருந்தோம். கீழ்த்தரை எல்லாம் நீரால் நிரம்பி வழிந்தது. இரவு ஒன்பதரை மணியள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் புயல் சற்றுத் தணிந்தது. அப்போது தான் ஆண்கள் விடுதியில் இருந்து எங்கள் அதிபரும் சக ஆசிரியச் சகோதரர்களும் வந்து சேரமுடிந்தது. அதன்பின் எல்லோரும் ஒன்றுகூடல் மண்டபத்திலேயே இருந்தோம். மீண்டும் புயல் தன் விளையாட்டைத் தொடங்கியது. கோரப் புயலின் கொடுவேகம் கூடிற்று. யன்னல்கள், கதவுகள் எல்லாம் தானுக மூடப்பட்டு அவைகளின் கண்ணுடிகள் சின்னு பின்னமாயின. ஓடுகள் பறந்தன, கலகலத்து மேல்மாடியிலே கொட்டுண்டன. மழைநீர் உட்புகுந்தது. மரங்கள் முறியும் சத்தம், மக்கள் கூச்சலிடும் சத்தம், மிருகங்கள் பறவைகள் கத்தும் சத்தம், அரோகரா என்று இறைவனை வேண்டும் சத்தம், அலறல் சத்தங்கள் எல்லாமே எம்மைப் பீதிகொள்ளச் செய்தன.

பொழுது விடியும்வரை காத்திருந்தோம். அதிபரின் உத்தரவின்பின் ஒவ்வொருவராக மாடிக்குச் சென்ருேம். அங்கே நாம் கண்டகாட்சி எம்மை அதிரவைத்தது. எல்லோருடைய புத்தக அலுமாரிகளும் கவிழ்ந்து வீழ்ந்துகிடந்தன. மழைநீர் உட்புகுந்து எல்லாம் சேதமுற்ற நிலையில் எம்மைப் பார்த்து அழுவன போலக் காட்சிதந்தன. இவ்வாறே எமது உடைமைகள் யாவும் உடைந்த ஓட்டுத் துண்டுக் குவியல்களால் மூடப்பட்டுக் கிடந்தன. எல்லாப் பொருடகளையும் அழுத கண்ணீருடன் சகோதரர்களின் உதவியுடன் மீட்டுக் கீழ்த்தளத்திற்குக் கொண்டுவந்தோம். அதற்கிடையில் பாதுகாப்பாக இருந்த எல்லா அறைகளிலும் அக்கம் பக்கத்தில் இருந்த அகதிகள் தஞ்சம் புகுந்தனர். இறுதியாக மிஞ்சி இருந்த விஞ்ஞான ஆய்வுகூட அறையில் எமது பொருட்களை வைத்தோம்.

அகதிகள் கூட்டம் கலாசாலை வளவில் எல்லா இடங்களிலும் தஞ்சம் கொண்டனர். அந்த நெரிசலிலே பெண்கள் விஞ்ஞானகூட அறையிலும், ஆண்கள் வாசிகசாலை அறையிலும் மூன்று நாட்களாகக் கதிரைகளில் இருந்தவண்ணம் காலம் கழித்தோம். நிலமை ஓரளவு சீரடைந்ததும் மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் கால்நடையாக அவரவர் இடங்களுக்குச் சென்றடைந்தனர். மலையகப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஒரு லொறியில் தத்தமது ஊருக்குச் சென்றனர். யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் நிலைமை சீராகிப் போக்குவரத்து வசதிகள் ஏற்பட்ட பின்னர் தத்தமது இடங்கட்குச் சென்றனர்.

ஆம்! அன்றையப் பயங்கர இரவு அதாவது ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டு கார்த்திகை இருபத்து மூன்றும் திகதிய இரவு என் வாழ்நாளில் மறக்கமுடியாத பயங்கர இரவுதான்.

''மாவலியின் பேரால்
வயங்குமணி நதியும்
காவும் பொழிலும்
கழிகமுகமும் புள்ளணிந்த
ஏரியும் மல்கி இரத்தினத் தீபமென
ஆசிரியர் போற்றும்
அணிசால் இலங்கையின்''

கிழக்கு, இயற்கையின் கோரத் தாண்டவத்தால் கொடூரமாகத் தாக்கப்பட்டு கூரையிழந்த கட்டிடங்களும், கோபுரங்களும் மயானங்கள் போலக் காட்சிதர வைத்தது அந்தப் பொல்லாத இரவுதானே. மறவேன் ! மறவேன் !! அந்தப் பயங்கர இரவை என் வாழ்நாளில் ஒருபோதும் மறவேன் !!!

**செல்வி ப. கெங்காதேவி,**
**(முதலாம் வருடம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையின்பின் வெற்றிகள்

பாட்டினில் தவழ்கின்ற ராகமாடும்
பட்டத்தில் கட்டிவிட்ட நூலுமாடும்
ஆற்றினில் நீந்துகின்ற மீனுமாடும்
சேற்றினில் மலர்கின்ற மலருமாடும்
காற்றினில் தவழ்கின்ற கொடியுமாடும்
காலமகள் மடியினிலே உயிர்கள் ஆடும் ஆடும்.

கடலினிலே புரண்டுவரும் அலையுமாடும்
படகினிலே அசைகின்ற துடுப்புமாடும்
பார்வையிலே படர்கின்ற காட்சியாடும்
கோர்வையிலே சேர்த்துவிட்ட மணியுமாடும்
மலையினிலே சலசலக்கும் அருவியாடும்
மழைகண்டு மயிலினங்கள் ஆடும் ஆடும்.

அன்பினிலே கனிகின்ற உள்ளமாடும்
பண்பினிலே அண்ணன் தங்கை பாசமாடும்
பண்ணிசைக்கும் பாவலர்கள் பாட்டும் ஆடும்
பாடல்கேட்ட கால்கூட மெல்ல ஆடும்
குத்துவிளக் கசைவினிலே சுடருமாடும்
குழந்தைகண்டு அன்னைமனம் ஆடும் ஆடும்.

தென்றல் வந்தால் சுருண்டிருக்கும் குழல்களாடும்
தேன் உண்ணும் வண்டினங்கள் மகிழ்ந்து ஆடும்
தண்ணிலவின் மீதுவெண் மேகங்களாடும்
தாளம்போடும் கரங்களிலே விரல்களாடும்
கண்ணன் குழலோசையிலே உயிர்களாடும்
கண்ணசைவில் இமை சிலிர்த்து ஆடும் ஆடும்.

நினைவினிலே நித்தம் நித்தம் கனவு ஆடும்
நீளமான கூந்தலிலே மலர்ச்சரங்களாடும்
வயல்களிலே நெற்கதிர்கள் வளைந்து ஆடும்
வளமான எதிர்காலம் உழைப்பில் ஆடும்
வீணையின் நரம்பசைய நாதமாடும்
நாதம் கேட்ட நாகமும் ஆடும் ஆடும்.

விழியினிலே கரைந்திடும் கண்ணீர் ஆடும்
வீணர்கள் வார்த்தையிலே பொய்யும் ஆடும்
கற்பனையில் ஊற்றெடுக்கும் கனவு ஆடும்
காதலர்கள் கூடலிலே ஊடலாடும்
வேதனையின் விளிம்பினிலே வாழ்க்கை ஆடும்
சாதனையின் பின் வெற்றிகள் ஆடும் ஆடும்.

**செல்வி இ. கத்தறின்,**
(முதலாம் வருடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிமகனே

இரவு மணி பதினொன்று. ஊரே அடங்கிவிட்டது. ரவி இன்னும் உறங்கவில்லை. பக்கத்திலே மூன்று நண்பர்கள் மேசையிலே மதுப்போத்தல்கள். எப்படி உறங்குவான் ரவி? ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் கண்ணாடித் துண்டுகளே அவர்கள் என்ன நிலையிலிருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டின. போத்தலில் உள்ள மது படிப்படியாகக் குறைந்து கொண்டு வந்தது.

ரவியின் தந்தை பெரிய முதலாளி. மகனைப் படிக்க வைக்க எவ்வளவோ செலவழித்தார். முடிவு பூஜ்யந்தான். வியாபாரத்தில்சரி முன்னேறட்டும் என ஒரு கடையைப் பொறுப்பாகக் கொடுத்தார். கடை நடத்தும் வேலையுடன் இந்தக் கதையையும் ரவி மறப்பதில்லை. தினமும் இரவில் நண்பர்களுடன் குடியும் கும்மாளமும். குடியே அவனைக் குடித்துவிடும் அளவுக்குப் பழகிவிட்டான்.

பின்னிப்பின்னி வார்த்தைகள் வந்தன. குடித்தது போதும் என்பதைக் காட்ட கிளாஸ் ஒன்றை நிலத்திலடித்தான் ரவி. தட்டுத்தடுமாறி எழும்பினர். ரவியால் நடக்கமுடியவில்லை. எப்படியும் ரவியைக் கடைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டுமென மற்றவர்கள் அணைத்துப் பிடித்துக்கொண்டு நடந்தனர். தெரு நாய்கள் குரைத்தன பயமில்லை இவர்களுக்கு. தட்டுத்தடுமாறி நடந்தவர்கள் அப்படியே நின்றனர். காரணம் தூரத்தே ஓர் உருவம். தெரு விளக்கு அது ஒரு பெண் என்பதை எடுத்துக்காட்டியது. கையில் ஒரு சூட்கேசுடன் அவள் வந்து கொண்டிருந்தாள். ரவியின் பார்வை கூர்மையாகியது. ஏதோ நண்பர்களிடம் கூறினான். மறுப்பார்களா அவர்கள். அப்படியே ரவியை விட்டுவிட்டு முன்னே சென்றனர். தனித்து விடப்பட்ட ரவியால் நிற்கமுடியவில்லை. கண்கள் இருண்டன. தலை கிறுகிறுத்தது. அடியற்ற மரம்போல் விழுந்தான். மற்றவர்களோ அந்தப் பெண்ணை அப்படியே தூக்கிக் கொண்டு வந்துவிட்டனர். எங்கே கத்திவிடுவாளோ என அவளின் வாயில் ஒரு பெரிய கட்டு வேறு. பதறினாள், திமிறினாள். விடுவார்களா? இறுகப் பிடித்துக் கொண்டனர். ரவியை எழுப்பினர். இனி எங்கே ரவி எழும்புவது காலையில்தான் விழிப்பான். ரவியை எழுப்பமுடியாது என்பது அவர்களுக்குப் புரிந்துவிட்டது. ரவி தூங்கிவிட்டாலும் நாங்கள் இல்லையா? அழுதாள் கதறினாள் புழுவாய்த் துடித்தாள். யாரங்கு உதவ. அவளை அங்கேயே விட்டுவிட்டு ரவியைத் தூக்கிக்கொண்டு மறைந்தனர்.

காலையில் தெருவில் ஒரே கூட்டம். யாரோ ஒரு பெண் மிருக வெறிக்குப் பலியாகி இறந்துகிடக்கிறாள் என்று யாரோ கூறவும் ரவியும் பார்க்கச்சென்றான். முண்டியடித்துக்கொண்டு கூட்டத்தினுள் நுழைந்தான். அங்கே ஒரு பெண் பிணமாய்க் கிடந்தாள். அருகே ஒரு சூட்கேஸ். பளிச்செனப் பட்டது அவனது நெஞ்சில். நேற்று இரவு ஒரு பெண் சூட்கேசுடன் - தான் நண்பர்களை ஏவியது. ஒவ்வொன்றாக நினைவுவந்தது. அவளின் முகத்தைத் திருப்பிப்பார்த்தான். ஐயோ மாலதி எனக் கத்திக் கொண்டே அப்பிணத்தைக் கட்டிப்பிடித்துக் கதறினான். ஆமாம் அவள் ரவியின் தங்கை மாலதி. கண்டியில் ஆசிரியையாகக் கடமையாற்றுபவள். அவளுக்கு இரத்தினபுரிக்குத் திடீர் மாற்றம் கிடைத்ததும் தனது அண்ணன் இருக்கும் ஊர் தானே எனத் துணிந்து வந்தவளுக்குப் பஸ் பிந்தியதும் ரவிக்குத் தெரிய நியாயமில்லைதானே.

மறுநாள் பத்திரிகையில் ஒரு பெண்ணின் பரிதாப மரணம் என்ற செய்தியை விட ரவி என்பவர் தன்னைத்தானே சுட்டு இறந்துவிட்டார் என்ற செய்தியைப் பெரிதாகப் போட்டிருந்தார்கள்.

க. முருகையா,
(முதலாம் வருடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1978ம் ஆண்டு கலாசாலையில் நடைபெற்
அதிபர் அவர்கள் வரவேற்புரை



1978ம் ஆண்டு கலாசாலையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் விளையாட்டு வீரனுகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. க. சிவானந்தராஜா (மலைமகள் இல்லம்). பிரதம அதிதி திரு. இ. இராசையா மட்/பாலமீன்மடு மெ. மி. தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் அவர்களிடமிருந்து வெற்றிக்கிண்ணத்தைப் பெறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில்
ரவேற்புரை நிகழ்த்துகின்றார்.



1978ம் ஆண்டு கலாசாலையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் விளையாட்டு வீராங்கனையாகத் தெரிவுசெய்யப்பட்ட செல்வி வி. மகேஸ்வரி (மலைமகள் இல்லம்), பிரதம அதிதி திரு. எம். கந்தப்போடி மட்/மகிழவட்டுவான் அ. த. க. பாடசாலை அதிபர் அவர்களிடமிருந்து வெற்றிக்கிண்ணத்தைப் பெறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த ஆண்டின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள்

1. பயிற்றுப்பட்ட ஆசிரியர்களுக்கான மீள் பயிற்சி.

பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தின்கீழ் மீள் பயிற்சி பெறுவதற்கென எமது கலாசாலைக்கு 1-3-1978ல் இருபத்திரண்டு ஆசிரியர்கள் அனுமதிக்கப்பட்டனர். ஆறுவாரகாலப் பயிற்சிக்குப் பின்னர் இவ்வாசிரியர்கள் பாடசாலைகளுக்கு மீண்டனர்.

2. நெல் அறுவடை.

கலாசாலை விவசாயக் கழகத்தினரால் கலாசாலை வயலில் மேற்கொள்ளப்பட்டிருந்த நெற்சாகுபடி 9-3-78ல் ஆசிரிய மாணவர்களால் அறுவடை செய்யப்பட்டு உடனுக்குடன் சூடடித்து நெல்லாக்கப்பட்டது.

3. மாதிரி வகுப்பறைக் காட்சி.

ஆறுவாரகால மீள் பயிற்சிக்கு வந்த ஆசிரியர்களும், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களும் சேர்ந்து கலாசாலையில் 17-3-78ல் ஒரு மாதிரிப் பாலர் வகுப்பறைக் காட்சியைச் சிறப்பாக அமைத்தனர். இணைப்புப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் இக் காட்சியைப் பார்வையிட்டனர்.

4. விவிலிய கருத்தரங்கு.

கலாசாலைக் கிறிஸ்தவ மன்றம் விவிலிய கருத்தரங்கம் ஒன்றை இரு தினங்கள் நடாத்தியது. இக்கருத்தரங்கில் வண. பிதா. ஜெரோம், வண. பிதா. யேசுதாசன், வண. பிதா. தேவநேசன், வண. பிதா. கென்னடி ஆகியோரும், சமயப் பெரியார்களும், ஆசிரியர்களும் கருத்துரை வழங்கினர். இக்கருத்தரங்கு 31-3-78 தொடங்கி 1-4-78 வரை நடைபெற்றது.

5. புத்தகக் கண்காட்சி

இவ்வாண்டில் கலாசாலையில் புத்தகக் கண்காட்சியொன்று நடைபெற்றது. 'பிரிட்டிஷ் கவுன்சில்' ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக் கண்காட்சியில் ஆங்கிலம் கற்பிப்பதற்கான பல நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. நகர்ப்புறப் பாடசாலை ஆசிரியர்கள் இக்கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

6. புதிர் உண்ணல் விழாவும் சேவை நலம் பாராட்டுதலும்.

விவசாயக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட புதிர் உண்ணல் விழா 3-4-78ல் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவன்று கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி பி. ஜி. காசிநாதர் அவர்களுக்கும், விடுதி உதவி மேற்பார்வையாளராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற திருமதி த. தருமலிங்கம் அவர்களுக்கும் சேவை நலம் பாராட்டிப் பிரியாவிடை விருந்தும் அளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. வள்ளுவர் விழா.

கலாசாலை இலக்கிய மன்றம் 23-5-78ல் வள்ளுவர் விழாவைக் கொண்டாடியது. விழாவில் ஆசிரியர் திரு. என். நடராஜா எம். ஏ. அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். ஆசிரிய மாணவர்களின் கவிதைகளும், சொற்பொழிவுகளும் விழாவை அணிசெய்தன. இவ்விலக்கிய மன்றம் ஆசிரிய மாணவர்களிடையே பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளையும் இவ்வாண்டில் சிறப்பாக நடத்தியது.

8. கல்விச் சுற்றுலா.

இந்த ஆண்டில் இரண்டு கல்விச் சுற்றுலாக்கள் மேற்கொள்ளப்பட்டன. 10-2-78ல் வாழைச்சேனையிலுள்ள கடதாசி உற்பத்தித் தொழிற்சாலைக்கும், பாசிக்குடா கடற்கரைக்கும் சென்றமை முதலாவது சுற்றுலாவாக அமைந்தது. 27-5-78ல் அம்பாறை-கல்லோயா ஆகிய இடங்களுக்குச் சென்றமை இரண்டாவது சுற்றுலாவாக அமைந்தது. இங்குள்ள தொழிற்சாலைகள், மின்சார நிலையம், நீர்த்தேக்கம் என்பனவற்றை ஆசிரிய மாணவர்கள் பார்வையிட்டனர். வாழைச்சேனைக் கடதாசி உற்பத்தித் தொழிற்சாலைக்குச் சென்றமை ஒரு செயற்றிட்ட சுற்றுலாவாக அமைந்தது குறிப்பிடத் தக்கது.

9. சாரணர் - வழிகாட்டிகள் பாசறைகள்.

கலாசாலைச் சாரணர்களும் வழிகாட்டிகளும் வந்தாறுமூலைக்கு அருகாமையிலுள்ள களுவங்கேணி என்ற இடத்தில் மூன்றுநாள் பாசறை அமைத்தனர். இப் பாசறையில் இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களான சாரணர்களுக்கும், வழிகாட்டிகளுக்கும் சின்னம் சூட்டும் வைபவமும் நடைபெற்றது. இப்பாசறை 9-6-78 முதல் 11-6-78 வரை நடைபெற்றது.

10. கலைவாணி விழா.

கலாசாலை இந்து மாமன்றம் இவ்வாண்டின் கலைவாணி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. கலாசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் கூட்டுப்பிரார்த்தனை, கவியரங்கம், சொற்பொழிவுகள் ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. மட்டக்களப்பு வீரகத்திப் பிள்ளையார் கோயில் பிரதம குருக்கள் திரு. கா. சி. சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்கள், மாவட்ட அரசாங்க உதவி அதிபர் திரு. சாம்பசிவஐயர் ஆகியோர் இவ்விழாவில் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்திச் சிறப்பித்தனர்.

11. திருமுறை விழா.

மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றம், நவம்பர் 10ம், 11ம், 12ம் திகதிகளாகிய மூன்று தினங்களில் திருமுறை விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. இவ்விழாவின் பெரும்பகுதி நிகழ்ச்சிகள் இக்கலாசாலை மண்டபத்தில் நடத்தப்பட்டதால், கவியரங்கு, சொற்பொழிவுகள், தேவாரப் பண்ணிசைத்தல் முதலான நிகழ்ச்சிகளில் கலாசாலை ஆசிரிய மாணவர்கள் கலந்து விழாவைச் சிறப்பித்தனர்.

12. சிறப்புச் சொற்பொழிவுகள்.

இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சண்முகதாஸ் அவர்கள் ''கவிதை நயம்'' என்னும் பொருள்பற்றியும், மட்டக்களப்பு மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு. கே. யோகலிங்கம் அவர்கள் ''எகிப்தில் 200 நாட்கள்'' என்னும் பொருள்பற்றியும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்கள். இந் நிகழ்ச்சிகளை முறையே கலாசாலை இலக்கிய மன்றமும், விவசாயக் கழகமும் ஏற்பாடு செய்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. மெய்வல்லுனர் போட்டியும் பூந்தோட்டப போட்டியும்.

இல்லங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுனர் போட்டிகள் 29-6-78ல் கலாசாலை விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றன. இப்போட்டிகளில் மலைமகள் இல்லம் முதலாம் இடத்தையும், திருமகள் இல்லம் இரண்டாம் இடத்தையும், கலைமகள் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன. இப்போட்டியில் பிரதம அதிதிகளாக பாலமீன்மடு மெ. மி, பாடசாலை அதிபர் திரு. இ. இராசையா அவர்களும், மகிழவெட்டுவான் அரசினர் த. க. பாடசாலை அதிபர் திரு. மா. கந்தப்போடி அவர்களும் கலந்துகொண்டனர்.

இவ்வாண்டில் இல்லங்களுக்கிடையிலான பூந்தோட்டப் போட்டியும் ஜுலை மாதப் பிற்பகுதியில் நடைபெற்றது. கலாசாலை முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த இல்லவாரியான பூந்தோட்டங்களின் அரையிறுதி மதிப்பீட்டில் திருமகள் இல்லம் முதலாம் இடத்தையும், கலைமகள் இல்லம் இரண்டாமிடத்தையும், மலைமகள் இல்லம் மூன்றுமிடத்தையும் வகித்தன.

14. சூருவளி.

இவ்வாண்டின் இறுதி ''நிகழ்ச்சியாக'' அமைந்தது நவம்பர் மாதம் 23ம் திகதி வீசிய சூருவளியாகும். இப்பயங்கரச் சூருவளியின் சீற்றத்தினுல் கலாசாலை பலத்த சேதங்களுக்குள்ளாகிய போதும் தெய்வகடாட்சத்தால் விடுதியிலிருந்த கலாசாலை அதிபர், ஆசிரிய மாணவ மாணவியர், விடுதி உதவி மேற்பார்வையாளர், ஊழியர்கள் ஆகிய அனைவரும் காப்பாற்றப்பட்டனர். மறுதினம், கலாசாலை, சூருவளியால் வஞ்சிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான மக்களின் அகதி முகாமாகவும் மாறியது.

'' தூய்மையான எண்ணத்துடன் ஒருவன் பேசினுலும், செயல் புரிந்தாலும் அவனை விட்டு விலகாத நிழல்போல் ஆனந்தம் அவனைப் பின்பற்றிச் செல்கிறது ''
— புத்தர்.

'' துன்பங்கள் நமக்கு உண்மையான சிறந்த ஆசிரியர்கள். ஒரு டெலஸ்கோப் நமக்கு அளிக்கும் ஆராய்ச்சி அறிவைவிட அதிகமான அறிவை ஒரு கண்ணீர்த் துளி நமக்கு அளிக்கிறது ''
— தாகூர்.

'' சில பாத்திரத்திலுள்ள தண்ணீர் பளபளக்கிறது. கடலிலுள்ள தண்ணீர் இருண்டு தோன்றுகிறது. சிறிய உண்மைக்கு விளக்கம் கூறத் தெளிவான வார்த்தைகள் இருக்கின்றன. பெரிய உண்மைக்குப் பெரிய மௌனந்தான் உண்டு ''
— தாகூர்.

'' கர்வமுள்ளவன் கடவுளை இழக்கிறுன். பொருமைக்காரன் நண்பனை இழக்கிறுன். கோபக்காரனே தன்னையே இழக்கிறுன்.
— ஹால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GREEN CAFE - KANDY

(UNDER NEW MANAGEMENT)

Bakers - Confectioners - Caterers

**LOCAL & FOREIGN LIQUOR**

DELICIOUS FOOD AT MODERATE PRICES

TOWNS BEST

**BREAD, ROLLS, BUNS, CAKES, BURIYANIE, FRIED RICE NOODLES AND GOOD PARCEL.**

# GREEN CAFE

No. 2, KUMARA VIDIYA,

KANDY.

Phone : **2456.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ மன்றம் - 1978

## முதலாந் தவணை

ஆண்கள் :

தலைவர் : திரு. மு. நடேசன்.
கல்விச் செயலாளர் : திரு. மா. இராஜகோபால்.
உதவிக் கல்விச் செயலாளர் : திரு. வை. நடனசபாபதி.
விளையாட்டுச் செயலாளர் : திரு. கா. அ. உருத்திரமூர்த்தி.
உதவி விளையாட்டுச் செயலாளர் : திரு. க. நரேந்திரன்.

பெண்கள் :

தலைவி : திருமதி த. சண்முகசிகாமணி.
கல்விச் செயலாளர் : திருமதி செ. அ. காமல் லியோ.
உதவிக் கல்விச் செயலாளர் : செல்வி ப. கெங்காதேவி.
விளையாட்டுச் செயலாளர் : செல்வி சா. சின்னத்தம்பி.
உதவி விளையாட்டுச் செயலாளர் : செல்வி இ. சின்னத்தம்பி.

## இரண்டாந் தவணை

ஆண்கள் :

தலைவர் : திரு. கா. அ. உருத்திரமூர்த்தி.
கல்விச் செயலாளர் : திரு. எஸ். டொமினிக்.
உதவிக் கல்விச் செயலாளர் : திரு.ச. செல்வநாயகம்.
விளையாட்டுச் செயலாளர் : திரு. சீ. தவராஜா.
உதவி விளையாட்டுச் செயலாளர் : திரு. சி. தேவமணி.

பெண்கள் :

தலைவி : செல்வி கா. கனகரத்தினம்.
கல்விச் செயலாளர் : செல்வி இல. மயில்வாகனம்.
உதவி கல்விச் செயலாளர் : திருமதி மே. பி. அந்தோனிப்பிள்ளை.
விளையாட்டுச் செயலாளர் : செல்வி ச. மாரிமுத்து.
உதவி விளையாட்டுச் செயலாளர் : செல்வி ஜெ. கதிரேசன்.

## மூன்றாந் தவணை

ஆண்கள் :

தலைவர் திரு. சீ. தவராஜா.
கல்விச் செயலாளர் : திரு. கா. அ. உருத்திரமூர்த்தி.
உதவி கல்விச் செயலாளர் : திரு. க. கமலானந்தன்.
விளையாட்டுச் செயலாளர் : திரு. கு. ஆனந்தவடிவேல்.
உதவி விளையாட்டுச் செயலாளர் : திரு. இ. கனகசபை.

பெண்கள் :

தலைவி : செல்வி இ. குழந்தைவேல்.
கல்விச் செயலாளர் : திருமதி த. சண்முகசிகாமணி.
உதவி கல்விச் செயலாளர் : திருமதி தா. ம. ரூே. லக்ஷ்மணன்.
விளையாட்டுச் செயலாளர் : செல்வி க. செல்லத்தம்பி.
உதவி விளையாட்டுச் செயலாளர் : செல்வி சுசிலாநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமா மன்றம் - 1978

காப்பாளர் : மேஜர் சு. தருமலிங்கம் அவர்கள் (அதிபர்)
ஆலோசகர் : திரு. அ. வ. பாலசுப்பிரமணியம் அவர்கள் (விரிவுரையாளர்)
தலைவர் : திரு. கு. ஆனந்தவடிவேல்
துணைத் தலைவர் : திரு. செ. துரைநாயகம்.
செயலாளர் : செல்வி சா. சின்னத்தம்பி.
துணைச் செயலாளர் : செல்வி மு. லோகேஸ்வரி.
பொருளாளர் : திரு. மா. இராஜகோபால்.

ஆட்சிமன்ற உறுப்பினர்கள் :

திரு. மு. நடேசன், செல்வி ச. மாரிமுத்து
செல்வி இரா. சின்னத்தம்பி.

இவ்வாண்டின் முதல் முயற்சியாக எமது மன்ற உறுப்பினர்கள் அமிர்தகழியில் உள்ள ''அருள் சத்தியசாயிபாவா'' குருசாந்தி நிலையத்தில் 7-3-78ல் நடைபெற்ற சிவராத்திரி விழாவில் கலந்து பல உதவிகளும் புரிந்து பஜனையிலும் ஈடுபட்டனர்.

பின்னர் 8-10-78 பி. ப. 4-30 மணியளவில் பிரம்மஸ்ரீ. கா. சி. சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்களால் முறைப்படி கும்பம் வைக்கப்பட்டு வாணி விழா சிறப்பாக ஆரம்பித்துவைக்கப்பட்டது. அவ்விழாவில் ''பெண் தெய்வம்'' என்னும் பொருள்பற்றி அவரால் சிறப்புச் சொற்பொழிவும் ஆற்றப்பட்டது. 9ந் திகதி மாலை கூட்டுப் பிரார்த்தனையும் பூசையும் சிறப்பாக நடைபெற்றது.

10ந் திகதி ஆசிரிய மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையுடன் விழா ஆரம்பமாகியது. அன்றைய தினம் மட்டக்களப்பு உதவி அரசாங்க அதிபர் (மண்முனை வடக்கு) திரு. ப. சாம்பசிவ ஐயர் அவர்களால் ''சக்தி வழிபாடு'' என்னும் பொருள் பற்றிச் சிறப்பான சொற்பொழிவு ஒன்று ஆற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து கலாசாலை ஆசிரிய மாணவிகளான செல்விகள் ம. வைத்திலிங்கம், நி. பொன்னையா ஆகியோரால் மெல்லிசை விருந்தளிக்கப்பட்டது. அத்துடன் அன்று கிழக்குப் பிராந்தியக் கல்வி அலுவலகத்தினரால் நடாத்தப்பட்ட வாணி விழாவிலும் எமது ஆசிரிய மாணவிகள் கூட்டுப் பிரார்த்தனையில் கலந்து சிறப்பித்தனர்.

11ம் திகதி மு. ப. 10 மணியளவில் கூட்டுப் பிரார்த்தனையுடன் வாணி விழா ஆரம்பமானது. அன்று கவிதை அரங்கு விரிவுரையாளர் திரு. ஆ. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஏற்கனவே இலக்கிய மன்றத்தினரால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட மூவரின் கவிதைகள் அரங்கேற்றமும் இடம்பெற்றது. அடுத்து, பட்டிமன்ற நிகழ்ச்சியாக ''கலைத்திட்டத்தில் சமயம் கட்டாய பாடமாக்கப்படவேண்டும் — கட்டாய பாடமாக இருக்கத் தேவையில்லை'' என்னும் பொருள்பற்றி ஆசிரிய மாணவர்களால் விவாதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பூசையும், கும்பம் சொரிதலும் நடைபெற்றது. பி. ப. 1-00 மணியளவில் விழா இனிது முடிவுற்றது.

அன்றையதினப் பட்டிமன்ற நிகழ்ச்சியில் வாதிகளாகத் திருவாளர்கள் மா. கணபதிப்பிள்ளை, இ. கனகசபை, க. நரேந்திரன் ஆகியோரும், பிரதிவாதிகளாகத் திருவாளர்கள் வை. நடனசபாபதி, ஏ. தேவராஜா, மு. இராமையா ஆகியோரும் கலந்துகொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று நடைபெற்ற கவிதையரங்கில் "தொண்டாற்றவேண்டும் தொடர்ந்து" என்னும் பொருள்பற்றி திருவாளர்கள் க. முருகையா, செ. துரைநாயகம், எஸ். முத்துக்கருப்பன், மா. கணபதிப்பிள்ளை, வை. நடனசபாபதி, செல்வி ப. கெங்கா தேவி ஆகியோர் தங்கள் கவிதைகளை அரங்கேற்றினர்.

இம்மன்றம், இவ்வாண்டு நிகழ்ச்சிகளைச் சிறப்புற நடத்த எமக்கு உதவியும் ஆதரவும் நல்கிய அனைவருக்கும் மன்றத்தின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்."

**செல்வி சா. சின்னத்தம்பி,**
செயலாளர்.

---

# கிறிஸ்தவ மாணவ மன்ற அறிக்கை

காப்பாளர் : திரு. சு. தர்மலிங்கம் (அதிபர்) அவர்கள்.
ஆலோசகர் : திருமதி பி. ஜி. காசிநாதர் (விரிவுரையாளர்) அவர்கள் (31-3-78 வரை)
தலைவர் : திரு. அ. இருதயநாதன்.
செயலாளர் : திருமதி அ. ரெ. போல்.
பொருளாளர் : செல்வி அ. வேதநாயகம்.

செயற்குழு உறுப்பினர்கள் :
திருவாளர்கள் எஸ். டொமினிக், எஸ். எம். ஜோன்சன்.
திருமதிகள் டீ. எம். ஆர். லட்சுமணன், கா. வியனகே.
சகோதரி யோன் ஒப் ஆர்க்.

இந்த அறிக்கையில் இடம்பெறும் முதல் நிகழ்ச்சி சென்ற ஆண்டு 1977ல் இறுதியில் நடைபெற்ற நத்தார் விழாவாகும். இதில் கருத்துரைகள், கலை நிகழ்ச்சி என்பன இடம்பெற்றன. இறை வணக்கத்துடன் ஆரம்பமாகி சுவிசேஷம், அருளுரை போன்றவற்றில் மெருகூட்டப்பட்டு வண. ஆர். எஸ். லோப் அடிகளாரின் ஆசீர் வாதத்துடன் இனிதே முடிவடைந்தது.

1978ம் ஆண்டு ஆரம்ப நிகழ்ச்சியாக விவிலிய கருத்தரங்கு இரு தினங்கள் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. முறையே இவை வண.எஸ். தேவநேசன், வண. இம்மானுவேல் யேசுதாசன், வண. ஜோன் கெனடி, பீ. டி. வண. டொ. சாமிநாதன் ஆகியோரால் சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன.

28-5-78ல் மட்டக்களப்பு தாண்டவன்வெளி வியாகுலமாதா தேவாலயத்தில் வணக்கமாதா 'நோவினை' நடத்தினோம். எமது மன்றத்துக்கு ஆலோசனை கூறி வழி நடத்திய அதிபர் அவர்கட்கும், ஆலோசகர் - திருமதி பி. ஜி. காசிநாதர் அவர்கட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும், பாடகர்களுக்கும், பயிற்சி அளித்து உதவிய சங்கீத விரிவுரையாளர் திருமதி எஸ். கனகசபை அவர்களுக்கும், திரு. அமல்ராஜ் அவர்களுக்கும், சகல நிகழ்ச்சி களிலும் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

பல்லாண்டு காலம் கிறிஸ்தவ மாணவ மன்றத்தின் ஆலோசகராக அரும்பணி புரிந்து ஓய்வுபெற்ற எங்கள் போதனாசிரியர் திருமதி பி. ஜி. காசிநாதர் அவர்கள் சேவையை நன்றியுடன் நினைவுகூறுகின்றோம். இறைவன் இன்னருள் என்றும் அவருக் குக் கிடைப்பதாக. எங்கள் கிறிஸ்தவ மன்றத்திற்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகட்டும்.

திருமதி அ. ரெ. போல்,
செயலாளர்.

---

# விவசாயக் கழக அறிக்கை

காப்பாளர் : மேஜர் சு. தருமலிங்கம் (அதிபர்) அவர்கள்.
ஆலோசகர் : திரு. ஆ. சுந்தரலிங்கம் (விரிவுரையாளர்) அவர்கள்.
தலைவர் : திரு. கே. சிவானந்தராஜா.
செயலாளர் : திரு. ஏ. தேவராஜா.

செயற்குழு அங்கத்தவர்கள் :

திரு. மா. இராஜகோபால் திரு. ச. சுந்தரம்பிள்ளை
செல்வி இ. குழந்தைவேல் திருமதி அ. ரெ. போல்
திருமதி எஸ். நடராஜா.

எங்கள் விவசாயக் கழக அங்கத்தவர்கள் அனைவரும் 9-3-78ல் எமது கலா சாலை வயலில் அறுவடையை மேற்கொண்டார்கள். அறுவடை செய்த அன்றே நெல் வேறு, வைக்கோல் வேறாகப் பிரித்தெடுத்த பெருமை எமது அங்கத்தவர்களையே சாரும். 3-4-78ல் புதிர் உண்ணும் விழாவைக் கொண்டாடியது. இவ்விழாவிற்குப் பிரதம அதிதியாகத் திருமதி பி. ஜி. காசிநாதர் அவர்கள் கலந்துகொண்டார்கள். அத்தோடு திருமதி தருமலிங்கம் விடுதி மேற்பார்வையாளர் அவர்களும், இணைப்புப் பாடசாலை அதிபர்களும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள்.

ஜூன் மாத ஆரம்பத்தில் முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து தோட்ட வேலையை ஆரம்பித்தார்கள். இதைச் சிறப்புற நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காக அங்கத்தவர்களைத் திருமகள், கலைமகள், மலைமகள் என மூன்று இல்லங்களாகப் பிரித்து செயல்பட்டார்கள். மூன்று பிரிவுகளி லும் புசிட்டாவோ, புடோல், வெண்டி, பாகல், பயற்றை என்னும் பயிர் வகைகள் பயிரிடப்பட்டன. தோட்டத்தில் உழைப்பிற்கு ஏற்ற நல்ல பலன் கிட்டியது. அதில் பெரும்பகுதியைக் கலாசாலை உணவு விடுதிக்கே வழங்கினார்கள். அத்தோடு ஏற்கனவே எமது மன்றத்தால் நாட்டப்பட்ட முருங்கை, வாழை என்பன எமக்குப் பெரும் விளைச்சலைத் தந்துகொண்டிருக்கின்றன.

எமது மன்றம் ஒட்டு மாங்கன்று உற்பத்தியில் பெரு முயற்சிகொண்டு உழைத்து, அதில் பெரும் வெற்றியும் ஈட்டியுள்ளது. இப்பொழுது அம்பலவி, கறுத்தக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பான் என்னும் கன்றுகள் நடுகைக்கு ஆயத்தமாக இருக்கின்றன. 1973ம் ஆண்டில் நாட்டிய மாங்கன்றுகள் இப்பொழுது அதிக பிரயோசனத்தைத் தரும் நிலையைப் பெற்றுள்ளன.

இம்முறை எமது முதலாம் வருட ஆசிரிய மாணவர்கள் மட்டுமே வயல் முழுவதையும் கொத்திப் பண்படுத்தி அக்டோபர் 27ம் திகதி B. G. 94-1 என்ற வெள்ளை அரிசி இன நெல்லை விதைத்துள்ளார்கள். அத்தோடு காய்கறிப் பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டு கத்தரி, தக்காளி, வெண்டி, புசிட்டாவோ, பயற்றை, புடோல், பாகல், மரவள்ளி என்பனவும் பயிரிட்டுள்ளார்கள். கலாசாலை வளவு முழு வதும் மா, பப்பாளி, வாழை என்பனவும் அழகுற நாட்டியுள்ளார்ாள்.

கழகம் அங்கத்தவர்களிடையே உற்சாகத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு பூந்தோட்டப் போட்டியை ஏற்படுத்தியது. அதற்கு நடுவர்களாக திரு. எஸ் அன்றியாஸ் (C. E. O), (P. E.) அவர்களும், ஜனப் எம். எஸ். ஏ. அஸீஸ் (Dip-in-Art) அவர்களும், செல்வி தேவராணி சிவசுப்பிரமணியம் (ஆசிரியை) அவர்களும் கடமையாற்றினர்கள். அவர்கள் மூவருக்கும் எங்கள் கழகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் கூறிக்கொள்கின்ருேம்.

இப்போட்டியில் திருமகள், கலைமகள், மலைமகள் முறையே முதலாம், இரண்டாம், மூன்ரும் இடங்களைப் பெற்றனர். எமது கலாசாலை வளவை ஒரு பூஞ்சோலையாக மாற்றி அமைக்கப் பலவகையான பூக்கன்றுகளையும், பலநிற ''போகன் விலா'' கன்றுகளையும், நிழல் தரும் மரங்களையும் உண்டாக்கி பல இடங்களிலும் நாட்டுவதோடு பூந்தோட்டத்தைக் கண்ணுங் கருத்துமாகப் பாதுகாத்து ஆலோசனை கூறிவரும் எமது பெண்கள் விடுதி மேற்பார்வையாளர் செல்வி ஜெ. சு. இராசையா அவர்களைப் பாராட்டுவதோடு நன்றியறிதலையும் கூறிக்கொள்கின்ருேம். அதேபோல் எங்கள் முயற்சிகளுக்குக் கேட்கும்பொழுதெல்லாம் ஆலோசனை கூறி ஹாஸ்யமாகப் பேசி ஆதரவு நல்கும் எமது ஆண்கள் விடுதி மேற்பார்வையாளர் திரு. சி. சா. இராசதுரை அவர்கட்கும் எங்களின் உளங்கனிந்த நன்றியைக் கூறிக்கொள்கின்ருேம்.

இக்கழகம் பயிர்ச் செய்கையில் மட்டுமல்ல அறிஞர்களின் கருத்துக்களையும் வழங்க ஏற்பாடு செய்தது. விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு. கே. யோகலிங்கம் அவர்களை வரவழைத்து ''எகிப்தில் 200 நாட்கள்'' என்ற பொருள்பற்றி கருத்துரை வழங்க ஆவனசெய்து கழகத்தைச் சிறப்பித்தது. எங்கள் அழைப்பைஏறு ஏற் வருகைபுரிந்து நல்லபல அரிய கருத்துக்களை வழங்கிய அன்னருக்கும் எமது நன்றி உரித்தாகட்டும்.

மேலும் எமது கழகம் அடுத்தாண்டின் முற்பகுதியிலே கோழி வளர்ப்பை மேற்கொள்வதற்காக முழுமுயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இக்கழகம், விரிவுரையாளர் திரு. ஆ. சுந்தரலிங்கம் அவர்களின் அயராத உழைப்பாலும், விடாமுயற்சியாலும், தன்னலமற்ற சேவையாலும், அதிபரின் பூரண ஒத்துழைப்பாலும், அங்கத்தவர்களின் கடும் உழைப்பாலும் பூரண வெற்றி ஈட்டியுள்ளது எனலாம். இவர்கள் அனைவருக்கும் கழகத்தின் சார்பில் நன்றியைக் கூறிக் கொள்கின்றேன்.

விவசாயத்தை ஏட்டுக் கல்வியோடு மட்டுமல்லாமல் எமது கலாசாலையில் செயல்மூலம் கற்பதனல் அனைவரும் நேரடி அனுபவத்தில், பயிர்களை உண்டாக்கும் முறை, அதன் நோய்கள், மருந்து வகைகள், செடிகளின் வாழ்க்கை வட்டம், செடிகளின் தன்மை, பசளை வகைகள் என்பனபோன்ற பல விடயங்களைத் தாமே அறிந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள். இம்மாதிரியான அரிய சேவை செய்து வரும் எங்கள் விவசாயக் கழகம் நீடூழி வளரவேண்டும் என நல்லாசி கூறி விடை பெறுகின்றேன். வணக்கம்.

ஏ. தேவராஜா,
செயலாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமகள் இல்லம்

தலைவர் : திரு. க. சிவானந்தராஜா
உப தலைவர் : திருமதி த. சண்முகசிகாமணி
செயலாளர் : திரு. க. அ. உருத்திரமூர்த்தி
உப செயலாளர் : செல்வி க. கெங்காதேவி
பொருளாளர் : திரு. க. கமலானந்தன்
உப பொருளாளர் : திருமதி அ. றெ. போல்.

அங்கத்தவர்கள்

திரு. ஏ. இருதயநாதன்
திரு. க. முருகையா
திரு. எம். கணபதிப்பிள்ளை
திரு. எஸ். மனுவல்
திரு. த. ஞானப்பிரகாசம்
திரு. இ. கனகசபை
திரு. எஸ். சிவநேசன்
திரு. எம். உருத்திரன்
திருமதி வி. சதாசிவம்
செல்வி வி. மகேஸ்வரி
செல்வி பி. திலகவதி
செல்வி எஸ். சிவகாமி
செல்வி எம். லோகேஸ்வரி
சகோதரி மாரி இனிட்
திருமதி வி. இராஜேந்திரம்
திருமதி கே. இராமமூர்த்தி
செல்வி எஸ். ரூத்
செல்வி எஸ். செல்வேஸ்வரி
திருமதி எஸ். சோமசுந்தரம்
திருமதி எல். இரகுநாதன்
செல்வி மே இ. பிலிப்
திருமதி வி. பாக்கியதேவன்
செல்வி ஏ. வேதநாயகம்
திருமதி என். இரத்தினசபாபதி
திருமதி என். யோகமங்களம்
திருமதி கு. குணரத்தினம்

# திருமகள் இல்லம்

தலைவர் : திரு. கு. ஆனந்தவடிவேல்
உப தலைவர் : செல்வி ச. மாரிமுத்து
செயலாளர் : திரு. சீ. தவராஜா
உப செயலாளர் ; திருமதி டி. எம். ஆர். லக்ஷ்மணன்
பொருளாளர் : திரு. க. தம்பிராசா.

அங்கத்தவர்கள்

திரு. க. விஞயகமூர்த்தி
திரு. வை. நடனசபாபதி
திரு. ச. செல்வநாயகம்
திரு. செ. துரைநாயகம்
திரு. எம். கனகரத்தினம்
திரு. அ. கனகரத்தினம்
திரு. எம். ஜோன்சன்
திரு. க. தேவமணி
திருமதி இ. புவாட்
திருமதி காமல் லியோ
திருமதி ச. சீவரெத்தினம்
செல்வி கா. கனகரெத்தினம்
திருமதி சா. நடராஜா
செல்வி து. பூபதி
செல்வி ஆர். கத்தரின்
செல்வி ம. வைத்திலிங்கம்
செல்வி பொ. இரஞ்சிதம்
திருமதி ருக்மணி ராஜு
திருமதி டி. எல். எம். இராசையா
சகோதரி. மேரி ஜோன் ஒவ் ஆர்க்
செல்வி ரு. கிருஷ்ணசாமி
செல்வி எல். சபாபதி
செல்வி க. கலைச்செல்வி
செல்வி ஞா. வசந்தி
செல்வி மேரி மரியசெல்வம்
திருமதி ஹி. கு. ஜோன்சன்
செல்வி பி. கமலாதேவி
திருமதி ஆர். சிவபாலன்
செல்வி என். பொன்னையா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமகள் இல்லம்

தலைவர் ; திரு. மு. நடேசன்
உப தலைவர் : செல்வி சா. சின்னத்தம்பி
செயலாளர் : திரு. ஸ். டொமினிக்
உப செயலாளர் : செல்வி இ. குழந்தைவேல்
பொருளாளர் : திரு. மா. இராஜகோபால்.

அங்கத்தவர்கள்

திரு. கே. அண்ணாமலை
திரு. எஸ். முத்துக்கறுப்பன்
திரு. எஸ். சுந்தரம்பிள்ளை
திரு. ஏ. தேவராஜா
திரு. கே. நரேந்திரன்
திரு. வே. நடேசன்
திரு. எம். ராமையா
திரு. ச. சதானந்தன்
செல்வி ச. செல்லத்தம்பி
செல்வி லெ. மயில்வாகனம்
செல்வி எஸ். இராஜேஸ்வரி
செல்வி எம். கனகேஸ்வரி
செல்வி எல். என். துரைராஜா
செல்வி எஸ். நாதன்
செல்வி ஜே. கதிரேசன்
செல்வி பி. முத்தையா
செல்வி பி. அருணைசலம்
செல்வி ஜி. ஜே. ஏபிரகாம்
செல்வி பி. சதாசிவம்
செல்வி எஸ். இராசையா
திருமதி எம்.பி. அந்தோனிப்பிள்ளை
திருமதி எம். முத்துக்கறுப்பன்
திருமதி எஸ். மாயழகு
திருமதி ச. தேவராஜா
திருமதி ஏ. ஏ. ஏ. சண்முகவேல்

'' ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே – நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் – இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?''

'' வையகம் காப்பவ ரேனும் - சிறு
வாழைப் பழக்கடை வைப்பவரேனும்
பொய்யக லத்தொழில் செய்தே - பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர் ''

— பாரதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1978ம் ஆண்டு ஆசிரிய பயிற்சியை முடித்து வெளியேறுவோர்

1. திரு. கு. ஆனந்தவடிவேல், பெரியகல்லாறு-2, கல்லாறு.
2. திரு. மா. இராஜகோபால், மெயின் வீதி, செங்கலடி.
3. திரு. கா. அ. உருத்திரமூர்த்தி, மூதூர்-7, மூதூர்.
4. திரு. க. சிவானந்தராஜா, கல்முனை-3. கல்முனை.
5. திரு. ஸ். டொமினிக், மூதூர்-7, மூதூர்.
6. திரு. சீ. தவராசா, பெரிய கல்லாறு–1, கல்லாறு.
7. திரு. க. தம்பிராசா, 1ம் குறிச்சி, தம்பிலுவில்.
8. திரு. மு. நடேசன், பெரியகல்லாறு-1, கல்லாறு.
9. திரு. க. விநாயகமூர்த்தி,
   அனுமார் வீதி, நொச்சிமுனை, மட்டக்களப்பு.
10. திரு. அ. இருதயநாதன், தண்ணீர் கிணற்று வீதி,
    பாலமீன்மடு, மட்டக்களப்பு.
11. செல்வி கா. கனகரெத்தினம்,
    2ம் வட்டாரம், கட்டைபறிச்சான், மூதூர்.
12. செல்வி இ. குழந்தைவேல்,
    7ம் வட்டாரம், கட்டைபறிச்சான், மூதூர்.
13. திருமதி வி. சதாசிவம், கோவில் வீதி, திருக்கோவில்.
14. திருமதி இ. சண்முகசிகாமணி,
    231/2, பிரதான வீதி, திருகோணமலை.
15. செல்வி சா. சின்னத்தம்பி, விஷ்ணு வீதி, குருக்கள்மடம்.
16. திருமதி ச. சிவரெட்ணம், பாடசாலை வீதி, கிரான்.
17. திருமதி இ. புவாட், 37/7, எம். ஸி. குவாட்டஸ்,
    எல்லை வீதி, மட்டக்களப்பு.
18. செல்வி க. செல்லத்தம்பி,
    அனுமார் வீதி, நொச்சிமுனை, மட்டக்களப்பு.
19. திருமதி அ. ரெ. போல், 231/2, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
20. திருமதி லெ. கதிர்காமநாதன்,
    6ம் வட்டாரம், சாம்பல்தீவு, திருகோணமலை.
21. செல்வி ச. மாரிமுத்து, கூட்டாம்புளி, தம்பலகமம்.
22. திருமதி எஸ். ஏ. காமல் லியோ,
    5, நகரசபை இல்லம், போல்ஸ் வீதி, புத்தளம்.
23. செல்வி வி. இராசேந்திரம், 1ம் வட்டாரம், கிளிவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் விரிவுரையாளர்களுடன் முதலாம், இர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரண்டாம் வருட, பயிற்சி ஆசிரியர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පුස්තකාලය
1979 නොවැ 26

334438

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநாகரீக நங்கையர்



கண்ணையும் கருத்தையும் கவரும்

அசல்

தங்க நகைகளுக்கு

சிறந்த இடம்

# லிப்ரா ஜுவலர்ஸ்

205, லோவர் வீதி,

பதுளை.

அன்பளிப்புக்குகந்த எவர்சில்வர் பாத்திரங்களும்
பெற்றுக்கொள்ளலாம்.


தொலைபேசி : **471**.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**In tune with the times ... ... ...**

PRINTING IN THE WAY YOU WANT IT !

MODERN METHODS ON MODERN MACHINES
WITH MODERN STANDARDS
OF STYLE AND TECHNIQUE !!




FOR QUALITY AND REAL FINE JOB
BRING YOUR PRINTING REQUIREMENTS

TO

# CATHOLIC PRESS,

**18, Central Road, Batticaloa.**

Phone : **364**


Printed at the Catholic Press, Batticaloa and Published by the Principal,
Government Training College, Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org